சின்னமகிபன்

# குளுவ நாடகம்



டாக்டர் ஏ. என். பெருமாள்

AN 765

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சின்ன மகிபன்
# குளுவ நாடகம்

DR. T. P. M. LIBRARY, MADURAI KAMARAJ UNIVERSITY

டாக்டர் ஏ. என். பெருமாள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES.
அடையாறு, சென்னை—600020.

# *BIBLIOGRAPHICAL DATA*

| | |
|---|---|
| Title of the book | — *CIṈṈA MAKIPAṈ KUḶUVA NĀṬAKAM* |
| Editor | — DR. A. N. PERUMAL<br>Associate Professor<br>International Institute of<br>Tamil Studies, Adaiyaru,<br>Madras-600 020 |
| Publication Number | — 14 |
| Language | — Tamil and English |
| Edition | — First |
| Date of Publication | — 19—2—1980 |
| Copyright | — International Institute of Tamil Studies |
| Paper used | — 16 kg. Double Demy<br>Offset Printing |
| Size of the book | — 22.5 × 18.5 c.ms. |
| Printing types used | — 10, 18 points |
| Number of pages | — 156 |
| Number of Copies Printed | — 1200 |
| Price | — Rupees Five, Rs. 5/- |
| Printers | — Novel Art Printers,<br>Madras-600 014.<br>Phone No: 82731 |
| Binding | — Card Board |
| Artist | — Amudhone |
| Publisher | — International Institute of<br>Tamil Studies, Adyar,<br>Madras-600 020. |
| Subject | — An Intensive study of Kuḷuva Nāṭakam. |

# அணிந்துரை

**ம.பொ. சிவஞானம்**

**தலைவர்**

**தமிழ்நாடு சட்டமன்ற மேலவை**

முத்தாண்டிப் புலவர் படைத்த "சின்ன மகிபன் குளுவ நாடகம்" என்னும் சிறிய செய்யுள் இலக்கியத்தை எடுத்துக்கொண்டு, அரிய முறையில் ஆராய்ந்துள்ளார் டாக்டர் ஏ. என். பெருமாள். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது பழமொழியல்லவா! ஆசிரியர் பெருமாள் இதற்கு முன்னும் பல ஆராய்ச்சி நூல்களைப் படைத்துள்ளார். அந்தப் பட்டியலிலே இதையும் சேர்த்துள்ளார்.

"குளுவ" என்னும் சொல்லைச் சுவைபட ஆராய்கின்றார் ஆசிரியர். 'குளுவ'த்திற்கும் 'குறவஞ்சி'க்கும் உள்ள தொடர்பை ஆராயுமிடத்து, மலைவாழ் மக்களோடு சேர்ந்து வளர்ந்த இசை இலக்கியங்களை நம்முடைய நினைவுக்குக் கொண்டு வருகிறார்.

சின்ன மகிபன் குளுவ நாடகத்தில் வரும் சுவையான பகுதிகளை எடுத்துக்காட்டி, இலக்கிய ரசிகர்களுக்கு விருந்து வைத்திருக்கிறார். இந்த நாடக இலக்கியத்தின் தலைவனான சின்னமகிபனை வேறுபல காப்பிய-சரித்திர நாயகர்களோடு ஒப்பிடும் இடங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். பணவிடு தூது போன்ற வேறு சிற்றிலக்கியங்களோடும் இணைத்துக்காட்டி இதன் சிறப்பை விளக்கும் இடம் சுவையாக உள்ளது.

சின்ன மகிபன் குளுவ நாடகம் பற்றிய தமது ஆராய்ச்சியை முதலில் வைத்து, அடுத்து, அந்த நாடக நூலைத் தந்துள்ளார். நாடகத்தின் பாத்திரங்களாகவும்,

உவமைப் பாத்திரங்களாகவும் வருவோரைப்பற்றியதான ''விளக்கம்'' என்னும் பகுதியை இறுதியிலே வைத்துள் ளார். இவற்றுக்கிடையில் 14 பக்கங்களில் இந்நாடகத் தின் சிறப்பை ஆங்கிலத்திலும் விவரித்துள்ளார்.

பெரும் புலவரான டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்களின் தமிழ்நடை, தமிழில் ஓரளவே புலமையுள்ள வர்களும் படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது. அது, பண்டித நடையும் அல்ல; பாமர நடையும் அல்ல. ''பழகு தமிழ்'' என்றே சொல்லலாம்.

சின்ன மகிபன் நாடகத்தை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்த முன்வந்த ஆசிரியரைப் பாராட்டு கிறேன்.

இக் குளுவ நாடகம் இசைப்பாடல்களையும் கொண் டுள்ளது. சந்த வேறுபாடுகள் நம்மைக் கவர்கின்றன. தொடக்கத்திலுள்ள காப்புச் செய்யுளும், இறுதியிலுள்ள வாழ்த்துச் செய்யுளும் இந்நாடக நூலை இயற்றிய முத்தாண்டிப் புலவரின் புலமைக்கு மிகச் சிறந்த எடுத் துக்காட்டாக அமைந்துள்ளன.

டாக்டர் ஏ. என். பெருமாள் தந்துள்ள ஆய்வுரை யும், விளக்கவுரையும் சின்ன மகிபன் நாடகத்தை நன்கு சுவைக்க உதவி புரிகின்றன. அவற்றைத் தந்த அறிஞரை மீண்டுமொருமுறை பாராட்டுகின்றேன்.

ம. பொ. சிவஞானம்

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 9.
15—2—1980

# முன்னுரை

தமிழக அரசின் விருப்பத்துக்கு இணங்க இவ்வாண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்நாடு கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்களால் "சுவடியியல்" தொடங்கப்பெற்றது. இதுவரை பதிப்பிடப் பெறாத ஓலைச் சுவடிகளை அச்சிட்டு வெளியிடும் பணியை நிறுவனம் ஏற்று அதற்கான ஆக்கச் செயல்களில் ஈடு பட்டுள்ளது. முதன் முதலாக 'சின்ன மகிபன் குளுவ நாடகம்' ஏட்டுச் சுவடியை இணைப்பேராசிரியர் டாக்டர் ஏ. என். பெருமாள் எழுதியுள்ள ஆய்வுரை, விளக்கவுரைகளுடன் தனது பதினான்காவது வெளியீடாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகிறது.

ச. வே. சுப்ரமணியன்
இயக்குநர்

அடையாறு
சென்னை-20
15—2—1980

# என்னுரை

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் சுவடியியல் பிரிவைத் தொடங்கி அதன் மூலம் இதுவரை வெளிவராத சுவடி நூல்களை அச்சிட்டு வெளியிட முடிவு செய்யப் பெற்றுள்ளது. அதே சமயம் திருவான்மியூர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையச் சுவடிக் காப்பகத்திலுள்ள 'சின்ன மகிபன் குளுவ நாடகம்' என்ற நூலை அறிமுகப்படுத்தும் பொறுப்பை நூலகத்தினர் என்னிடம் ஒப்படைத்திருந்தனர். அதே நூலை நல்ல முறையில் விரிவான ஆய்வுரை விளக்கவுரைகளுடன் நிறுவனத்தின் சார்பில் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்ரமணியன் விரும்பினார்கள்.

ஏட்டுச் சுவடியிலிருந்து பெயர்த்து எழுதியவற்றைக் குளுவ நாடக அமைப்பைக் கருத்தில் கொண்டு பாடலுருவில் செம்மைப் படுத்தி எழுதுவதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. பல தொடர்களும் சொற்களும் பொருளறிய முடியாத அளவுக்குச் சிதைந்தும் வழுவுற்றும் காணப்பட்டன. அவற்றைத் திரும்பவும் ஏட்டுச் சுவடியுடன் ஒப்பிட்டுச் சரிசெய்ய வேண்டியநிலை ஏற்பட்டது. அப்பொழுது அந்நூலகக் காப்பாளர் பாலகவி மு. கோ. இராமன் அவர்கள் பெரிதும் துணையாக நின்றார்கள். அவர்களுடைய சுவடி படிக்கும் ஆற்றலும் வழுவகற்றிக் காணும் அறிவும் இந்நிலையில் மிகச் சிறப்பாக உதவின. இருள் படலமாகத் தோன்றிய பகுதிகள் ஒளிக்காட்சியாக விளங்கின.

சுவடியில் சில இடங்கள் சிதலுக்கு இரையாகிப் பாடல்களை இடையறச் செய்தன. அத்தகைய இடங்களில் தகுந்த சொற்கள் அல்லது தொடர்கள் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறு நிரப்பப் பெற்ற இடங்கள் பாடல்களுக்கிடையில் பிறைக் கட்டுள் பொருத்தப் பெற்றுள்ளன. குறிப்பிட்ட இடத்தை மையமாகக் கொண்டு எழுதப்பெற்ற இந்நூலில் சில தொடர்களுக்கு விளக்கங்காண அந்த இடத்தைச் சார்ந்த நண்பர்கள் நல்ல உதவியாக அமைந்தார்கள். எடுத்துக் காட்டாகப் 'பாம்பாட்டி' என்ற சொல்லுக்கு அவர்கள் தந்த

விளக்கம் அதைத் தொடர்ந்த பல சிக்கல்கள் தீரகாரணமாக அமைந்தது.

இந்நூலுக்குத் தமிழ்நாடு மேலவைத் தலைவர் மாண்புமிகு சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் மனமுவந்து அணிந்துரை வழங்கி ஆசி கூறியுள்ளார்கள். 'குளுவம்' என்ற நாடக இலக்கியப் பிரிவின் ஓவியக் குறியீடாக அட்டைப் படத்தினை கவிஞர் அமுத பாரதி அவர்கள் அழகுற வரைந்து தந்துள்ளார்கள். நூலின் பிற்பகுதியில் தரப்பெற்றுள்ள சொல் லகராதியைத் தொகுக்கும் பணியில் திருமதி பகவதியம்மாள் பெரிதும் உதவினார்கள். இந்நிலையில் இந்த நூல் வெளிவர துணை நின்ற அனைவருக்கும் என் அன்புடன் கூடிய நன்றி என்றும் உண்டு.

இதுவரை சுவடி வடிவில் தேங்கிக் கிடந்த 'சின்ன மகிபன் குளுவ நாடகம்' அச்சு வாகனமேறி உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் தமிழன்னையின் திருவடிக்குப் படையலாகி மலர்கிறது.

சென்னை-20
18-2-1980

அன்பன்
ஏ. என். பெருமாள்

# டாக்டர் உ. வே. சா. நூலகவுரை

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
திருவான்மியூர், சென்னை—600041.

நாள்: 12—2—1980.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்—பொருத்த
உதிப்பித்த பன்னூல்கள் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்"—

எனத் தன் வாழ்க்கைக் குறிக்கோள் அமைத்துக்கொண்ட மகான் தமிழ்த்தாத்தா மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள். அவர்கள் ஆற்றிய தொண்டின் அஸ்தி வாரத்தில்தான் இன்று தமிழ்மொழி உலக அரங்கில் வானுற உயர்ந்து நிற்கின்றது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்த மறுமலர்ச்சியை, தோற்றுவிக்க ஐயரவர்கள் நாடெங்கும் சென்று தேடி, நாடித் தொகுத்த பழந்தமிழ் நூல்கள் ஆயிரக் கணக்கில் அவர் பேராலிலகும் நூல் நிலையத்தில் பாதுகாக்கப் பெற்று வருகின்றன. இவற்றில் நூற்றுக்கணக்கானவை தமிழ் மக்கள் அறியாதனவாகும். இந்த நூற்குவியலிலிருந்து ஐயரவர்கள் வெளியிட்ட நூல்கள் 93. நூல் நிலையம் பதிப்பித்த நூல்கள் 60 ஆகும். இவைகள் வெளியிட ஒரு நூற்றாண்டு காலம் செலவாகியுள்ளது என்பதை நினைக்குப்போது ஐயரவர்கள் சேமித்த தமிழ்ச் செல்வங்களை அறியத் தமிழ் மக்கள் எவ்வளவு காலம் பொறுத் திருக்க வேண்டும் என்பது ஒவ்வொருவர் சிந்தனையையும் கிளரும் செய்தியாகும்.

இந்த நிலையை மாற்ற பல அறிஞர்களைக் கொண்டு ஒவ்வொருவரிடமும் ஒரு நூலை அளித்து முகவுரை, முன்னுரை எழுதச் செய்து மாதந்தோறும் ஒரு நூல் அறிமுகம் செய்ய நூல் நிலையம் திட்டமிட்டு இதுவரை எட்டு நூல்கள் அறிமுகமாகி

யுள்ளன. இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுவதுடன் அடுத்த ஆண்டிலிருந்து மாதந்தோறும் இரு நூல்கள் அறிமுகம் செய்யவும் எண்ணமுண்டு.

இங்ஙனம் அறிமுகம் செய்யப்பெறும் நூல்களில் 30-12-1979 அன்று ஏழாவதாக "சின்னமகிபன் குளுவ நாடகம்" அறிமுகம் செய்யப் பெற்றது. இதை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இணைப்பேராசிரியர் டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்கள் நல்ல ஆய்வுரை, விளக்கவுரை எழுதி அறிமுகம் செய்து பலருடைய பாராட்டுதலை இனிது பெற்றார். தமிழ் நாடக இலக்கியங்களைத் தம் ஆய்வுப் பணியாக ஏற்றவர் அவர். அவரால் ஆய்ந்து பதிப்பிக்கப் பெறும் இந்நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கை ஒட்டித் தமிழக அரசு அச்சில் வராத தமிழ் நூல்கள் எல்லாம் வெளி யிடத் திட்டமிட்டுள்ளது. அந்தத் திருப்பணியின் முன்னோடியாக உலகமுழுவதும் தமிழைப் பரப்பும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இந்தக் குளுவ நாடகத்தை 1980ல் ஐயரவர்கள் வெள்ளி விழாவில் வெளியிடும் வாய்ப்பை ஏற்றமைக்கு நூலகத்தின் சார் பாக நன்றியறிவைச் செலுத்துவதுடன் தமிழ் நூல்கள் எதுவா யினும் எங்கிருந்தாலும் பாதுகாத்து வெளியிட வேண்டும் என்றும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. கோ. ராமன்
சிறப்புக் காப்பாளர்

# நூலுள் ...


| | | |
|---|---|---|
| சிந்தனை உலையில் சின்னமகிபன் குளுவ நாடகம் | — | 1 |
| A peep into Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam | — | 51 |
| சின்ன மகிபன் குளுவ நாடகம் | — | 67 |
| விளக்கம் | — | 89 |
| பாடல் வகைகள் | — | 120 |




சின்ன மகிபன் குளுவ நாடகம் குறிப்பிடும் இடங்கள்

DR. T. P. M. LIBRARY, MADURAI KAMARAJ UNIVERSITY

# சிந்தனை உலையில் சின்னமகிபன்

## குளுவ நாடகம்

### நாடக இனங்கள்

குளுவ நாடகம் என்பது பள்ளு, குறவஞ்சி, நொண்டி போன்றநாடகஇனங்களைச்சேர்ந்தஒருநாடக வகையாகும். தமிழ் நாட்டில் இத்தகைய நாடக இனங்கள் பலவாறாகத் தோன்றி பதினேழாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. பெரும்பாலும் கடவுளர் அல்லது புகழ்பெற்ற ஆட்சியாளர்களைத் தலைவர் களாகக் கொண்டு அவர்களைப் புகழ்ந்து பாடுவதுடன் நாட்டு நடப்பு, சூழல், சமுதாயப் போக்கு, சமயம், கோட்பாடு ஆகிய வற்றையும் உள்ளடக்கி இவை எழுதப் பெற்றன. 'பள்ளு' பயிர்த் தொழில் செய்யும் பள்ளர்களின் வாழ்வினை விளக்கும். 'குறவஞ்சி' மலையில் வாழும் குறக்குல மக்களின் வாழ்க்கையின் போக்கைச் சித்தரிக்கும். அதில் மேற்குடி மக்களைப் பற்றியும் அறியலாம். உலா, குறம், தூது போன்றவற்றின் இயல்புகள் இணைந்த நாடக இனமாக அது உள்ளது. 'நொண்டி' களவு, பரத் தையர் உறவு போன்ற தவறுகளைச் செய்து அல்லல்படும் பாமரர் களின் அவல வாழ்வினைக் கூறும், 'குளுவம்' மலைவாழ் குளுவர் பறவை வேட்டையாடுவதைச் சுவைபட நவிலும். அனைத்திலும் கடவுளர், மேற்குடியினர் ஆகியோரின் புகழ் பாடப்பெறும். ஆயி னும் பேரிடம் பெறுவது எளிய வாழ்வினை மேற்கொண்டு ஏழை யராக உழைத்து வாழும் பாமரர்களே என்பது குறிப்பாகக் காணத் தகும் உண்மையாகும். பல்வேறு வகையான வாழ்க்கை முறையும், பண்பும்,தொழிலும்கொண்டவெவ்வேறு இனமக்கள் தங்கள் தங்கள் போக்குக்கும் இயல்புக்கும் தக்கவாறு ஆடிப்பாடி மகிழ்ந்துள்ளனர்.

நாடகக்கூத்து என்ற நிலையில் அனைத்தும் ஒன்று படுவதாயினும் கூறும் பொருளிலும் பாடும் பாடல்களிலும், ஆடும் ஆடல்களிலும் அவை தனித்தனி இயல்புகளைக் கொண்டு தங்கள் தனித் தன்மை களைக் காட்டுகின்றன. பெரும்பாலும் இவைகுறுகிய வாட்டத்து டன்தொடர்புடைய கருத்துக்களை உள்ளடக்கியே புனையப்பெறு கின்றன. ஆகையினால் குறிப்பிட்ட இடத்தினைரையே கவர்ந்து மகிழ்விக்கும் தன்மையுடன் உள்ளன. சிறப்பாகக் கோயில் விழாக் களில் மிகுதியாக நடிக்கப் பெற்றுள்ளன. அரசனைப் புகழ்ந்து பாடுவதினால் அவனுடைய ஆதரவு இவற்றுக்குக் இருந்துவந்துள் ளன. இவ்வகை நாடக இனங்களுள் குளுவம் மிகக் குறைவாகவே நடத்தப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் இவற்றின் எண்ணிக் கை மிகக் குறைவாகவே உள்ளது.

குளுவமும் குறவஞ்சியும்

குளுவமும் குறவஞ்சியும் மலைவாழ் மக்களின் வாழ்வின் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெறும் நாடக இனங்களாகும் குளுவரும் குறவரும் மலையில் இருந்து வருவதாகவே கூறு கின் றனர். இருவரும் ஓர் இனத்தினரா என்பது ஆய்வுக்கு உரிய தாகும்.

'குளுவன்' என்ற சொல்லே சிந்தனைக்கு வேலைதருவதாக உள்ளது. சின்னமகிபன் குளுவ நாடக ஏட்டுச் சுவடியிலும், ஏழுநகரத்தார் குளுவ நாடக அச்சுப்படியிலும் 'குளுவன்' என்ற சொல்லை 'ளுகரம்' பயன்படுத்தி எழுதியுள்ளனர். ஏழு நகரத்தார் குளுவ நாடகத்தின் தலைப்பில் 'குழுவன்' என்று அச்சிடப் பெற் றுள்ளது. இது பதிப்பித்தோர் செய்ததாகக் கருதலாம், கோட் டூர் நயினார் குளுவ நாடகம் 'குழூவன்' என்றே அனைத்து இடங் களிலும் பதித்துக் காட்டுகிறது. சரியான எழுத்து எதுவாக இருக் கும் என்பதே சிந்தனைக்கு உரியதாக உள்ளது.

கூட்டம், மந்தை, தொகுதி, சாமர்த்தியம், தந்திரப் பேச்சு ஆகியவற்றைக் குறிக்கும் 'குழு' என்ற சொல்லின் அடிப்படை யாகக் 'குளுவன்' பிறந்திருக்கலாமா என்பதும் கருதுவதற்கு உரியது. குறிப்பிடப்பெறும் இனத்தினர் இத்தகைய தன்மைகள் உடையவர்களே ஆயினும் பல சமயங்களில் தனித்தனியாக இயங்கியே தங்களுடைய பங்கை இயற்றுவதாக இலக்கியங்கள் காட்டுகின்றன. சாளுவன், துளுவன் போன்று எழுதுவதாயின் 'குளுவன்' என்றே இருத்தல் வேண்டும்.

'குறவன்' என்ற சொல்லே திரிந்து 'குளுவன்' ஆகியிருக்க லாமோ என்று கருதவும் இடம் உள்ளது. தென் மாவட்டங்களில்

குழந்தைகளைக் 'குஞ்சு குறுவான்' என்று கூறும் வழக்கம் உண்டு. இதே வழக்கை இராமநாதபுரம் மாவட்டத்தில் 'குஞ்சு குளுவான்' என்றே இன்றும் கூறுகின்றனர். 'புறக்கடை' என்பதைப் பேச்சு வழக்கில் 'புளக்கடை' என்றே கூறுகின்றனர். இதிலிருந்து றகரம் வகரமாகப் பேச்சு வழக்கில் திரியும் போக்கு நன்கு புலனாகிறது. இம்முறை கொண்டு நோக்கினால் 'குறவன்' என்பது 'குளுவன்' என்று திரிந்து தோன்றியிருக்கலாம் என்று கருத இடம் உள்ளது.

குறவரும் குளுவரும் மலைவாழ் மக்களாக இருந்து பிரிந்தவர்களாக இருக்க வேண்டும். பச்சை குத்திக் குறி சொல்லும் திறமுடையவர்களாகக் குறவர் சிறப்புற்றுள்ளனர். குளுவர் பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடிப்பதிலும் சித்துவேலை செய்வதிலும் வல்லவர்களாகக் காணப்பெறுகின்றனர். குறவரும் வேட்டையாடுவர். அவர்களுக்குக் காடுகளில் மிருக வேட்டையாடுவது சிறப்பாகக் குறிக்கப்பெறுகிறது. ஆனால் குளுவர்களுக்கு வயல் நிறைந்த மருதநிலத்தில் பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடிப்பதே தொழிலாகக் கூறப்பெறுகிறது. குளுவர் பச்சிலை மருத்துவம் அறிந்தவர்கள் என்பதைக் கோட்டூர் நயினார் குளுவ நாடகம் வாயிலாக அறியமுடிகிறது. செய்தொழிலாலும் அவர்கள் காட்டும் திறமை வேறுபாட்டாலும் மாறுபட்டு ஒரே இனமாக வாழ்ந்த மலைவாழ் மக்கள் குறவராகவும் குளுவராகவும் கால ஓட்டத்தில் இருவேறு இனமாகப் பிரிந்து வாழ்ந்திருக்கலாம். குமரி மாவட்டத்தில் குளுவர் இனம் இன்றும் தேரூர் குளக்கரையில் அதிகமாக வாழ்கின்றனர். நீர்வாழ் பறவைகளைப் பிடிப்பதில் திறமுடையவர். காக்கைகளைப் பிடித்து உண்ணுவர். பச்சிலை மருந்து வைத்தியம் அறிவர். மந்திரக் கலையில் வல்லவர். குறிப்பாகக் குழந்தைகளின் நோயைப் போக்க அவர்களது உதவியை மக்கள் நாடுகிறார்கள். இப்பொழுது அரசு உதவியால் கல்வியறிவு பெற்று முன்னேறி வருகின்றனர். தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் குளுவனைப் பற்றிப் பலருக்குத் தெரியவில்லை. ஆகையினால் தென்பகுதியே அவர்களுடைய வாழ்விடமாக இருந்திருக்க வேண்டும்.

'ஊரற்பறவை' என்று குறிப்பிடப்பெறும் நீர்வாழ் பறவையைக் 'குளுவை' என்றே கூறுவர். இவ்வகையான பறவைகளைப் பெரும்பாலும் வேட்டையாடுபவரை 'குளுவன்' என்று அழைத்திருக்கலாம். பேச்சு வழக்கை நோக்கின் ளகரத்தைப் பயன்படுத்திக் 'குளுவன்' என்று எழுதுவதே சரியாகப்படுகிறது. குளுவனைக் குறவனின் பாங்கன் (A fowleres attendent) என்றுஅகராதி கூறுகிறது.[1] இதிலிருந்து குறவனைவிடவும் குளுவன் சமூகத்

1. Tamil Lexicon, Vol. II, (1928) p. 1043.

தகுதியில் குறைந்தவனாகக் காணப்படுகிறான். குறவஞ்சிகளின் சிங்கன், நூவன் ஆகியோர் இடம் பெறுகின்றனர். குளுவ நாடகத்தில் 'சிங்கன்' குளுவனின் பணியாளாக இடம் பெறுவதைக் காண முடிகிறது.

'குளுவனுக்கே நிதிவா ரணியும் சிங்கனும் நானே:'[2]

என்றும்

'பொன்னுயர்சித் திரக்குளுவனுக் கேதினம்
பொங்கல்சோ றுகறியுஞ் சுமக்கின்ற—சிங்கனும் நானே'[3]

என்றும் சிங்கன் கூறுவதில் இதை உணரலாம்.

குறவஞ்சியும் குளுவமும் தங்கள் போக்கிலும் அமைப்பிலும் மிகுந்த வேறுபாடுகள் கொண்டுள்ளன. குறவஞ்சியில் குறத்தியின் பங்கே சிறப்பிக்கப்பெறுகின்றது. அவளது குறிசொல்லும் திறனில் குறவஞ்சியின் வளர்ச்சி அமைகின்றது. அவளுக்கு மேற்குடி மங்கையான தலைவியின் அந்தரங்க உறவில் இடம் கொடுக்கப்படுகிறது. அவள் கையிலிருக்கும் மந்திரக் கோல், குறவஞ்சியில் உயிர்ப்புக் கருவியாக விளங்குகிறது. குளுவத்தில் குளுவனின் பங்கே முக்கிய இடம்பெறுகிறது. அவன் கையிலிருக்கும் கண்ணியே அதில் செயலோட்டக் கருவியாகப் பயன்படுகிறது.

குறவஞ்சி தலைவனின் உலாவில் தொடங்குகிறது. குளுவம் குளுவனின் வருகையில் முதற்காட்சியைக் காட்டுகிறது. தலைவியின் காதல் மயக்கத்தைத் தீர்க்கும் மருந்தாகக் குறத்தி குறவஞ்சியில் தோன்றுகிறாள். இறுதியில் அவள் தன்னைத் தேடியலையும் குறவனைச் சந்தித்து அவனிடம் தான் பெற்றப் பரிசுப் பொருள்கள் பற்றிக் கூறுகிறாள். குளுவத்தில் குளுவன் தலைவனைப் பாராட்டிப் பறவை வேட்டைக்குச் செல்கிறான். சிங்கனின் துணையுடன் பறவைகளைப் பிடித்து தலைவனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுக்கிறான். பின் சிங்கன் சிங்கியைத் தேடிக் காண்கிறான். சிங்கி தான் பெற்றப் பரிசில்களைப் பற்றிச் சிங்கனிடம் விளக்கிச் சொல்கிறாள். இறுதிக் காட்சியில் குறவஞ்சியும் குளுவமும் ஒன்றுபட்டாலும் முக்கிய இடங்களில் பெரும் வேறுபாடுகளுடன் அமைகின்றன. இத்தகைய ஒற்றுமைகளை வேறு நாடகங்களிலும் காண முடிகிறது. ஆறாதார விலாசம், அலிபாதுஷா நாடகம், தையார் சுல்தான் நாடகம், ஒட்ட நாடகம் ஆகியவற்றிலும் குறவஞ்சிக் காட்சிகள்

2. சின்னமகிபன் குளுவ நாடகம், 15, i.
3. மேற்படி, 15, iv.

இடம் பெற்றுள்ளன. இருப்பினும் இவை வேறு, குறவஞ்சி வேறு என்று உணர்வதுபோல் குறவஞ்சியையும் குளுவத்தையும் பிரித்துக் கண்டறிய வேண்டியது முறையாகும். குறம், குறத்திப்பாட்டு ஆகியவற்றிலிருந்து குறவஞ்சி முகிழ்ந்து உலா, தூது ஆகியவற்றை அணைத்து வளர்ந்துள்ளது போல் குளுவம் குறத்தின் தொடர் புடன் தோன்றிக் கதைப் பாடல்களில் வரும் வேட்டைக்காரன் பாடல்களை மூலமாகக் கொண்டு நாடக இனமாக உருவாகி இருக்கவேண்டும். மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றை வேட்டையாடும் காட்சிகள் பல கதைப் பாடல்களில் முக்கியமான இடம்பெறுவதை நினைவில் கொண்டு நோக்குதல் வேண்டும். குறி சொல்லும் பகுதி குளுவத்தில் இடம் பெறவில்லை. ஆனால் வேட்டைக் காட்சி குறவஞ்சியில் காட்டப்படுகிறது. இறைவனையும் பாட்டுடைத் தலைவனையும் போற்றிப் புகழ்வதில் இரண்டும் ஒன்றுபடுகின்றன.

### குளுவ நாடகம்

நாடக இனங்களின் மரபு முறை வழிநின்றே குளுவ நாடகம் எழுதப் பெற்றுள்ளது. காப்பு, தோடையம், மங்களம், தலைவன் புகழ் பாடியவாறு குளுவன் தோன்றல், குளுவன் வருதல், சித்து வித்தை கூறுதல், சிங்கன் வருதல், பறவைகள் வருதல், வேட்டையாடல், பறவைகளைப் பங்கிடல், பரிசுகள் பெறல், சிங்கன் சிங்கி சந்திப்பு, வாழி ஆகிய 12 பகுதிகளை முக்கியமாகக் கொண்டு குளுவ நாடகம் அமைக்கப் பெறுகிறது. ஆசிரிய விருத்தம், அகவல், தரு (இசைப் பாடல்) ஆகியவற்றைக் கொண்டே பெரும் பாலும் எழுதப்படுகிறது. மங்களத்துக்கு அடுத்து தலைவனின் புகழ் அகவலில் மிக விரிவாகக் கூறப்பெறுகிறது. தமிழில் இருந்ததாக இதுவரை அறியப்பட்டுள்ள குளுவ நாடகங்கள் மிகச் சிலவே. அவற்றின் காலம் பதினெட்டாம் நூற்றாண்டாக இருக்க வேண்டும். ஓரளவு கிடைக்கப்பெற்றுள்ள ஏனைய குளுவ நாடகங்களைப் பற்றி அறிவது சின்னமகிபன் குளுவ நாடக ஆய்வுக்குத் துணையாக அமையலாம்.

### கோட்டூர் நயினார் குளுவ நாடகம்

'கோட்டூர் நயினார் குளுவ நாடகமும் பள்ளும்' என்ற நூல் கோட்டூர் ஆண்டியப்பப் புலவன் மகன் வெள்ளைப் புலவன் என்பவரால் எழுதப் பெற்று சென்னையில் விகாரி ஆண்டு சிங்காரவியில் 1899 ஆகஸ்ட்) அச்சிடப் பெற்றதாகக் குறிப்பு உள்ளது. இது இராமநாதபுரம் விருதுநகரையடுத்துள்ள கோட்டூரில் கோயில் (கொண்டுள்ள நயினாரைப் புகழ்ந்து பாடும் குளுவ நாடகமாகும். கணபதி, தமிழ் வல்லோர் ஆகியோரைப் போற்றி மூன்று காப்பு

விருத்தங்கள் உள்ளன. இதில் வரும் அகவல் 121 அடிகளை உடையது. சித்துக்களைக் கூறும் தருவில் பச்சிலை மூலிகையின் பெருமைகள் அடுக்கிக் கூறப் பெறுகின்றன. மொத்தம் 39 பாடல்கள் கொண்ட நூலாக இது விளங்குகிறது. இதில் வரும் 29ஆம் பாடல் 27 கண்ணிகளைக் கொண்டு மிக நீளமாகக் காணப்படுகிறது. பொதுவாக ஒரு விருத்தமும் அதனை அடுத்து ஒரு தருவும் வருவது மரபு. ஆனால் இதில் ஒரு இடத்தில் இரண்டு விருத்தங்கள் அடுக்கி வருகின்றன.

இதில் குளுவ நாடகத்துக்கும் குளுவனுக்கும் மிகச் சிறந்த அடைமொழிகள் தரப்பெறுகின்றன. பெருகு தமிழ்க் குளுவ நாடகம், மலைக்குளுவ நாடகம், மூவரும் தேவரும் துதி குளுவ நாடகம், தமிழிசை பயில் குளுவ நாடகம், சிவகாமி அருள் பெறும் குளுவ நாடகம், நன்மனம் தரும் குளுவ நாடகம், கல்விக் குளுவ நாடகம்,என நூலைப் புகழ்ந்து கூறிச் சிறப்பிக்கிறது. குளுவனைச் சுந்தர மெஞ்ஞான மலைக்குளுவன், கானக்குளுவன், பொதிகைக் குளுவன், காரணக் குளுவன் என்று போற்றுகிறது. இவ்விதமான அடைமொழிகள் குளுவ நாடகத்தில் அடக்கப் பெற்றுள்ள தத்துவங்களின் வாயில்களைத் திறப்பனவாக அமைகின்றன. சிங்கன் குறக்குலத்தைச் சேர்ந்தவன் என்பதை உணர்த்துவது போன்று 'குறநரசிங்கன்' என்று கூறுகிறது. மணிமுத்தாநதி, ஆனைமலை, ஆகியவை சிறப்பிக்கப் பெறுகின்றன. கோட்டூர் நயினாரும், சவுந்தரநாயதி அம்மனும் கும்பமுனியும் புகழப்படுகின்றனர்.

இந்தக் குளுவ நாடகத்தின் ஆசிரியர் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"வாசமாங் கோட்டூர் வளருமாண்டி யப்பன்
மைந்தன் வெள்ளையன் சொல்வடித் தமிழ்க்கினிய''[4]

என்று குறிப்பிடுகிறார்.

இந்தக் குளுவ நாடகத்தின் பல விளக்கப் பகுதிகள் தத்துவப் பொதிவுகளாகவே தோன்றுகின்றன. குளுவன் வரும் தோற்றத்தை ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

'செங்கையில் பிரம்புஞ் சிற்றரி வாளும்
மங்கைதந் தருளிய மாத்திரைக் கோலும்
காசினி மதிக்கக் கமண்டலத் துடனே
மாசினை நீக்கி மகிழ்வுட னெடுத்து

4. கோட்டூர் குளுவ நாடகம், அகவல், 72-73.

மருமலர்ப் பெண்கள் மயலது பூணத்
திருநுதன் மைவகைத் திலதமு மணிந்து'[5]

குளுவன் வருகிறான். வேட்டையாடுவதற்கு வரும் குளுவனிடம் இருக்கும் மாத்திரைக் கோலும், கமண்டலமும் சிந்திக்க வைக்கிறது. அவற்றில் இறையருள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவன் சாதாரண வேட்டைக்காரக் குளுவன் அல்லன் என்ற உணர்வு ஏற்படுகிறது. அவன் 'மாசினை நீக்கி' மகிழ்வுடன் வருகிறான். அவனைக் கண்டதும் 'மருமலர்ப் பெண்கள்' மயல்பூண்டு நிற்பதாகஉணர்த்தப்படுகிறது. இறைவனை ஆணாகவும் மனிதர்களைப் பெண்ணாகவும் குறிப்பிடும் தத்துவம் நினைவுக்கு வருகிறது.

'பச்சிலை நானறிவே னடையியே
பச்சிலை நானறிவேன்'[6]

என்று குளுவன் பாடிக்கொண்டு வரும்போது மனிதனுக்கு வரும் பிணிகள் அனைத்தையும் போக்கவல்ல மருத்துவனாகக் காட்சி தருகிறான்.

'மிச்சமதாக மலையைப் பொன்னாக்கவும்
வித்தை வினோதங்கள் மெத்தமெத்தச் செய்யத்'[7]

திறமுடையவன் என்று கூறும்போது மனிதனால் இயலாத செயற்கரிய செயல் செய்யும் ஆற்றலன் என்று தோன்றுகிறது.

அவன் வலைவீசிப் பிடிக்கக் கருதும் பறவைகளும் சாதாரணமானவைகள் அல்ல.

'சூத்திரமான பறவைக ளெல்லாம்
சுற்றிச்சுற்றி வந்துகொத்துக்கொத் தென்னவே'[8]

பறந்து திரியும் தன்மையுடையன.

குளுவன் பறவைகளைப்பிடிக்கக் கண்ணிகளை ஊன்றுவதிலும் சிறப்புத் தன்மை புலப்படுகிறது. அவன் சிங்கனிடம் கண்ணியை நடச் சொல்லும்போது,

'திருத்திடையே திருத்தடா சிவ
சிந்தையாய்க் கண்ணி திருத்தடா'[9]

---

5. கோட்டூர் நயினார் குளுவ நாடகம், பக்.7.
6. மேற்படி, பக். 9.
7. கோட்டூர் நயினார் குளுவ நாடகம், பக். 13 (பா. 16, 8)
8. ,, ,, பக். 15 (பா. 18, 2)
9. ,, ,, பக். 24 (29, பல்லவி)

என்று கூறுகிறான். இக்கூற்றில் மறத்தன்மை மறைந்து அருள் தன்மை முகிழ்ப்பதைக் காணலாம். புனிதத்தன்மையுடன் வேட்டையாடும் பணியைச் செய்யுமாறுத நண்பனை வேண்டு கிறான்.

'அகத்திய தீர்த்த மாடியே—அஞ்சு
அச்சர மந்திரம் பாடியே
செகத்தினிற் குருவமடா—தினம்
தெரிசிக்கக் கலி போமடா'[10]

என்று கூறுவதில் குளுவனின் உட்கிடக்கை உடைபட்டுத் திறப் பதை உணரலாம். புறத்தூய்மை, அகத் தூய்மை ஆகிய இரண் டையும் இங்கு வலியுறுத்துகிறான்.

பரப்பிய கண்ணிகளில் பறவைகள் சிக்கிக் கொண்டதும் மகிழ்ந்து கூவுகிறான்.

'சிக்கிக் கொண்டதையே பறவைகள்
சிக்கிக் கொண்டதையே'[11]

என்று பாடுவதில் அவன் மனக்களிப்பு புலனாகும். சிக்கிய பறவை கள் 'சூத்திரப் பறவைகள்' என்பதை மறந்துவிடக் கூடாது. தொடர்ந்து குளுவனின் கூற்றைக் கேட்டால் தெளிவான தத்துவக் கருத்துக்கள் உதிரும்.

'மண்டலம் போற்றிய கோட்டூர் நயினார்
வளர்ந்தருள் நாட்டி லுகந்த பறவைகள்
குண்டலிவாவி குளம்வயல் தோறும்
குலாவியுலாவி திரிகின்ற பட்சிகள்
கண்டதெல்லாம் நயினாரைத் தரிசித்துக்
காரணமாம் பரிபூரணந் தன்னிலே
பண்டுடனே நரசிங்கன் திருத்திய
பண்புடன் கண்ணியில் நம்புதலாய் வந்து
சிக்கிக் கொண்டதையே'.[12]

'குண்டலிவாவி' முதலிவற்றில் குலாவித்திரிந்த பறவைகள் சூத்திர மாம் வலையில் சிக்கிக் காரணமாம் பரிபூரணந்தன்னிலே திருந்திய பண்புடனே வந்து சேர்ந்தன. இதில் அடங்கியுள்ள கருத்தை உய்த்துணரின் மனிதவாழ்க்கைத் தத்துவம் செவ்வனே, விளங்கும்.

---

10. „ „ பக். 25 (29, சரணம் 2)
11. „ „ பக். 29 (31, பல்லவி)
12. கோட்டூர் நயினார் குளுவ நாடகம், பக். 29-30 (31, சரணம்).

குளுவ நாடகத்தின் அகக் கருத்தும் புலனாகும். உலகியலில் நின்று இறையியலை விளக்கக் குளுவநாடகம் முயல்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டே குளுவனின் கையிலுள்ள கண்ணி களைச் 'சிக்கும் சிவயோகக் கண்ணிகள்' என்று ஆசிரியர் தொடக் கத்திலேயே கூறிவிடுகிறார்.

நூல் சுவைபடுவதற்காகவும் உலக அறிவை வளர்ப்பதற் காகவும்,

'குறுங்கண்ணி நெடுங்கண்ணி கூழைக் கடாக்கண்ணி'

என்று ஒன்பது வகைக் கண்ணிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அதோடு 96 வகை 'அந்தரப் பட்சிகளைப்' பற்றியும் சுட்டிக் காட்டுகிறார். இத்தகைய முறையில் பொருள்களின் வகைகளைக் கூறும் போக்கைப் பள்ளு போன்ற நாடக இனங்களில் மிகுதியாகக் காணலாம். நெல், மாடு, ஏர்க்கால் முதலியவற்றின் வகைகளைப் பெயர்ச் சுட்டிக் கூறல் பள்ளுகளில் ஒரு மரபாக அமைந்துள்ளது. அதே மரபை ஒட்டி குளுவ நாடகத்தில் கண்ணிவகை, பறவை வகை கூறப்படுவதாகக் கருதலாம்.

மேலும் அடிமடைச்செய், பொழுதுகண்டான் செய், சந்திர வேதன் செய், கோரைச் செய், சொரி குரும்பை விளையும் செய் என்றும், தாங்கி முகவணை வாய்க்கால், அரசு வாய்க்கல்; அவிசம் வாய்க்கால் என்றும், மூலத்தள வயல், மூலக் குளத்து வயல், கோரம்பைவயல் என்றும் முக்காணிவட்டம் என்றும்நெல்விளையும் வயல்களின் பெயர்களைக் கோட்டூர்நயினார் குளுவநாடகம் குறிப் பிட்டுக்கூறுகிறது. இவ்வாறு பூங்குடிக் கண்மாய்,ஆலஞ்செய்யூரணி, மூலக்கிணறு என்றும் குளம், ஊருணி, கிணறு ஆகியவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுப பெருமையடைகிறது.

குளுவ நாடகஇறுதியில் சிங்கனும் சிங்கியும் சந்திக்கும்போது குளுவனுக்கும் சிங்கனுக்கும் வேறுபாடு கருதாது பாடல்கள் பாடப் பெற்றுள்ளன.

'மங்களக் குளுவனுக்கு வாக்கிய
முத்தம் சொரியும்—சிங்கி'[13]

என்று கூறியுள்ள ஆசிரியர் அடுத்த பாடலில்,

'வந்த குறச்சிங்சி தனைக் கண்டுமே தான்
மனமகிழ்ந்து சிங்கனு மங்கேது சொல்வான்'[14]

---

13. மேற்படி, பக். 33 (பாடல் 35,1)
14. மேற்படி, பக், 34 (பாடல் 36)

என்று பாடுகிறார். இது குளுவனுக்கும் சிங்கனுக்குமிடையிலுள்ள ஏற்றத் தாழ்வு உறவைப் பற்றிய ஐயத்தைக் கிளப்புகிறது. இருவரும் ஒருவர் அல்லர் என்று முன்னர் காட்டியுள்ள ஆசிரியர், இவ்வாறு பின்னர் புகல்வது சிந்தனைக்கு மாறுபாடாகவே உள்ளது.

கோட்டூர் நயினாரைப் பல இடங்களில் இக்குளுவ நாடகம் போற்றிப் புகழ்கிறது. நாயகியும் இணைவாக வாழ்த்தி வணங்கப் பெறுகிறார். ஏனைய கடவுளர்களுக்கு இடம் கொடுக்கப் பெறவில்லை. தலைப்புக்குப் பொருத்தமாக ஆசிரியர் பாடியுள்ளார். நாடகத்தின் எல்லாப்பகுதிகளிலும் கோட்டூர் நயினாரைப் பற்றிய பற்றினை மறவாது கூட்டுகிறார். இறைவனும் குளுவனும் இணைந்து நம் மனத்தில் பதிந்து விடுகின்றனர். ஆனால் ஆழ்ந்து சிந்திக்கும்போது குளுவன் மறைந்து விடுகிறான். அவன் இருந்த இடத்தில் ஒரு தத்துவப் பொலிவு தோன்றுகிறது. இறைவன் தன் அருளால் மனிதனை ஆட்கொள்ளும் நிலைக்கு அவனை உயர்வடையச் செய்யும்அறிவு விளக்கமாகக் குளுவன் விளங்குகிறான்.

ஏழு நகரத்தார் குளுவ நாடகம்

ஏழு நகரத்தார் பேரிற் குளுவ நாடகமும் பள்ளும் என்ற நூல் 1922-ம் ஆண்டு ஆண்டிப்பட்டித் திருஞானசம்பந்தக் கவிராயர் என்பவரால் பதிப்பிடப் பெற்றுள்ளது. நாட்டுக் கோட்டை நகரத்தார் சரித்திரத்தில் இந்நூல் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பூங்கொன்றை நாட்டு வேலங்குடிக் கல்வெட்டில் காணப்பட்டுள்ளதாக ஒரு குறிப்பு உள்ளது.[15] கடிகைப் புலவர் இந்நூலை இயற்றியதாக நூலுள் குறிப்பு காணப்பெறுகிறது. விருதரசர் பயங்கர நாடாகிய கானாட்டுப் புலவர் என்று இவர் குறிப்பிடப் பெறுகிறார்.

இந்தக் குளுவ நாடகமும் மரபுமுறையில் தொடங்கப் பெற்றுள்ளது. காப்பு 5 விருத்தங்கள், தோடையம் 10 விருத்தங்கள், மங்களப் பாடல் இல்லை. அகவல் பகுதி 225 அடிகளாக மிக நீண்டு காணப் பெறுகிறது. பின்னர் 2 விருத்தங்களும் 2 இசைப் பாடல்களும் உள்ளன. இறுதி வாழிவிருத்தம் காணப்பெறவில்லை. நூல் முழுமையானதாகத் தோன்றவில்லை. மொத்தம் 20 பாடல்களே உள்ளன. மற்ற குளுவ நாடகங்களுக்கும் இதற்கும் நிரம்ப வேறுபாடுகள் உள்ளன.

நாட்டுக் கோட்டை நகரத்தாரைப் புகழ்ந்து பாடுவதே இந்தக் குளுவ நாடகத்தின் ஒரே நோக்கம். நகரத்தில் வாழும்

---

15. ஏழுநகரத்தார் பேரிற் குளுவ நாடகம், முகவுரை பக் ii.

செட்டியார்களின் செல்வநிலை, செல்வாக்கு, புகழ், கொடை, வாணிகத் திறன், கல்வி மேம்பாடு, இறைவழிபாடு முதலிய வற்றை வியந்து புகழும் படைப்பாகவே இது விளங்குகிறது. அவர்களை,

'வஜ்ஜிர சரீரர் அச்சுத வசீரர்
மெச்சிளசை ஊரர் உச்சித வுதாரர்
கலைநிறை சோமர் பலமுயர் வீரர்
சிலைபெறு ராமர் நிலமகிழ் காமர்'[16]

என்று இந்நூல் பலயடப் புகழ்கிறது.

குளுவ நாடகத்தின் சிறப்புத் தன்மை பற்றிய குறிப்புக்களை யும் தருகிறது. சீருலாவிய குளுவ நாடகம், பொங்க குளுவ நாடகம், மிகுநலம் பெறும் குளுவ நாடகம், ராஜர் மகிழ்வுயர் குளுவ நாடகம், அலங்கிருதம் பெறு குளுவ நாடகம், மங்களம் உயர் குளுவ நாடகம், உளம் மகிழ்ந்தருள் குளுவ நாடகம், காத லுயர் தமிழ்க் குளுவ நாடகம் எனப் பலவிதமாகக் கூறப் பெறு கிறது. இவற்றின் அடை மொழிகளைக் கூர்ந்து காணின் இந்த நூலின் நோக்கும் போக்கும் நன்கு விளங்கும். இறைவனை மனங் கனிந்து காப்பு, தோடையம் ஆகிய பகுதிகளில் போற்றிப் பணி கிறது என்பது உண்மை. இருப்பினும் நூலின் அகவோட்டத் தில் பொருட்செறிவோ தத்துவப் பொதிவோ இருப்பதாகத் தோன்றவில்லை. நூலில் நோக்கம் பாடலில் ததும்புகிறது.

இசைக்குச் சிறப்பிடம் இந்த நூலில் கொடுக்கப் பெற்றுள்ள தாகத் தோன்றுகிறது. குளுவன் தன்னை அறிமுகப்படுத்தும் போது,

'சங்கீதக் குளுவன் நானே களரி மெச்சுஞ்
சங்கீதக் குளுவன் நானே'[17]

என்று பாடிக்கொண்டே வருகிறான். இன்னொரு இடத்தில்,

'நன்னயமிகு சிங்கார நாடகக் குளுவானனே
பன்னும் செந்தமிழோர் சொல்மெய்ப்பான
சித்தறிவேனய்யே'[18]

என்றும் கூறுகிறான். பாடலும் ஆடலும் மிக்க குளுவன் சித்துக் களை அறிவதாகச் சொல்கிறான். இவனிடம் கலை உணர்வுகள் காணப்படுகின்றன.

---

16. மேற்படி, அகவல் 21-24
17. மேற்படி, பக். 13.
18. மேற்படி, பக். 13

மற்ற நாடகக் குளுவர்களைப் போன்று இவனும் உண்பதிலும் குடிப்பதிலும் தன் பெருமையைப் பேசி மகிழ்கிறான்.

'மாணிக்கம் பிச்சை யிடுவணி சேசர்
வளர்மாதை கல்வாசல் நாட்டு மரக்காலால்
தூணிக் குருணிப் பழவரிச் சாதம்
தொண்ணூறு முட்டைத் துவரம் பருப்புநெய்
ஆணிக் கையாறி ரண்டாட்டுக் கறிதயிர்
ஆறு மரக்கால் பலாச்சுளை யைஞ்ஞூறு
ஊணுக் கினிய தெனமாம் பழமம்பத்
தொன்றாக வேதினம் தின்றேப்ப மிட்டிட'[19]

உண்ணும் குளுவன்,

'கள்ளுடன் அரக்குக் கனம்பெறக் குடித்துச்
சுள்ளுடன் சோறும் சுகம்பெறப் புசித்து'[20]

மகிழ்வோன். பறவைகளைப் பிடிக்கும் கண்ணிகளுடன் வருகிறான். நகரத்தாரைப் புகழ்ந்து பாடுகிறான். சிங்கனின் வருகை இடம் பெறவில்லை. குளுவ நாடகப் பிற்பகுதி காணப்படாதது ஒரு குறையாகவே தோன்றுகிறது. முழுமையாக இந்நூல் கிடைக்கப் பேறவில்லையோ என்று எண்ண இடமுள்ளது.

முன் நூற்றாண்டில் நகரத்தாரின் பெருவளச் சிறப்பையும் கொடை மகிமையினையும் அறிய இந்நூல் உதவும். குளுவ நாடக அமைப்பைக் கொண்டு கடிகைப் புலவர் நகரத்தார் சிறப்பைப் பாடிப் பரிசில் பெற்றிருக்கலாம். கோனாட்டில் சின்னமகிபன் குளுவ நாடகம் புகழ்பெற்றிருந்த போது அதனைப் பின்பற்றி ஏழு நகரத்தார் குளுவ நாடகம் எழுதப்பெற்றுநகரத்தார் மத்தியில் நடிக்கப் பெற்றிருக்கவேண்டும். அந்தக் குளுவ நாடகத்தின் சாயல் சில இடங்களில் காணப்படுகிறது.

கோட்டூர், நகரத்தார் ஆகிய இரு குளுவ நாடகங்களுக்கும் இணையாக அதே ஆசிரியர்கள் அந்தந்தப் பொருள்களைத் தலைமையாக்கிப் பள்ளு நாடகங்களும் பாடி இருக்கின்றர். அவை இணைந்திணைந்தே நூல்களில் காணப்படுகின்றன. இருவேறு அமைப்புடைய நாடக இனங்களில் ஒருபொருள் பற்றிப் பாடி அப்புலவர்கள் புகழ் பெறுகின்றனர். இதைக் காணும்போது குளுவ நாடகமும் பள்ளு நாடகமும் ஒரே காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள நிலை புலனாகிறது. ஆயினும்பள்ளு

19. மேற்படி, இசைப்பாடல் 2, சரணம் 4.
20. மேற்படி, அகவல் 218-219.

போன்று குளுவ நாடகம் எண்ணிக்கையில் அதிகமின்மையால் அதன் செல்வாக்கு பள்ளு போன்று அதிகம் இருந்திருக்க முடியாது என்று கருதவே இடம் உள்ளது.

### திருக்குற்றாலக் குளுவ நாடகம்

திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூலகக் குறிப்பில் திருக்குற்றாலக் குளுவ நாடகம் என்ற நூல் இருந்ததாகக் காணப்படுகிறது.[21] 'கோட்டூர் நயினார் குளுவ நாடகம் இறைவனைக் குறித்துப் புகழ்ந்து பாடியிருப்பது போன்று திருக்குற்றால நாதரைப் போற்றிக் கூறிஇருக்கவேண்டும். ஆண்டவன், ஆலயம், மலை, நதி, நகர், அருவி இயற்கை வளம் ஆகியவை சிறந்து விளங்கும் திருக்குற்றாலம் பற்றிய குளுவ நாடகம் கிடைக்கப் பெறாமை வருந்துவதற்கு உரியதாகும்.

அருணாசலம் செட்டியார் பேரில் குளுவ நாடகம் ஒன்று இருப்பதாகவும் அறிய முடிகிறது. இன்னும் சில குளுவ நாடகங் களும் இருப்பதாகவும் அவற்றை சிலரிடம் வாய்மொழியாகக் கேட்டதாகவும் செட்டி நாட்டு நண்பர்கள் கூறினர்.

### சின்னமகிபன் குளுவ நாடகம்

சின்னமகிபன் குளுவநாடகம் திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நூலகத்து ஏட்டுச் சுவடி சேர்க்கையில் 777ஆம் எண்ணுடையதாக உள்ளது. ஒரு காலத்தில் சோழநாட்டில் ஒரு பகுதியாக விளங்கி பின்னர் கோனாடு என்று அழைக்கப்பட்ட நாட்டை மிதுலை நகரிலிருந்து ஆண்ட சின்னமகிபன் என்பவன் பேரில் இந்த குளுவநாடகம் பாடப்பெற்றுள்ளது. இது அக்காலத்தில் மக்கள் மத்தியில் மதிப்புடன் நடிக்கப்பெற்றதாகஇருக்கவேண்டும். இதில் குளுவ நாடகத்தின் முழுமை காணப்பெறுகின்றது. வரலாற்று உண்மைகள், சமய கருத்துக்கள், சமுதாய அமைப்பு முறை அரசியல், செய்திகள் ஆகியவை நிறைந்துள்ளன. இலக்கிய நயமும் கவிதை சிறப்பும் இணைந்து பொலிந்துள்ளன. இவற்றை ஆய்ந்தறிதல் நலமானதாகும்.

### நூலின் நாடகம்

சின்னமகிபன் தென்மிதிலையை ஆண்ட காலத்தில் இந்தக் குளுவ நாடகம் அரங்கேற்றப் பெற்றிருக்கவேண்டும். ஆகை

---

21. The Discriptive Catalogue of Tamil Manuscripts, Dr. V. Swamynataiyar Library, Tiruvanmiyur, Vol. IV, 1962.

யினால் அவனுடைய காலமே இந்நூல் தோன்றிய காலமாக அமையும். சின்னமகிபனைப் போற்றும் கவிஞர்,

'காண்டீபன் மருதுபாண் டியன்மகிழுங்
கர்ணன் சின்னன்'[22]

என்றும்,

'மருதுபாண் டியமால் மகிழும் பிரதாபன்'[23]

என்றும்,

'காண்டீபன் மருதுபாண் டியமால் சுத்தவீரன்'[24]

என்றும் திரும்பத் திரும்ப மருது பாண்டியனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆகையினால் சின்னன் மிதிலை நகரிலிருந்து கோனாட்டை ஆளும்போது மருது பாண்டியர் சிவகங்கையை ஆண்டிருக்க வேண்டும். இவருடைய ஆட்சி காலம் கி. பி. 1780 முதல் 1801 வரை என்பது அனைவரும் நன்கு அறிந்த உண்மை. ஆகையினால் இந்த 21 ஆண்டுக்குள்தான் சின்னமகிபன் குளுவநாடகம் எழுதப் பெற்றிருக்க வேண்டும்.

இந்தக் குளுவ நாடகத்தில் குளுவன் சிங்கனை நோக்கி,

'சின்மதுரை யெனும்வண் மதுரை நோக்கி—நீயும்
சென்று வெகு சாரியாக வந்திரை பெறுகாரி
பன்மணி மாடப்புறா நல்லநன் மணியிலே—ரெண்டு
பத்துகை யுடன்வைத்துப் பணிந்திடு மெய்யே.

ஆண்டவன்ரா யரகுநாத சாமியைக் காணங்கே—ரெண்டு
அன்னமுமாய்ப் பச்சிகொண்டு பார்கலி நீங்க
காண்டீபன் மருதுபாண் டியமால் சுத்தவீரன்—தனைக்
கண்டுவணங் கிராசாவி கொடுரதி மாரனே'[25]

என்று கூறுகிறான். இதை நோக்கும்போது மதுரையில் ரகுநாதரும் சிவகங்கையில் மருது பாண்டிரும் ஒரே சமயத்தில் இருந்த செய்தி புலனாகிறது. உண்மை வரலாற்றைப் பார்க்கும்போது மதுரையை ஆண்ட விஜயரகுநாத சொக்கநாத நாயக்கர் 1732 ஆம் ஆண்டு இறந்து விடுகிறார். மேலும் மதுரையிலுள்ள நாயக்கர் ஆட்சி, மீனாக்ஷி என்ற அரசி 1736இல் இறந்தவுடன் முற்று பெற்று விடுகிறது. ஆகையினால் மருதுபாண்டியர் அர

---

22. சின்னமகிபன் குளுவ நாடகம், தோடையம் 5.
23. ,, ,, பா. 10. 29.
24. ,, ,, 35, v.
25. ,, ,, 35, iv-v.

சாண்ட 1780 முதல் 1801 வரையுள்ள காலத்தில் மதுரையில் ரகு நாதர் என்ற அரசர் ஒருவர் இருக்க வாய்ப்பு இல்லை. இருப்பினும் சின்னமகிபன் குளுவ நாடகம் 'சின்மதுரை யெனும்வண் மதுரை நோக்கி'...... 'ஆண்டவன்ராயரகுநாத சாமியைக் காணங்கே' என்று கூறுவது சிந்தனைக்கு வேலை தருவதாக உள்ளது.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த கீழச்சிவல்பட்டிக்குச் சிறு மதுரை என்னும் பெயர்வழக்கத்தில்உள்ளது. அங்கு மீனாக்ஷியம்மன் கோயில் ஊரில் நடுப்புறம் அமையத் தெருக்கள் கோயிலைச் சுற்றிச்சுற்றி உருவாக்கப் பெற்றுள்ளன. இந்த அமைப்பு பற்றி கீழச்சிவல்பட்டியைச் 'சிறுமதுரை' என்று அழைத்துள்ளனர். இத்தகைய ஒரு சிறப்பு கருதியே கவியோகி சுத்தானந்த பாரதி கீழ்ச்சிவல்பட்டிப் பாடசாலையின் வாழ்த்துப் பாடலில்,

'சீர்விளங்கும் சிறுமதுரைச் சிவல்பட்டி'

என்ற அடியைக் கூறியுள்ளார். நகரத்தார் இவ்வுண்மையை நன்கறிவர்.

இதிலிருந்து குளுவன் குறிப்பிடும் 'சின்மதுரை' கீழச்செவல் பட்டியாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதலாம். இந்தஊர் இராமநாதபுரம் சீமையை ஆண்டசேதுபதிகளுக்குக் கீழ் உள்ளது. மருதுபாண்டியர் சிவகங்கையை ஆளும்போது இராமநாதபுரத்தில் ஒரு பகுதியை விஜயரகுநாத தேவர் அரசாண்டார். அதேசமயம் கிழவன் சேதுபதியின் மூத்த மகனான வடுகநாதர் மறவர்நாட்டுப் பகுதிகள் சிலவற்றிற்கு தலைவராக இருந்தார். சின்னமகிபனைப் பற்றிக் குறிப்பிடும்போது,

'வள்ளல்நற் குணமுடையான் வடுகநா தேந்திரன்
உள்ளமே மகிழு முல்லாச யோகன்'[26]

என்று கூறப்படுகிறது, இவை அனைத்தையும் ஒன்றுதிரட்டிக் காணும்போது விஜயரகுநாத தேவர், வடுகநாதர், மருதுபாண்டியர், சின்னமகிபன் ஆகியோர் ஒரே காலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது விளங்கும். இவர்கள் அனைவரும் வாழ்ந்த காலத்தில் தான் 'சின்னமகிபன் குளுவ நாடகம்' பாடப் பெற்றுள்ளது. விஜயரகுநாந தேவர் 1790ஆம் ஆண்டு இறந்து விடுகிறார். இதைக் கொண்டு நோக்கும்போது இந்தக் குளுவ நாடகம் 1780 ஆம் ஆண்டுக்குப் பின் 1790ஆம் ஆண்டுக்கு முன் எழுதப்பெற்றிருக்க வேண்டும்.

சின்னமகிபனைப் பாராட்டிக் குறிப்பிடும் குளுவ நாடக ஆசிரியர்,

---

26. மேற்படி, சந்தம், 48-49.

'தென்மிதுலை யழகியச் சிற்றம் பலேந்திரத்
தீரன் மகிழ்சின்னன்'[27]

என்று கூறுகிறார். இதிலிருந்து அழகிய சிற்றம்பல கவிராயர் என்பார் சின்னமகிபனின் அவையில் சிறந்த கவிஞராக விளங்கனார் என்பது புலனாகும். இன்னொரு இடத்தில்,

'பஞ்ச லக்ஷணமும் பகர்குரு பீடம்
புனஞ்சொல்நன் னூல்நெறி போதித்த வள்ளல்
புவியெலாம் புகழும் புனிதமால் மல்லைக்
கவிச்சக் கரவர்த்தி கதித்த வதானி
அழகுசேர் கின்ற யானையின் கன்று
வளநாடு பெற்ற மார்க்கண் டயோகன்
திவ்விய மழகிய சிற்றம் பலேந்திரக்
கவிராச போச காண்டீபன் மகிழ்வோன்'[28]

என்று விரிவாகக் கூறப்படுவது சிந்திப்பதற்கு உரிய இடமாகும். இத்தகைய சிறப்புடைய ஒரு கவிஞரை கி.பி. 1647இல் எழுதப் பெற்ற ஓர் ஓலைப் பட்டயம் கூறுகிறது.

'மல்லையூர்த் தில்லை நாயக்கப் பண்டாரத்தின் குமாரன் சிற்றம்பலப் பண்டாரத்துக்கு வேழ் மாமலையான் ஸ்ரீ திருமலைப் பூச்சய நாயக்சர் குமாரரான வீரப்ப பூச்சய நாயக்கர் இரண்டு ஊர்களைச் சர்வ மானியமாகக் கொடுத்து'[29] என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

'தருவள ரிந்திரன் வீரப் பூச்சய சாமி யெங்கோன்
பொருணிறைப் பிள்ளைத் தமிழ்ப்பிரபந்தம் புகன்ற தற்காய்
அருள்கொள் சிற்றம்பல வாணர்க்குக் காரைச் சூரான் பட்டியும்
வருகண்ண மங்கலப் பட்டியு மீந்த னன்வா ழியவே'[30]

என்ற பாடலும் இவ்வுண்மையை உணர்த்தும். இவரே மிதிலைப் பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் எனப் புகழ் பெற்றவர் என்றும் அவர் காலத்தில் குறுநிலத் தலைவர்களாகச் சேது நாட்டு விஜய

---

27. மேற்படி, 2, 2.
28. மேற்படி, 10, சந்தம், 30-37.
29. ஔவைநாயகம், "பிள்ளைத் தமிழுக்குப் பட்டயம்", கல்வெட்டு, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் காலாண்டு இதழ், பக். 21-26. ஆனந்த ஆண்டு ஆடித்திங்கள்).
30. மேற்படி.

ரகுநாத சேதுபதியும் சேலம் கட்டி முதலியும் இருந்ததாகக் குறிப் பிடப்பட்டுள்ளது.[31]

சிவந்தெழுந்த பல்லவராயன்உலாவுக்குவிளக்கம் தரும்போது சிற்றம்பலக் கவிராயர், திருமலை நாயக்கர், சிவந்தெழுந்த பல்லவராயர் ஆகிய மூவரும் ஒரு காலத்தவர் என்ற குறிப்பு தரப் பெறுகிறது,[32] இவ்வுண்மைகளைக்கொண்டு நோக்கினால் சின்ன மகிபன் அவையில் விளங்கிய அழகிய சிற்றம்பலக் கவிராயர் ஓலைப் பட்டயத்திலும், சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவிலும் குறிப்பிடப் பெறும் கவிராயராக இருக்கவே முடியாது. கால வேறுபாடு இருவருக்கும் இடையில் உள்ளது.

மிதிலைப்பட்டியில் மல்லையூர் சிற்றம்பலக் கவிராயரின் பரம்பரையே கவிச் சிறப்புடன் பல நூற்றாண்டுகளாக விளங்குவ தாக டாக்டர் உ.வே. சா. தன் வாழ்க்கை அனுபவம் கொண்டு குறிப்பிடுகிறார். இவர் ஏட்டுச் சுவடிகள் தேடி மிதிலைப்பட்டிக் சென்றபோது இவருக்கு உதவியவரும் ஒரு அழகிய சிற்றம்பலக் கவிராயரே என்று குறிப்பிடுகிறார்.[33] இவற்றைக் கொண்டு ஓர் உண்மையை உணரலாம். சின்னமகிபன் குளுவ நாடகத்தில் குறிப்பிடப் பெறும் அழகிய சிற்றம்பலக் கவிராயர் சிவந்தெழுந்த பல்லவராயனின் உலாவிலும் ஓலைப் பட்டயத்திலும் கூறப் பெற்றுள்ள கவிராயரின் கொள்ளு பேரனாகவும் டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு உதவிய கவிராயரின் பூட்டனாராகவும் இருக்க வேண்டும். பழம்பெருமைகள் பரம்பரை பரம்பரையாக அக் குடும்பத்தில் தோன்றும் திறமையாளரோடு ஒட்டிக்கொள்வது உலக இயல்பாகும்.

மேலே காட்டப் பெற்றுள்ள சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சின்னமகிபனின் காலம் பற்றிய ஐயப்பாடுகளை அகற்றிக் கொள்ளலாம். மிதிலையிலிருந்து அரசாண்ட சின்ன மகிபன் மீது பாடப் பெற்ற குளுவ நாடகத்தின் காலம் கி.பி. 1780 முதல் 1790க்குள் உள்ள ஆண்டுகள் என்று ஒப்புக் கொள்வது தான் மிகப் பொருத்தமாகத் தோன்றுகிறது.

ஆசிரியர்

மிதிலைப்பட்டியே சின்னமகிபனுடைய கோநகராக விளங் கியது. இது சிவகங்கைச் சீமையுடன் அரசியல் தொடர்புடையது.

31. டாக்டர் உ. வே. சா. குறிப்புக்கள், டாக்டர் உ. வே.சா. நூலகம், திருவான்மியூர்.
32. இரா, நாகசாமி, ‘‘சிவந்தெழுந்த பல்லவராயன் உலா,’’ கல்வெட்டு, தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறைக் காலாண்டுமலர் (இராட்சச ஆண்டு ஆடித் திங்கள்) பக்.9-15.
33. டாக்டர் உ.வே. சாமிநாதய்யர், நான் கண்டதும் கேட்டதும், பக். 52.

புதுக்கோட்டையைச் சார்ந்த திருமெய்யம் என்னும் இடத்திலிருந்து சில மைல் தூரத்தில் உள்ளது. மிதிலையில் அழகிய சிற்றம்பலக் கவிராயரே சீரும் சிறப்பும் கொண்டு விளங்கிய புலவராவார். இவரைப் பற்றிய குறிப்புகள் சின்னமகிபன் குளுவ நாடகத்தில் பல இடங்களில் வருகின்றன. அனைத்திலும் அவர் மிகவும் சிறப்பாகப் போற்றிப் புகழப்படுகிறார். அவற்றை நோக்கும்போது இக்குளுவ நாடக ஆசிரியர் அவரைப் பெரிதும் மதித்து அவருடைய திறமைக்குப் பணிவதாகவே தோன்றுகுறது.

சின்னமகிபன் மிதிலையில் ஆட்சிசெய்யும்போது சிவகங்கையில் மருதுபாண்டியரால் 21 தமிழ் வித்துவான்கள் ஆதரிக்கப் பெற்று வந்துள்ளனர். அவர்களில் சிறப்புற்று விளங்கியவர்கள் சவ்வாது புலவரும் முத்து வேலுப் புலவர் முதலியோர்.[34] அந்த இருபத்தொன்று புலவர்களில் ஒருவர் இந்தக் குளுவ நாடகத்தைப் பாடுவதற்கும் வாய்ப்பு உண்டு. பல இடங்களில் மருதுபாண்டியர் சிறப்பாகவும் குறிப்பிடப் பெறுவது சிந்திக்கத் தகுவதாகும்.

பொதுவாகக் குளுவ நூலாசிரியர்கள் தங்களுடைய பெயரை நூலுக்குள் பாட்டுடன் பாட்டாகப் புகுத்தியுள்ளதைக் கோட்டூர் நயினார் குளுவ நாடகத்திலும், ஏழு நகரத்தார் குளுவ நாடகத்திலும் காணமுடிகிறது. இதே போன்று 19ஆம் நூற்றாண்டு நாட்டார் நாடக ஆசிரியர் பலரும் செய்துள்ளதைப் பார்க்கலாம் இம்முறையைச் சின்ன மகிபன் குளுவன் நாடக ஆசிரியரும் செய்திருக்கலாம். பெரும்பாலும் குளுவ நாடக ஆசிரியர் தங்கள் பெயர்களை அகவல் பாடும்போதே புகுத்தியுள்ளனர். சின்னமகிபன் குளுவ நாடகத்தில்,

‘தென்னவ னிணைசேர் சின்னன் பூபன்
மீதினில் புலவர் மிகமன மகிழத்
தாதுசேர் குளுவன் தமிழ்தனை யுரைக்கப்
பரகுதுப் பட்டிப் பசும்பொன்முத் தாண்டிக்கு
வரகுசே கரனடி வளையும் தந்து’[35]

என்ற அடிகள் இடம் பெறுகின்றன. இவற்றிலிருந்து இந்தக் குளுவன் நாடகத்தைப் பரகுதுப்பட்டியைச் சேர்ந்த முத்தாண்டிப் புலவர் இயற்றி இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. ‘பசும்பொன்’ என்பது அடைமொழியாக இருக்கலாம். வரலாற்று அளவில் பார்த்தால் பசும்பொன்னில் பல புலவர் பெருமக்கள் தோன்றியுள்ளதை அறியலாம். சங்க காலத்திலிருந்தே அப்பகுதியில் புலவர் தோன்றிக் கொண்டிருப்பதாக அறிஞர் கூறுவர்.

---

34. மேற்படி, பக். 75.
35. மேற்படி, 10, 65-69

மாங்குடி மருதனாரும் அப்பகுதியைச் சார்ந்தவரே. முத்தாண்டி என்ற பெயரும் அந்த இடங்களில் உள்ளதாகச் சொல்கிறார்கள். இவற்றிலிருந்து இந்த நூலைப் பசும்பொன்னை அடுத்த முத்தாண்டிப் புலவர் இயற்றி இருக்கலாம் என்று கூறலாம்.

நோக்கம்

சின்னமகிபன் கற்றோரை ஆதரிக்கும் சிறந்த மன்னனாக விளங்கினான். அவனுடைய அவையில் கவிவாணரான அழகிய சிற்றம்பலக் கவிராயர் பெருமதிப்புடன் வீற்றிருந்தார். ஆகையினால் மன்னன்,

'அழகிய சிற்றம் பலக்கவி ராசமால்
மருவு மிருதய மகிழும் சின்னன்'[36]

என்று போற்றப்படுகிறான். அவன் தமிழை மிகவும் ஆதரிக்கும் தன்மையுடையவன் என்பதை,

'பைந்தமிழ் துலங்கும் பாரதக் கையான்'[37]

என்ற தொடரால் அறியலாம். மேலும் அவன்,

'அடுத்துவர் தம்மை ஆதரித் தன்னங்
கொடுத்து ரக்ஷிக்கும் குருகுலத் தரசன்'[38]

தமிழ்க் கவிஞர்களை மதித்துப் பாராட்டி அவர்களுக்கு வரிசை தரும் பண்பினன். ஆகையினால் அவன்,

'பன்னுத மிழுக்குத வுந்தயாள
பாக்கிய சின்னன்'[39]

என்று பாராட்டப் பெறுகிறான். ஆகையினால்

'தென்னவ னிணைசேர் சின்னன் பூபன்
மீதினில் புலவர் மிகமன மகிழ்ந்து
தந்துசேர் குளுவன் தமிழ்தனை யுரைக்க'[40]

விரும்பியதில் வியப்பில்லை.

கவியுணர்வு மிக்க புலவர்கள் தங்கள் கவித்திறனைப் புலப்படுத்த விரும்புவது இயல்பு. அவர்கள் வாழுங் காலகட்டத்தில் மக்கள் விரும்பும் இலக்கிய அமைப்பு எதுவோ அதில் தாங்கள் கூற விளையும் கருத்துக்களைச் சிறப்புற வடித்துத் தருவர்.

---

36. மேற்படி, தோடையம் 4.
37. மேற்படி, 10, 14.
38. மேற்படி, 10, 42—43.
39. மேற்படி, 15, iv.
40. மேற்படி 10, 65—67

மேலும் தங்களுடைய திறமையினை அளவிட்டுக் காணும் திறனும் ஆதரிக்கும் மன நிலையும் உடையவர்களிடமே நூலினை அரங் கேற்ற விரும்புவர். கவிஞர்கள் நல்லவர்களைப் பாராட்டிப் புகழத் தயங்கமாட்டார்கள். பொருள் வளமும் அறிவு வளமும் உடையவர்களே கவிஞர்களை ஆதரிப்பார்கள். அத்தகைய நிலையில் சின்னமகிபன் விளங்குகிறான். அவனைப் பாராட்டிப் பாட முத்தாண்டிப் புலவர் விரும்புகிறார். பொது மக்களும் இணைந்து அவருடைய கருத்துகளுக்கு ஒப்புதல் அளிக்கவேண்டும் என்பது அவருடைய அவாவாக இருந்திருக்க வேண்டும். ஆகையி னால் புலவருடைய காலத்தில் மக்கள் விரும்பிக் காணும் நாடக இனமான குளுவ நாடக அமைப்பில் தன்னுடைய நூலை எழுது கிறார். அதனை மக்களின் முன்னால் சின்னமகிபனின் தலை மையில் அழகிய சிற்றம்பலக் கவிராயரின் பார்வையில் அரங் கேற்றி இருப்பார் என்று நம்பலாம். இந்நூல் எழுதியதற்காக முத்தாண்டிப் புலவருக்குப் பேரும் புகழும் கிடைத்ததோடு அரசனின் பாராட்டுதலும் பரிசிலும் உறுதியாகக் கிடைத் திருக்கும்.

முத்தாண்டிப் புலவர் குளுவனைச் சாதாரண வேட்டைக் காரனாகப் படைக்காமல் சித்திரக் குளுவனாகவும், ஏகாந்த யோகக் குளுவனாகவும் படைக்கிறார். ஆகையினால் அவருடைய நோக்கம் உலகியலுக்கு அப்பாலும் சென்று படர்வதைக் காண லாம். இறையுணர்வை இயல்பாக மக்களிடம் முகிழ்க்கச் செய்ய கவிஞர் விரும்புகிறார். அவரோடு அனைவரும் இறைவனை வாழ்த்த வேண்டுகிறார். கருப்பண்ணசாமி சின்னமகிபன் நாட்டில் சிறப்புற்ற தெய்வமாக விளங்குவதினால் அவரையும் போற்றி வாழ்த்துகிறார். மக்கள் மனத்தில் இறையுணர்வு பரவிப் பெருக வழிகண்டு மகிழ்கிறார்.

சின்னமகிபனைப் புகழ்வதின் மூலம் ஒரு நல்ல மன்னன் எவ் வாறு ஒழுக வேண்டும் என்பதற்குப் புலவர் இலக்கணமே வகுத்துத் தந்து விடுகிறார். எடுத்துக் காட்டாக,

'துற்குண வண்டர் சொல்மொழி கேளான்
சற்குண மானோர் தன்மொழி கேட்போன்
சந்திர சூரியர் தான்வடக் கெழினுஞ்
சுந்தர விலாசன் சொல்லுரை தவிரான்'[41]

என்ற இடத்தை எடுத்துக் கொள்ளலாம். இவ்வுரை மூலம் மனிதர் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதை அழகொழுகக் கூறும் பாங்கு புலனாகும். புகழுரை கூறி அறிவுரை பகரும் நல்வழியைப்

41. மேற்படி, 10, 38—41.

புலவர் கடைப் பிடிப்பதாகக் கருதலாம். இவ்வாறு உரைத்து மக்களுக்கு நல்லுரை கூறுவதையும் இந்நூலின் ஒரு நோக்கமாகக் கொள்ளலாம்.

நன்மை பலபுரியும் ஓர் அரசனைப் பாராட்டல், மக்களுக்கு அதன் வாயிலாக அறிவுரை கூறல், மக்களை மகிழ்விக்கும் ஒரு கலைப்படைப்பைத் தரல், கவித் திறனைத் தக்காரிடம் காட்டல், மக்களுக்கு இறையுணர்வை ஊட்டித் தத்துவக் கருத்துகளை விளக்கல், திறமைக்குத் தக்க பரிசுகளைப் பெறல் ஆகியவற்றைச் சின்னமகிபன் குளுவ நாடகத்தின் நோக்கமாகக் கொள்ளலாம்.

*அமைப்பும் பொருளும்*

அக்கால நூல் தொடங்கும் முறையை ஒட்டியே சின்ன மகிபன் குளுவ நாடகமும் தொடங்கப் பெறுகிறது. ஆவுடையாள் பங்கில் அமர்ந்து விளங்கும் திருக்கோள லிங்கனின் திருப் பாதத்தை முதலில் வணங்குகின்றார். அடுத்து விகடக் கம்ப கும்பக் கணபதியை வேண்டுகின்றார். இறுதியாக ஆவுடைய நாதரின் சிவயோக வல்லியை வேண்டிப் பணிகின்றார். காப்புப் பகுதி மூன்று விருத்தங்களாக அமைகிறது.

தோடையம் வணக்கப் பகுதியாகவே உள்ளது. குளுவ நாடகம் இயற்றுவதற்குக் கருணை வள்ளலாகியத் திருவுடைய வரின் கமலச் சேவடிகளைத் துணையாகப் பற்றுகின்றார். பின் அன்னை சவுந்தரி நாயகி, கரடிப் பெருமாள், கருப்பண்ணர் ஆகியோர் வேண்டப் படுகின்றனர். ஊர்த் தெய்வமான மங்கை செட்டிச்சியம்மனை வணங்கி மேலும் கருப்பண்ணரின் பொற் பாதங்களை ஆசிரியர் பற்றிப் பிடிக்கின்றார்.

பின்னர் மங்களம் பாடுகின்றார். சிவன், முருகன், திருமால், சின்ன மகிபன் ஆகியோருக்குச் சுப மங்களம் வாய்க்க விரும்பு கின்றார்.

மற்ற குளுவ நாடகங்களைப் போன்று சின்ன மகிபன் குளுவ நாடகமும் அகவல் பாவில் தொடங்கப்பெறுகிறது. சின்ன மகிபனின் புகழைப் பாடி அவனுடைய நாட்டின் வளத்தைப் பாடு கின்றார் கவிஞர். இயற்கை வளம் நிறைந்துள்ளதைப் பாடு கிறார். பலவகை மரம் செடி கொடிகள் வளர்ந்து பூத்துக் குலுங்குகின்றன. அவை பொலிவுற்றுள்ளதை,

'மல்லிகை முல்லை மாதுளை பலவும்
நெல்லிமா விலுப்பை நிறைந்தசெண் பகமும்
கன்னலுங் கதலி கமுகுதெங் குகளும்
புன்மைமா வனமும் பொருந்தியே வளர்ந்து'[42]

42. சின்ன மகிபன் குளுவ நாடகம், 9 (அகவல்), 5—8.

என்று மரங்களின் பெயர்களை அடுக்கிக் கூறி விளக்க முயல்கிறார். இயற்கையின் கொலுவிருப்பில் உயிரினங்கள் கொஞ்சி விளையாடும் சிறப்பை அழகொழுகக் காட்டுகிறார்.

'நானிலஞ் செழிக்க நன்மனை செழிக்க
மந்திவா னரங்கள் மரங்களி லுலவ
சிந்திய கனியில் தேன்மிகச் சொரிய
குயில்பல கூவ குவலயம் புகழ
மயில்விளை யாட வரிவண்டு பாட'[43]

இயற்கை களிநடம் புரிகிறது. சின்னமகிபனின் நாட்டின் சிறப்புகளைக் கூறும் முறை நன்றாக அமைகிறது.

'முனியுமன் பதினெண் முதலமைச் சித்தரும்
கனிவு டன்வருங் கன்னிமா மலையான்
குவலயஞ் செழிக்கக் கொண்டல் நீர்பொழிய
சிவதவ முயருந் திருமணி நதியான்
நானாடு மெய்க்க நவமணி கொழிக்குங்
கோனா டுடைய குபேர துல்லியன்
பொன்னுல கிணையாய்ப் பூவல கதனில்
மின்னுசெம் பொன்னுயர் மிதுலையம் பதியான்'[44]

என்று கவிஞர் காட்டுவது ஒரு மரபு முறையான அமைப்புமுறையினைக் கொண்டுள்ளது. கன்னிமாமலை, மழை,திருமணிநதி, கோனாடு, மிதிலை நகர் ஆகியவற்றை வரிசைப்படுத்திக் காட்டுவதைக் காணலாம்.

மலைவளம், மழைவளம், நதிப் பெருக்கு, நாட்டுச் சிறப்பு, நகர்ச் சிறப்பு ஆகியவற்றைப் பள்ளு போன்ற இலக்கியங்களில் வரிசையாக விளக்கிப் பாடும் மரபை இங்குஒப்பிட்டுக் காணலாம். காப்பியங்களிலும் இவ்வகை அமைப்பைப் பார்க்கலாம். அதே அமைப்பினைப் பின்பற்றி மிகச் சுருக்கமாகக் குளுவ நாடகத்தில் இம்முறை கையாளப் பெற்றுள்ளதாகத் தோன்றுகிறது. சுருங்கிய முறையில் சுவைபடக் கூறும் முறையானது மரபுக்கு முரண்படாது இக்குளுவ நாடகத்தில் கையாளப்பட்டுள்ளது.

அகவலைப் பின்தொடரும் சந்த இசைப் பாடலில் குளுவ நாடக ஆசிரியர் தன்னுடைய பாத்திரங்களை அறிமுகம் செய்கிறார். முதலில் பாட்டுடைத் தலைவரான சின்னமகிபனைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இவன் நாடகத்தில் நேரடியாகப் பங்கு கொள்வதில்லை. ஆனால் நாடகச் செயலோட்டத்தில்

---

43. மேற்படி, 9, 10—14.
44. மேற்படி, 9, 21—28.

உயிரோட்டமாக விளங்குகிறான். இவனுடைய புகழ் பாடுவதே இந்நூலின் முக்கிய நோக்கம். இதில் வரும் அனைத்து நிகழ்ச்சிகளும், பங்கு கொள்ளும் எல்லாப் பாத்திரங்களும் இவனைச் சுற்றியே வட்டமிடுகின்றன. இவனின்றி இந்தக் குளுவ நாடகத்தில் உயிர்ப்பில்லை. ஆசிரியர், நடிப்போர், கண்டு களிப்போர், அனைவருமே இவனுடைய அன்பையும் அரவணைப்பையும் எதிர் நோக்கும் தன்மையினர். ஆகையினால் பாட்டுடைத் தலைவினைப் பளீரெனக் காட்டக் கவிஞர் விரும்புவது இயல்பே ஆகும். எடுத்த எடுப்பிலேயே சின்ன மகிபனின் புறத்தோற்றத்தைக் கண்ணாடியின் பிரதி பலிப்பு போன்று காட்டி விடுகிறார். அதில் ஒரு விறுவிறுப்பு இருக்கவேண்டும் என்று கவிஞர் விரும்புவதினால் சந்த இசை கொண்ட கவிதை நடையை பின்பற்றுகிறார்.

'நதிரத்தின மணிசித்திர வயிரக் கல்லைவைத்து
நலமுற்ற சருகைப் பொன் னுருவுற்ற குமுழ்வைத்து
நிதிபெற்ற தரளத்தின் ஒளிமொய்த்த வயிரத்தின்
இசைபெற்ற சுடிகைக்குள் இலங்கிட்ட கொலிசிட்டு
நேர்ந்த தொங்கலின் மணிக்கலம் கலீரென
ஆய்ந்த சங்கிலி விருதொடு பளீரென
வாய்ந்த குங்குமத் திலகம் இலங்கிய
வேந்தர் கண்டவர் மனத்ததி சயமொடு'[45]

நோக்குமாறு செய்துவிடுகிறார் கவிஞர். வியப்பு, களிப்பு, மதிப்பு ஆகியவை இணையத் தோன்றுமாறு கவிதை பாடுகிறார். சின்ன மகிபன் பேரில் அனைவருக்கும் பற்றும், பரிவும் ஏற்படுமாறு சொற்களை அமைத்து இசையைப் பெருக்கி விடுகிறார். அவனுடைய குதிரை, குடை, முரசு, கொடி, பேராற்றல், இறைப்பற்று அறப்போக்கு, கொடைத் தன்மை முதலியவற்றைக் கவிஞர் ஒவ்வொன்றாகக் கூறுகிறார்.

சின்னமகிபனின் தந்தை அரச நண்பர், அவைப்புலவர், ஆகியோரை அறியவுரைக்கிறார். அவனுடைய அரிய பண்புகளை விளக்கிக் காட்ட கவிஞருக்குச் சலிப்பே தோன்றவில்லை. அவன் தீயோர் சொல்லைக் கேளான். ஆனால் நல்லோர் சொல்லைத் தட்டான். தான் சொன்ன சொல் தவறான். அடுத்தவரை அன்புடன் ஆதரித்து அன்னம் கொடுப்பவன்.

'வில்லினில் ராமன் மெல்லியர் காமன்
மல்லினில் வீமன் முல்லையம் தாரன்

---

45, மேற்படி, 10 (சந்தம்), 1—8.

வாசனை பொருந்தி வளரும் மாப்பிள்ளை
சிற்றம் பலய்யர் தினந்தினம் மகிழ்வோன்'[46]

சின்ன மகிபனுடைய பண்புகளைக் கூறிய பின்பே அவனுடைய பிள்ளைகளைப் பற்றியும், அரசாங்க முக்கிய அலுவலர் பற்றியும் கவிஞர் பேசுகிறார். இத்தகைய சிறப்புகள் மிக்க,

'கனகாம் பிரியன் கர்ன வுதாரன்
செந்திரு மார்பன் சீயக் கோபன்
அய்ந்தரு வுதாரன் அசகாய சூரன்
பொன்னுயர் நேயன் புகழ்கவி வாயன்
தென்னவ னிணைசேர் சின்னன் பூபன்
மீதினில் புலவர் மிகமன மகிழ்ந்து'[47]

குளுவ நாடகம் பாடுவதாகக் கூறித் தன்னைப் பரகுதுப்பட்டிப் பசும்பொன் முத்தாண்டி என்று மிகப் பணிவுடன் அறிமுகம் செய்து கொள்கிறார். பின்னரே நாடக நிகழ்ச்சிக்குள் நுழைகிறார்.

நாடகத்தின் முக்கிய பாத்திரம் குளுவன். ஆகையினால் அவனைச் சிறப்பாகவும் விரிவாவும் விளக்கிக் காட்டுகிறார். குளுவன் மிதிலை மாநகரில் பறவை வேட்டையாட வரும்போது,

'கன்னிமா மலையில் கதித்ததேன் சுனையில்
நன்னீ ராடி ரம்மிய மாக
முருகரை வணங்கி முகத்தில்நீ றணிந்து
திருநுதல் விளங்கத் திலதமுந் தரித்து
சல்லடந் தொடுத்துச் சருகைலேஞ் சணிந்து
நல்லபொன் கச்சை நலமுடன் வரிந்து'[48]

வருகிறான். பறவை பிடிப்பதையும் புனிதமாகக் கருதிக் குளுவன் செயல் படுவதாகத் தோன்றுகிறது. தன்னை அழகு படுத்து கிறான். கட்டியுள்ள ஆடை இறுக்கமாக உள்ளது. அது அவன் செய்யப் போகும் தொழிலுக்குத் தக்கவாறு அமைகிறது.

அணிகலங்களும் அணிந்துள்ளான். அவை அவனுக்குத் தக்க தாகவும் கவர்ச்சியாகவும் உள்ளன.

'பத்தரை மாத்துப் பசுந்தங்கக் கடுக்கன்
மெத்தவே தரித்து மேன்முரு கணிந்து
சரப்பணி கண்டி தளதள தளென
விரக்க ணையாழி மினுமினு மினென

46. மேற்படி, 10, 44—47
47. மேற்படி, 10, 61—66
48. மேற்படி, 10, 75—80.

அக்குவக் கரமணி அழகுடன் தரித்து
கொக்குமா பச்சி கொண்டையில் சொருகிச்
செம்பொன் தாயித்தில் சிறுநரிக் கொம்பு
இம்பமா யடக்கி யிருகையி லணிந்து.'[49]

குளுவன் வருகிறான். பொன்னணிகள், உருத்திராச்ச மாலை, கொக்கிறகு, நரிப்பல் ஆகிய பலவகை அணிகள் உள்ளன. குளுவன் தலைவனுக்குள்ள நிலைமையும் காட்டு வாழ்வுக்கு உரிய பொருள் களும் இவ்வணிகள் மூலம் காட்டப்படுகின்றன.

வேட்டையாடுவதற்குரிய ஆயுதங்களைக் குளுவன் தாங்கி வருவதைக் கவிஞர் மிகப் பொருத்தமாகக் காட்டுகிறார்.

'சுண்டுவில் லம்பு துலங்குகூ னருவாள்
மண்டலம் புகழ வளரிதொட் டிலங்க
கொக்கு முக்கூடுங் குருவெண் ணாரை
சிக்குகண் ணிகளுஞ் சேரவே யெடுத்து'[50]

வருகிறான் குளுவன். அத்தனையும் விதவிதமான பறவைகளைப் பிடிப்பதற்கும் கொல்வதற்கும் உரிய கருவிகளே. மிருக வேட் டைக்கு இவை பொருந்தாது என்பதைக் கவனிக்க வேண்டும். குளுவன் வரும்போது அவனைச் சார்ந்து மிக மகிழ்ச்சியோடு விளையாடியவாறு சிங்கனும் வருகிறான். அவர்கள் இருவரும் உடலும் மனமும் தெம்பேறக் குடித்திருக்கின்றனர்.

'அரக்குடன் கள்ளும் அறிவுடன் குடித்து
வெறிக்கெனப் பார்த்து வீசையைத் திருத்திச்
சிலம்புக ளொலிக்கத் திகிதிகி திகியென
நிலம்புகழ் களரி நிறைந்து கொண்டாடச்
சிலைமதன் போலச் சிறந்திடு கன்னி
மலைவளர் குளுவன் வந்து தோன்றினவே'[51]

அரக்கையும்கள்ளையும்கலந்துஉண்டபோதிலும்அவர்களுக்குஅறிவு மழுங்கவில்லை. ஆனால் வேகமும் துடிப்பும் காணப்படுகின்றன. ஆகையினால் மீசையை முறுக்கி விடுகின்றனர். நடையின் மிடுக் கைக் காலில் அணிந்துள்ள ஒலியில் ஆசிரியர் காட்டுகிறார். குளு வனின் தோற்றப் பொலிவை மன்மதனோடு ஒப்பிட்டுக் காட்டு கிறார். அவன் மலை நாட்டைச் சேர்ந்தவன். சின்னமகிபனின் நாட்டில் வேட்டையாட விரும்பி வந்துள்ளான்.

நாடகத்தில் கலந்து ஆடும் குளுவன், சிங்கன் ஆகிய இரு வரையும் தோற்றப் பொலிவு காட்டி ஆசிரியர் அறிமுகப்படுத்து

---

49. மேற்படி, 10, 81—88
50. மேற்படி, 10, 89–92.
51. மேற்படி, 10, 95--100.

கிறார். நாடக முற்பகுதியில் சிங்கிக்கு இடம் இல்லை என்ப தினால் அவளை அரங்கிற்கு இச்சமயம் அழைக்காமல் விடுகிறார்' இதுவரை ஆசிரியரே காட்சியை விளக்கிக் கொண்டு வந்தார். நாடகத்தில் பங்கேற்கும் பாத்திரங்கள் அரங்கத்துக்கு வந்து விட்ட தினால் இதற்கு மேல் அவர்களையே பேச வைக்கிறார். இசை பொருந்தும் இன்னிசை பாடல்கள் மூலம் பாத்திரங்களைக் கொண்டு நாடகச் செயல்களை விளக்கிக் காட்ட ஆசிரியர் முற் படுகிறார். காட்சிமாறுகிறது. குளுவன் ஆடிப் பாடுகிறான்.

'ஏகாந்தக் யோகக் குளுவன் நானே'[52]

என்று குளுவன் தன்னைத் தானே அறிமுகப்படுத்துகிறான். தனி மையில் இருந்து யோகம் செய்யும் தன்மையுடையவனாகத் தன் னைப் பற்றிக் கூறுகிறான். அதில் அவனுடைய தனித்தன்மையும் சிறப்புத் தன்மையும் விளங்குகிறது. அவனை யாரும் சாதாரண மாய் கருத முடியாதபடி அவனுடைய முதலுரையே அமைந்து விடுகிறது. அவன் நடத்தவிருக்கும் பறவை வேட்டை அவனுக்கு இன்பத்தைக் கொடுப்பதோடு விருதுகளைப் பெற்ற அரசர்களுக் கும் அகமகிழ்வைக் கொடுக்கிறது.

ஒவ்வொரு கட்டத்திலும் சின்னமகிபனைப் பாராட்ட ஆசிரியர் தவறவில்லை. இடையிடையே புலமையிற் சிறந்த சிற்றம்பலக் கவிராயரை மதிப்புடன் நினைத்துப் பாராட்டவும் மறக்கவில்லை.

'அவனி யிற்புகழ் படைக்க
அழகிய சிற் றம்பலேந் திரகவி
அவதா னிமெய்க்குங் கர்ணன்
அழகுசின் னன்மால் நாட்டில்
நவமணி மாலை பூண்டு
நல்ல கொக்கிறகுஞ் சூட்டி
குவலயந் துதித்குஞ் சித்திரக்
குளுவனும் நான டைய்யே'[53]

அழகிய சிற்றம்பலக் கவிராயர் அவனியே புகழும் அவதானி. அந் தக் கவிஞரே போற்றிப் புகழும் கொடைவள்ளலாச்சின்ன மகிபன் விளங்குகிறான். அத்தகைய பெருமையுடையவன் நாட்டில் நவ மணி மாலையும் கொக்கிறகும் சூடி உலகமே துதிக்கும்நிலையுடை யவன் சித்திரக் குளுவன். மூவருடைய நிலைகளும் நிரல்பட விளக்கப்படுகிறன. யாரையும் குன்றக் கூற முடியாது. கவிஞனை உலகம் புகழ்கிறது. வள்ளலை கவிஞன் பாராட்டுகிறான். சித்தி

52. மேற்படி, 11, பல்லவி.
53. மேற்படி, 12,

ரக் குளுவையே உலகமே துதிக்கிறது. ஆழமாகச் சிந்திக்க ஆசிரியர் அனைவரையும் தூண்டும் இடமாக இது அமைகிறது.

சின்ன மகிபன் மீதில் முத்தமிழும் கூடி இணையும் குளுவ நாடகத்தை நடிக்க வந்துள்ள சித்திரக் குளுவனாகத் தன்னைப் புலப்படுத்துகிறான். அவன் மிகத் திறமை மிக்கக் குளுவன். ஒரேயடியாகச் சின்ன மகிபனின் பண்புகளைப் பாராட்டுகிறான் அவனுடைய கொடைத் தன்மை மேலும் மேலும் எடுத்துச் சொல்லப்படுகிறது. பாடல் இனிக்கிறது. ஆடல் சிறக்கிறது. கண்டும் கேட்டும் கனிக்கும் மக்கள் தங்கள் கவலைகளை மறக்கின்றனர். மன்னன் புகழுரையால் பக்குவப்படுத்தப் பெறுகிறான்.

குளுவனுக்குத் துணையாகும் சிங்கன் வருவதும் காட்டப்படுகிறது. அவன் தன்னைச்,

'சிங்கனு நானே கொடிக்குறச்
சிங்கனு நானே'[54]

என்று அரங்கிற்கு அறிமுகப்படுத்தி ஆடிப் பாடுகிறான். 'குறச் சிங்கன்' என்ற அவனது கூற்று குறவஞ்சியை நினைக்கத் தூண்டுகிறது. அவனுடைய நிலை குளுவனை விடவும் தாழ்ந்தது. சிங்கன் குளுவனுக்குப் பணிவேலை செய்வோன் என்பதைத் தாளாகவே அறிவிக்கிறான். அதோடு தவறு செய்வோரைத் தடிகொண்டு தாக்குவோனாகவும், தமிழ்ப் பணிச் செய்வோருக்குத் தரப்படும் வரிசைகளைத் தடுப்போரின் தாடியைப் பிடித்தாட்டி உதைப்போனாகவும் காட்சி தருகிறான். அவனுடைய தன்மைகள் பாடல் மூலம் காட்சிப்படுத்தப் பெறுவதைக் காணவேண்டும். பணிவும் துணிவுமுடைய பாத்திரமகாச் சிங்கன் தோன்றுகிறான்

குளுவன் தனக்குப் பதஞ்சலி முனிவர் சொல்லி அருளிய ஒத்து வித்தைகள் பற்றி விளக்கிக் கூறப்போவதாக அறிவிக்கிறான். இந்த அறிவிப்பின்போதும் சின்ன மகிபனின் பயன் கருதாது வழங்கும் வள்ளல் தன்மையைப் ° பறை சாற்ற மறக்கவில்லை. தமிழுக்கு அவன் தவறாது உதவும் தன்மையினையும் அழுத்தமாகச் சுட்டிக் காட்டுகிறான்.

குளுவன் வியப்பான பலவிதச் சித்து வித்தைகளைப் பற்றிக் கூறுகிறான். இரும்பைத் தங்கமாக்கவும், சூரியலோகத்துக்குச் சென்று திரும்புவதையும், இரவில் சூரியனைக் காட்டும் திறமையினையும், குதிரை வாலிக் கதிரைத் தின்று மக்கள் வளமாக வாழவும், மதயானையை வரச் செய்யவும், திருமாலை நேரில் காணவும் போன்ற பல அரிய சித்து வேலைகளைச் செய்துகாட்ட தன்னால் முடியும் என்று வான் முழக்கம் செய்கிறான். இவற்றால்

---

54. மேற்படி, 15, பல்லவி,

வியப்புச் சுவை கூட்டப் படுகிறது. ஆனையைப் பானைக்குள் அடைத்துச் சுமப்பதும், பூனையை வண்டு பிடித்து விழுங்குவதும், ஆறு மரக்கால் பருவரிசிச் சோறு, ஐநூறு மூட்டை, இரண்டாட்டுக் கறி, நூறு பணியாரம்,ஒன்பது தோசை,நூற்றுஏழு மாங்கனி ஆகியவற்றை ஒரேயடியாகத் தின்று ஏப்பமிடல் போன்ற செயல்கள் நகைச்சுவை கூட்டப் பயன்படுவதாக உள்ளன.

அரசவையில் இவற்றைக் கூறிய குளுவன் பறவை வேட்டைக்குச் செல்ல சிங்கனை அழைக்கிறான். கார்மேனியன், திருக்கோளநாதர், முத்துச்செல்வி, பொன்னாவுடை வல்லி, பொன்னழகி, சிவயோக நாயகி, கரடிப் பெருமாள், கருப்பண்ணர் மின்னொளி, பொன்னம்மை நாச்சியார், சோடிச்சி அம்மையார், ஆகிய தெய்வங்களைப் பரவித் தங்களுக்கு நல்ல வேட்டை வாய்க்குமாறு அருள் செய்ய வேண்டுமென குளுவன் பணிந்து வணங்குகிறான். காட்சி மாறுகிறது. வயல் வெளி தோன்றுகிறது. கன்னிமா மலைச் சார்பிலிருந்து பறந்து வரும் பலவிதப் பறவைகளை நீர்நிறைந்த வயலிடங்களில் குளுவனும் சிங்கனும் காண்கிறார்கள். பாடலாகவே காட்சி மாற்றம் காட்டப் படுகிறது. நாடகம் காண்போர் தங்களுடைய மனத்திரையில் மாறிய காட்சியைச் செவியால் கேட்டு மனக் கண்ணால் கண்டு களிக்க வேண்டும்.

அரங்கத்தில் வேட்டைக் கோலத்தில் குளுவனும் சிங்கனும் நிற்கின்றனர். வயல்வெளியில் பறந்து குழுமும் பறவைகளைக் கண்டதாகப் பாடுகின்றனர்.

'கண்டே னடைய்யே பறவையைக்
கண்டே னடைய்யே'[55]

மீன்களைக் கொத்தித் தின்னுவதற்காகப் பெருங் கொந்தளிப்புடன் பறந்துவருகின்றன. வல்லப்பண்ணை.பரவைநடுவாய்க்கால், ஆயிரம் வாய்க்கால், கும்பிக் கிணற்றடிசெய், நீலச்சிறகு நடுச்செய், ஆலங் கண்மாய்க் குள வாய்க்கால் எங்கும் பறவைகளின் கூட்டம் தோன்றுகிறது. இவை அனைத்தும் சின்னமகிபனின் நாட்டிலுள்ள வயல்கள். ஆகையினால் அவனும் வாழ்த்துப் பெறும் வாய்ப்பைப் பெறுகிறான். வேலும் மயிலும் துணையாக உள்ளன. பறவைகள் வந்துகொண்டே இருக்கின்றன.

பாடல் களிநடம் புரிகிறது. அடுக்கடுக்காய்ச் சொற்கள் விளையாடுகின்றன. அவற்றிற்குத் தக்கவாறு குளுவனும் சிங்கனும் ஆடுகின்றனர். பறவைகள் வந்து அமரும் வயல்களின்

55. மேற்படி ,21, பல்லவி,

பெயர்கள் ஒன்று பலவாகப் பாடல்வழி வெளிப்படுகின்றன. உம்பளம், பெரிய மடையடி வாய்க்கால், வட்டத்தனை, மத்தியடிச்செய், கள்ள வெள்ளையன் செய், களத்து வாய்ச்செய் என்று பல வயல்களில் பறவைகள் இரை மேய்கின்றன. பறவைகளின் விரைவும் கரைவும் உரைக்கப் படுகின்றன. பாடல்கள் மூலம் புறச் செயல்கள் அகக் கண்களுக்கு அழகாகக் காட்சிப் படுத்தப் பெறுகின்றன. சொற்களில் அடக்கப் பெற்றுள்ள பொருளின் தன்மையும் இசையின் இனிமையும் நாடகச் செயலோட்டத்துக்குத் துணைபுரிகின்றன.

சின்னமகிபன் நாட்டில் பறவைகள் பலவாக வந்து பரந்த வயல் வெளியில் மேய்வது பாடலாகப் பரந்து மக்களை மகிழச் செய்கிறது. பலவிதமான பறவைகள் அங்கு மேய்கின்றன.

'முட்டைச்சிற குகருநாரை சென்னாரை
மூக்குத்திக் குருகுபெரு நாரையுள்ளாங்
கிட்டக்கிட் டயிருந்தார்ப் பரிப்புடன்
கெக்கரித்தி ரைவிக்கிவிக் கிக்கொண்டு'[56]

மேய்வதைப் படம்பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். இயற்கையான காட்சி இயல்பாக விளக்கப்படுகிறது.

பறவைகளின் இருப்பையும் போக்கையும் நன்றாக அறிந்த பின்னர் குளுவனும் சுங்கனும் கண்ணியை ஊன்றுகின்றனர்.

'தண்ணீ ரொடுபுற மேட்டில் கவுதாரி
தாராள மாகவே கோரையில் மேயிது'[57]

என்பதைக் கண்டதும் அதற்கான கண்ணியைக் கொண்டு வருமாறு குளுவன் சிங்கனைப் பணிக்கிறான்.

'கல்லிடும் பச்சி பல்லைக் காட்டுதடா
தமிழருமை யறியா மல்சல சலென்று
கல்லி பண்ணுவோ ருடையபேச் சைக்கேளான்
காண்டீபன் சின்னன் வேள்கதிக்கும் நாட்டில்
நல்ல வயலேரி யோடுவாவி கூவம்
நதிதடாகந் தோறும் பறவை ரெம்ப
யெல்லையது கண்டமட்டும் மேய்ச்சல் தின்று
இரைக்குது சிங்கா கண்ணியினி நடைய்யே'[58]

இது குளுவன் சிங்கனுக்கு இடும் ஆணை. செயல்வேகம் பெறுகிறது. இந்த வேகத்திலும்சின்ன மகிபனின் புகழ் மறக்கப் படவில்லை. அதோடு தமிழருமை பேசவும் கவிஞர் தவறவில்லை.

56. மேற்படி, 27, ii.
57. மேற்படி, 29.
58. மேற்படி, 30.

கன்னி மலையாளையும் பன்னிரு கையனையும் வாழ்த்திக் கண்ணியை ஊன்றும்படிக் குளுவன் கூறுகிறான். இறையருளே அனைத்துக்கும் ஆதாரம் என்பது கவிஞர் கருத்து. சிவ பார்வதியைப் பணியும்படி மேலும் வேண்டுகிறான் குளுவன், மக்களுக்கு இறைப்பற்றை ஊட்டும் பகுதியாக இது விளங்குகிறது.

'மிதுலைக் கண்மாய்க் கண்ணியிலே—பச்சி
மேய்ந்து வருதந்த வயலிலே
கதிருடன் பருவரப்படா அதில்தான்—கருங்
கண்ணி யைநீ நிரப்படா.

பண்ணை நிலமெலாங் கருதடா—அதைப்
பார்த்து வெகுபச்சி வருதடா
வண்ணக் குருவிகள் வருகுது—நடு
வாய்க்காலிற் தண்ணீர் பெருகுது.

ஆயிர வாய்க்கால் தன்னிலுங்—கிணத்
தடிச்செய் நடுச்செய் முன்னிலும்
போயித வாயதி லிருக்குது—மனப்
பூரணமாய்ச் செல்லஞ் செருக்குது'.[59]

என்று குளுவன் கூறுவதில் இயற்கைச் சூழலும் பறவைகளின் இருப்பும் சிங்கன் செய்ய வேண்டிய செயலும் விளக்கப் பெறுகின்றன. நாட்டின் வளம், நிலத்தின் விளைவு, நீரின் நிறைவு, பறவைகளின் பாய்ச்சல் ஆகியவை காட்டப்படுகின்றன. இவ்வாறு பதினெட்டுக் கண்ணிகளில் விளக்கம் தருகிறார் கவிஞர். இடையிடையே மன்னனின் புகழையும் அவைப் புலவரின் சிறப்பையும் ஊடுமணிகளாகக் கோத்துக் கவிஞர் உவகை பெறுகிறார். தேர்ந்த இசைப் பாடலாகத் தெளிவான கருத்துக்களை விளக்கமாகத் தருவது கேட்போருக்குக் களிபேருவகை அளிக்கும். இசையுடன் கூத்தும் கலந்து விடுவதால் கலையின்பம் பெற்றுக் களிப்பது உறுதி.

ஊன்றிய கண்ணிகளில், பறந்து திரிந்த பறவைகள் சிக்கிக் கொள்கின்றன. குளுவனுக்கும் சிங்கனுக்கும் இன்பம் கடல்மடையாகத் திறந்து பெருகுகிறது. ஆனந்தக் களிப்பில்,

'சிக்கிக் கொண்ட தையே—பறவைகள்
சிக்கிக் கொண்ட தையே'[60]

என்று கூறிக் குதிக்கிறார்கள். சிக்கிய பறவைகளை எண்ணிப் பார்த்துப் பலருக்குப் பங்கிட்டு வழங்கும் காட்சி தொடங்குகிறது.

---

59. மேற்படி, 31, ii-iv.
60. மேற்படி, 33, பல்லவி.

தகுதிப்படி வரிசையிட்டு பறவைகள் கொடுக்கப்படுவதைக் கவிஞர் தவறாது காட்டுகிறார். திருக்கோளையாவுடையார், மிதிலை ஆவுடையார், சிவயோக நாயகி, குமரக் கடவுள், ரகுநாத சேதுபதி, மருதுபாண்டியர், அழகிய சிற்றம்பலக் கவிராயர், சின்னமகிபன், என்ற வரிசையில் பறவைகள் வழங்கும் காட்சி பல உண்மைகளைப் புலப்படுத்தும்.

இறைவர்களுக்கு முதலிடம் தரப்படுகிறது. அவர்களுக்குள்ளும் பெருமை கருதி முன்னிடம் பின்னிடம் கொடுக்கப் பெறுவதைக் கண்டு உணரலாம். ரகுநாத சேதுபதி மருதுபாண்டியரை விடவும் கூடுதலாக மதிக்கப்படுகிறார். சின்னமகிபன் அவர்கள் இருவருக்கும் கீழ்ப்பட்டவனாகக் காட்டப்படுகிறான். சின்ன மகிபனை விடவும் அழகிய சிற்றம்பலக் கவிராயருக்குக் கவிஞர் முன்னிடம் கொடுத்துள்ளது கருதுவதற்கு உரியது.

இவர்களுக்குத் தனியாக முதலிடம் கொடுத்த ஆசிரியர் சத்திரபதி துரை முத்து வடுலகையரை அடுத்த விருத்தத்தில் நினைக்கிறார். அடுத்து தான் பெற வேண்டிய பரிசிலைப் பற்றிய குளுவனின் வாயுரையைக் கேட்கலாம். பரிசுப் பொருட்கள் பலரால் தரப்பெறுவதாகக் கூறப்படுகிறது.

சின்ன மகிபனிடம் சந்தனப் பில்லைக் காளையும், வயித்திய லிங்கப் பூபாலனிடம் கொத்துச் சரப்பணியும், வயித்திய லிங்க மகிபாலனிடம் வர்ண பார்துப்பட்டியும், காரியம்பலத்திடம் வஸ்திரமும் பெறுவதாகக் குளுவன் உரைக்கின்றான். சொத்திக் கருப்ப துரந்தரன். பாம்பாட்டி, எழுவக்கோன் ஆகியோருக்கும் பறவைகளைக் கொடுக்குமாறு கூறுகிறான். எழுவக்கோன் ஆட்டுக் கடாவொன்று தருவானென்று நம்புகிறான். மிதிலையூர் வாழும் நகரத்தாரையும் மதித்துப் பறவைகள் கொடுக்குமாறு குளுவன் பணிக்கின்றான்.

தொழில் பயில்வோரையும் குளுவன் மறக்கவில்லை. கொல்லக் குழந்தை ஆசாரி பறவைகள் பெற்று வாங்கரிவாள். தருவான். தச்சன் வைத்தி ஆசாரிக்குப் பறவைகள் கொடுத்து அவன் பெயரைப் புகழ்த்தினால் நன்மை பெறலாம். தட்டார் முத்து வீரப்பனுக்குக் குருகுகள் கொடுத்தால்தங்கத்தினால் முருகு செய்து தருவான். அது குறமாதருக்குப் பொருந்தும். மீதமான பறவைகளை எண்ணித் தங்களுக்கு ஒதுக்கும்படிக் குளுவன் கூறுகிறான். கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்த பின்னரே தங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளும் பண்பு குளுவனிடம் காட்டப்படுகிறது.

மிஞ்சிய பறவைகளைக் காவடியாகக் கட்டிச் சுமந்து மலைக் குச் செல்ல வேண்டும். அங்கு முருகக் கடவுளுக்குப் பூசனை செய்ய வேண்டும். அதற்காகச் சிங்கியைத் தேடிக் காணும்படிக் குளுவன் சிங்கனிடம் கூறுகிறான். பறவைக் கறி சமைத்து அதைச் சாராயம், கள் ஆகியவற்றுடன் அருந்தும் மலையினத்தாரின் பழக்கம் அறிமுகப்படுத்தப்படுகிறது. வேட்டைக் காரனாகிய கடவுளைப் பணிந்து பறவைகளைப் படையல் செய்து திருநீ றெடுத்துப் பூசுமாறு குளுவன் வேண்டுகிறான்.

வேட்டையாடிய காட்சி மாறுகிறது, சிங்கன் சிங்கியை நாடு கிறான். நாடகச் சுவை இன்பமாக மாறிக் களிப்பூட்டுகிறது. சிங்கியை மனத்துள் நினைத்து அவளைச் சிங்கன் தேடி அலை கிறான். காணவில்லை.

'எங்கே சென்றாளோ—என்சிங்கிதான்
எங்கே சென்றாளோ'[61]

என்று ஏக்கக் குரலெடுத்துப் பாடுகிறான். சிங்கியின் தொடர்பு டைய பழைய நினைப்பில் மிதக்கிறான்.

'சித்த மகிழ்வாள் நித்தியம் வருவாள்
முத்தந் தருவாள் பந்தம் மறவாள்
பொன்னி னுடையாள் சின்ன யிடையாள்
அன்ன நடையாள் வண்ணத் தொடையாள்
வஞ்சிக் கொடியாள் அஞ்சிப் படியாள்
மிஞ்சித் துடியாளென் நெஞ்சில் குடியாள்'[62]

என்று பாடித் துடிக்கிறான். வாடி வதங்குகிறான். நீரை நாடும் பயிராகி வாடுகிறான். சிங்கி திடீரென்று அவன் முன் தோன்று கிறாள். அவளுடைய வருகை வாடிய பயிருக்கு இரங்கி மழை முகில் சொரிந்தது போல் இருக்கிறது. பலநாள் கழித்து இருவரும் சந்திக்கின்றனர். இன்பம் மடைதிறந்த வெள்ளம்போல் பெருகிப் பாய்கிறது. இதைக் காட்சிப் படுத்திப் பாட்டைக் கவிஞர் அமைக்கிறார்.

'இத்தனை நாளெங் கிருந்தாய் சிங்கி—நீயும்
எந்தத் தேசம் சென்று வந்தாய் சிங்கி
கொற்றவன் சின்னன் பூபன் சிங்கா—நாட்டில்
குறிசொல்லச் சென்று வந்தேன் சிங்கா'[63]

இருவருடைய ஆவல் பெருக்கும் இப்பாடலில் கும்மியிடுவதைக் காணலாம்.

---

61. மேற்படி, 39, பல்லவி.
62. மேற்படி, 39. ii iv.
63. மேற்படி, 41.

சிங்கி பலவிதமான பரிசுப் பொருள்களுடன் வந்து நிற்கிறாள். அவள் பெற்ற வரிசைகளைக் கண்ணுற்ற சிங்கன் வியப்புடன் அவளை வினவுகிறான். அவற்றைக் கேட்டதும் சிங்கி மிகவும் பெருமை யடைகிறாள். தக்க பதில்களைக் கூறுகிறாள். அவற்றில் சின்னனுடைய கொடைப் பெருமை கொப்புளிக்கிறது.

'வரிசை பெற்றிடுங் குறச்சிங்கி—முத்து
மாலையுங் கொடுத்த தாரு சிங்கி'[64]

என்ற சிங்கனின் வினாவுக்கு,

'புருஷ ரத்தின சின்னன் சிங்கா—குறி
புகழ்ந்த துக்குக் கருளியது சிங்கா'[65]

என்ற பதிலைக் கொடுக்கிறாள்.

இதேபோன்று கணையாழி, நெளிவு ஆகியவற்றை வயித்திய லிங்கம் தந்ததாகவும், செம்பொன்னோலையைச் சுப்பன் கொடுத்ததாகவும், கடகத்தைக் குழந்தை உதவியதாகவும், சேலையை வயித்திய லிங்கம் வழங்கியதாகவும் சிங்கி சிங்கனிடம் கூறி மகிழ்கிறாள். இருவருடைய உள்ளங்களும் இன்பக் கூத்தாடு கின்றன. அவளைக் களிப்புடன் நோக்கும் சிங்கன்,

'கொடுத்து வரிசை பெற்ற சிங்கி—நாமே
கூடி விளையாடு வோம்வா சிங்கி'[66]

என்று கூறி அழைக்கிறான். சிங்கி அகமகிழ்ந்து வயித்திய லிங்கனின் நாட்டில் வாழ்ந்திடுவோம் என்று வேண்டுகிறாள். இரு வரும் கூடிச் சின்னமகிபனை வாழ்த்துகின்றனர்.

சிங்கனும் சிங்கியும் சிறிது காலம் பிரிந்து கூடிய மகிழ்வில் தாங்கள் ஆடும் கூத்துக்கு வாழி பாடுகின்றனர்.

'வாழிதென் மிதுலை நகர்வாழி—கவி
வல்லவர் முன்னூல் வளரவாழி
ஆழிசூ ழுலுகம் வாழி—சின்ன
னாதவன் வளர்ந்திடவே வாழி'[67]

என்று வாழிபாடி அவர்கள் அரங்கம் விட்டு அகன்றதும் கவிஞர் நூலுக்கு வாழி பாடி முடிக்கின்றார்.

---

64. மேற்படி, 41, iii, 1.
65. மேற்படி, 41, iii, 2.
66. மேற்படி, 41, viii.
67. மேற்படி, 41, X.

'நிதிவாழி காப்புநெறி தமிழும் வாழி
நிருபர்மிகு வேதர் சதுர்வேதம் வாழி
துதிவாழி செந்தமிழ்ப் பாவாணர் வாழி
துலங்கு பரிசனங்கள் மிகச்சுகமாய் வாழி
பதிவாழி அழகிய சிற்றம்ப லேந்திர
பாக்கியபதி மகிழ்மிதுலைப் பதியும் வாழி
மதிவாழி சின்னன் மார்க்கண்ட யோகன்
மைந்தர் பதினாறும் பெற்றுவாழி தானே'[68]

அனைவரும் மகிழ்ந்து வாழ சின்ன மகிபன் குளுவ நாடகத்தினைக் கவிஞர் பாடி முடிக்கிறார்.

இதில் குளுவ நாடகத்தின் அமைப்பு முழுமைபெற்று விளங்கு கிறது. நாடக முன்னுரையாக இறைவாழ்த்துக்குப் பின் நாடகத் தலைவனை விளக்கமாக அறிவுறுத்திக் காட்டுகிறார். நாடக நடிப்பில் கலந்துகொள்ளும் முக்கியமான பாத்திரம் குளுவன், அவனைப் பற்றிய விரிவான விளக்கம் ஆசிரியரால் தரப் பெறு கிறது. அவனுக்குத் துணையாக வரும் சிங்கன் சுருக்கமாகவே சுட்டிக் காட்டப்படுகிறான். இருவரும் நடித்துப் பாடுவதில் நிகழ்ச்சிகள் செயல் பெறுகின்றன.

குளுவன் வருகிறான். அவனைத் தொடர்ந்து சிங்கன் அரங்கமேறுகிறான் குளுவனின் சித்து வித்தைத் திறனை அவனே கூறுகிறான். இருவரும் வேட்டைக்குச்செல்வதற்குமுன் கடவுளை வேண்டுகின்றனர். பறவைகளைக் காண்கின்றனர். அவை பறந்து வயல்களை நோக்கி வருகின்றன. பல இடங்களில் அமர்ந்து இரை தேடுகின்றன. மீன்களைக் கொத்தித் தின்பதை இருவரும் மறை வாகக் கவனிக்கிறார்கள். பின் கண்ணிகளை வாய்ப்பாக ஊன்று கின்றனர். பறவைகள் சிக்கிக் கொள்கின்றன. இருவரும் சிக்கிய பறவைகளைத் திரட்டி வகையிடுகிறார்கள். கொடுக்க வேண் டியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். கொடை கிடைக் கிறது. மலைக்குத் திரும்பிப் பூசனை செய்ய விரும்புகிறார்கள். சிங்கன் சிங்கியைத் தேடிக் கண்டு பிடிக்கிறான். சிங்கி தான் குறி சொல்லிப் பெற்ற பரிசில்கள் பற்றி சிங்கனிடம் விளக்குகிறாள். அனைவரும் நலமாய் வாழ இருவரும் வேண்டுகின்றனர். இது தான் குளுவ நாடகத்தின் கட்டமைப்பு.

இடையிடையே விருத்தங்கள், கலிப்பாக்கள் மூலம் செயல் வளர்ச்சிக் குறிப்புக்கள் தரப்படுகின்றன. நாடகச் செயல்கள் இசைப் பாடல்களாக மலர்கின்றன. பாடல்கள் மூலம் பறவை

68. மேற்படி, 42.

களின் வருகை, கண்ணிகள் பரப்பல், பறவைகள் பிடிபடல் ஆகிய வை விளக்கப்படுகின்றன. உணர்ச்சிக் குறிப்புக்கள் நடிப்பின் மூலம் காட்டப்படுகின்றன. குளுவன், சிங்கன், சிங்கி ஆகிய மூன்று பாத்திரங்களின் வாயிலாகக் அவை காட்டப் பெறுகின்றன. இசை யும் நடிப்பும் கலந்து குளுவ நாடகக் கலை விளங்குகிறது. அதில் கலையும் கருத்தும் உணர்வும் இணைந்து சிறக்கின்றன.

சின்ன மகிபன் குளுவ நாடகத்தில் ஆசிரிய விருத்தம் 17, கலி விருத்தம் 1, இசைப்பாடல்கள் 17, ஆசிரியப்பா 1, சந்தப்பாடல் 1, கலிப்பா 5 ஆக மொத்தம் 42 பாடல்ககள் உள்ளன. அவற்றின் மொத்த அடிகள் 438. சந்தப் பாடல் முதலில் கொச்சகம் போன்றும் பின்னர் ஆசிரியம் போன்றும் அமைந்து 100 வரிகளாக நீண்டு காணப்படுகிறது.

இசைப் பாடல்கள் பலவகை இசைகளுக்குத் தகுதியாக வேறு வேறு அமைப்பில் எழுதப்பட்டுள்ளன. சில பல்லவி, அனுபல்லவி, சரணங்களாகவும், சில கண்ணிகளாகவும், ஒன்று நொண்டிச் சிந் தாகவும் உள்ளன. கலிப்பா, கலிவிருத்தம் ஆகியவை கோட்டூர் நயினார் குளுவ நாடகத்தில் கிடையாது. இனிய ஓசையுடன் பாடுவதற்கு எளிதான பாடல்களாகவே அனைத்தும் உள்ளன. ஒலிநயம் மிக்க சொற்கள் சிறப்பாகக் கையாளப் பெற்றுள்ளன.

### பாட்டுடைத் தலைவன்

மிதிலை நகரைக் கோநகராகக் கொண்ட கோனாட்டை ஆண்ட சிற்றரசனான சின்னமகிபன் இந்தக் குளுவ நாடகத்தின் பாட்டுடைத் தலைவனாக விளங்குகிறான். இவன் வாழ்ந்த காலத்தில் சிவகங்கையை மருது பாண்டியரும், மறவர் சீமையை வடுக நாதேந்திரரும், சிறுமதுரை என அழைக்கப் பெற்ற கீழச் சிவல்பட்டியைச் சார்ந்த இடங்களை ரகுநாத சேதுபதியும் ஆண்டிருக்கிறார்கள். இவனுடைய காலம் 18ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகும். அக்காலத்தில் சின்னன் என்ற பெயர் வேறு சில சிற்றரசர்களுக்கும் இருந்ததாக அறிய முடிகிறது.

'பணவிடுதூது' என்ற நூல் மல்லைச் சின்னய்ய பூபாலனைப் பற்றிக் கூறுகிறது.[69] அதன் காப்புச் செய்யுள்,

---

69. 'பணவிடு தூது' இதுவரை அச்சாகாத ஓர் ஏட்டுச் சுவடி நூல், அது திருவான்மியூர் டாக்டர் உ.வே.சா. நூலகத் தில் 254 எண்ணுள்ள சுவடியாக உள்ளது. இது புதுக் கோட்டை வழுவாடி ஜமீன் சின்ன வன்னியனார் பெயரில் இயற்றப்பட்டது என்று டாக்டர் உ.வே.சா. அவர்கள் குறிப்பெழுதியுள்ளார்.

'செய்யபுகழ் சேருமல்லைச் சின்னையப்பூ பாலர்க்குத்
துய்யபணந் தன்னைவிடு தூதுக்கு—மெய்புமையாள்
வெற்பகத்தின் உற்பவித்த வித்தகச்ச மத்திபெற்ற
கற்பகத்து ணைப்பதமே காப்பு.[70]

என்று அவனைக் குறிப்பிடுகிறது. மல்லை சிற்றம்பலக் கவி ராயரின் முன்னோர் வாழ்ந்த இடம். அவனும் மிகச் சிறப்பாக ஆட்சி செய்ததாக இந்த ஏட்டுச் சுவடி கூறுகிறது.

'தேவேந்திரன் கொலுவைச் சீரென்பார் சின்னயனாம்
பூவேந்திரன் கொலுவைப் போல்வருமோ'[71]

என்று வரும் 'பணவிடு தூது' வரிகள் இதனைச் செவ்வனே விளக்கும்.

'பணம்விடு தூது' கூறும் சின்னய்யனுக்கும், இந்த குளுவ நாடகச் சின்னமகிபனுக்கும் தொடர்பு இருப்பதாகத் தோன்ற வில்லை. சின்னய்யனை,

'ஓங்கு குடுமிமலை உற்றகொல்லி மாமலை
தாங்கு பொதியமலை தான்பெற்றோன்—ஓங்குதிரை
மேலான வைகையுடன் வெள்ளாறு பைம்பொருனை
பாலாறு நாலும் படைத்தோன்—சோலையெல்லா
மஞ்சுதிகழ் வல்லை வளநாடு தன்னுடனே
அஞ்சு நாடாளும் அனபாயன்—மிஞ்சுபுகழ்
செல்வநிறை வழுதி சீர்பெருகுங் கச்சிநகர்
மல்லைப் பெருங்கோழி வழுதியான்—பல்லவஞ்சேர்
நிம்ப மாலிகையும் நீள்கவுத்த மாலிகையுஞ்
செம்பொன் மணிமாலிகையுள் சேர்மார்பன்—தும்பைமுடி
கன்னா நளரூபா கச்சிநகர் மெச்சியவிற்
பன்னா.........'[72]

என்ற அந்ததூது நூல் விளங்குறது. அவனுடைய உறவுமுறையை விளக்கும்போது,

'சூரிய நாராயணன் பிச்சபூபதி நற்றுணைவன்
சிதம்பரத் தைத்தம்பி யெனவே படைத்த
ராமபூ பாலனுக்கும் நல்லபிச்சை ராயனுக்கும்
தாமகிழ வந்த சகோதரமால்—பூமயில்சேர்

---

70. பணவிடு தூது, காப்பு.
71. பணவிடு தூதுப் பாடலில் ஒன்று.
72. பணவிடு தூது ஏட்டுச் சுவடி (அச்சாகவில்லை)

முன்னங் குமாரமுத்து முத்தையன் எங்கையன
தன்னையும் மாமனெனத் தான்படைத்தோன் பன்னுதமிழ்
மாலான கிருஷ்ண வடமலை ராயனையும்
மேலா மருகனென வீறுடையான்
சீலக்குண வாரிதிகர் சின்னையமால்'[73]

என்று கூறியவாறு தூது வளர்கிறது. மேலும்,

'போலே தமிழ்க்குதவு போசரகு நாதனொடு
மால்நேர் திருமலைக்கு மைத்துனவேள்'[74]

என்றும்,

'சின்னய்ய னெனினும் செகத்திற் பெரியனென்பார்
அன்னவன் தம்பிக் கனுசனென்று—கன்னன்
திருமலை பூபாலகன் முன்செய் தருமமெல்லாம்
ஒருமைபெற வந்தங்குற் றோன்'[75]

எனவும் உரைக்கப் பெறுகிறான். இவற்றை அணுகி நோக்கும் போது 'சின்னன்' என்ற ஒரே பெயரை உடைய இருவரும் காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டவர்கள் என்று கூறத் தகுந்த பல சான்றுகள் உள்ளன.

குளுவ நாடகப் பாட்டுடைத் தலைவனான சின்ன மகிபனின் குடும்ப வரலாற்றை ஓரளவு காண முடிகிறது. அவனை,

'உடையா மகிபன் உதவு குமரன்'[76]

என்று கூறுவதிலிருந்து அவனுடைய தந்தை உடையான் மகிபன் என்று அறியலாம்.

'அன்னந்தருஞ் சுப்ப னழகு பூபனையும்
மன்னவன் குழந்தை வசீகரன் தனையும்
நிதிநிறை வயித்திய லிங்க பூபனையும்
மதிநிறை பொருந்த மக்களென் றழைப்போன்'[77]

என்ற பாடல் குறிப்பின் மூலம் சின்னமகிபனுக்குச் சுப்பன், குழந்தை, வயித்தியலிங்கம் என மூன்று மக்கள் இருந்ததாகத் தெரிகிறது. இன்னொரு பாடலில்,

---

73. பணவிடுதூது ஏட்டுச் சுவடி (அச்சாகவில்லை)
74. மேற்படி
75. மேற்படி
76. சின்னமகிபன் குளுவ நாடகம் 10, 26
77. மேற்படி, 10, 52-55.

'பாகன் சுப்பிற மணியமோ கனழகிய
மகிபன் குழந்தை வயித்தி தனைப்பெற்ற
யோகன் அதிக விவேகன் சின்னன்'[78]

என்று வருகிறது. இதிலிருந்து சுப்பனே சுப்பிறமணியன் என்றும் வயித்தியலிங்கமே வயித்தி என்றும் கருதலாம். இவ்வாறு பெயர்களைச்சுருக்கியுரைக்கும்வழக்கம் அன்றும்இன்றும் உள்ளது.

'நற்று ணையான் வயித்திய லிங்கப் பூபாலன்'[79]

என்று குறிப்பிடும் இடத்தில் வரும் வயித்திய லிங்கம் சின்ன மகிபனின் மகன் அல்லன் என்றும், இவன் சின்னனின் துணைவன் ஆகும் என்றும் கொள்வதே பொருத்தமாகப்படுகிறது. ஏனென்றால் அடுத்த பாடலில் மகனான வயித்திய லிங்கத்தை வேறு படுத்திக் கவிஞர் குறிப்பிடுகிறார்.[80] துணைவனைப் 'பூபாலன்' என்றும் மகனை 'மகிபன்' என்றும் இவ்விடங்களில் கவிஞர் வேறு படப் புலப்படுத்துவதைக் காணலாம்.

மிதிலைப் பட்டியில் சீரும் சிறப்புடனும் விளங்குவது சிற்றம் பலக் கவிராயர் பரம்பரை. அதைச் சேர்ந்த அழகிய சிற்றம்பலக் கவிராசயர் சின்னமகிபனின் அவையை அலங்கரித்த தமிழ்க் கவிஞர் ஆவார். சின்னன் அவரை நன்கு மதிக்கிறான். கவிஞர் மன்னனை மிகவும் விரும்புகிறார். சின்னமகிபன் கல்வியை ஆதரிக்கிறான். தமிழை வளர்க்க உதவுகிறான். தமிழின் அருமை தெரிந்தவன். அவன்,

'தமிழருமை யறியா மல்சல சலவென்று
கல்லி பண்ணுவோ ருடையபேச் சைக்கேளான்'[81]

என்று குளுவ நாடகம் கூறுகிறது.

'தமிழ்கூறும் புலவர் குதாரன் சின்னவன்'[82]

என்பதால் தமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரிக்கும் புரவலனாகச் சின்ன மகிபன் விளங்குவது புலனாகும். ஆகையினால் பெருங் கவிஞராகிய

'அழகிய சிற்றம்பலமால் மெச்சும் சின்னன்'[83]

---

78. ,, 25, ii.
79. ,, 37, ii.
80. ,, 37, iii.
81. ,, 30, 1-2.
82. ,, 17, iv.
83. ,, 24.

என்று குளுவ நாடகத்தில் பாராட்டப் பெறுகிறான். பல இடங்களில் சின்னமகிபனின் தமிழ்ப்பற்று குறிப்பிடப்படுகிறது.

சின்னமகிபனின் அரசியல் அதிகாரிகளாக நால்வரின் பதவிகள் குறிப்பிடப் பெறுகின்றன.

'கற்றவர்க் குதவுங் காரியம் பலமுஞ்
சொத்திக் கருப்ப துரந்த ரன்தனையும்
பருவ மாலான பாம்பாட் டிதனையும்
இருநிதி வளரு மெழுவக்கோன் தனையும்
மனமிக மகிழும் வாக்கரிச் சந்திரன்'[84]

என்பதிலிருந்து அரிச்சந்திரன் போன்று வாய்மை வழுவாதுவாழும் சின்ன மகிபன் அவனுடைய அரசியல் அதிகாரிகளான காரியம் பலம், கருப்பதுரந்தரன், பாம்பாட்டி, எழுவக்கோன் ஆகிய நால்வரையும் நன்கு மதித்துள்ளான் என்பது தெரியவரும். இன்னொரு இடத்திலும் இவர்களை இந்த வரிசைப்படியே கவிஞர் குறிப்பிடுவதினால்[85] அவர்களுடைய அதிகார வரம்பு இவ்வாறு அமைத்திருக்கும் என்று கருதலாம்.

காரியம்பலம் நீதி வழங்கி அமைதி காக்கும் அம்பலக்காரராகவும், கருப்பதுரந்தரன் உட்படு கருமத் தலைவராகவும், பாம்பாட்டி, காலம் அறிந்து கூறும் பணியாளராகவும், எழுவக்கோன் நிதிக் காப்பாளராகவும் இருந்திருக்கலாம்.

சின்ன மகிபனை,

'பஞ்சகதி கொண்டு கட ருஞ்சக்தி மனிடநடை
விஞ்சு செஞ்சரணி கொஞ்சுவாமு பரியான்'[36]

என்று கூறுவதினால் அவன் குதிரை ஏற்றத்தில் வல்லவன் என்பது புலனாகும்.

'கோலிய மருவலற் கோட்டைகொத் தளத்தைக்
காலினா லெத்துங் கடகுஞ் சரத்தான்'[87]

என்றுரைப்பதினால் மாறுபட்டவர்களின் கோட்டை கொத்தளங்களைக் காலால் எத்தித் தகர்க்க வல்ல- வலிமை மிக்க யானைப் படைகள் இருந்ததாக அறியலாம். இவனுக்குப் பகைவர் இருந்ததாக எங்கும் சுட்டப்படவில்லை. பக்கத்திலுள்ள ரகுநாதசேதுபதி, வடுக நாதேந்திரர், மருதுபாண்டியர் ஆகியோருடன்

---

84. ,, 10, 56-60.
85. ,, 37, iv-v
86. ,, 10, 9-10.
87. ,, 9, 29-30.

அன்புடன் பழகுவதாகக் கூறப் பெறுகிறது. அவர்கள் இவனை விடவும் மேலாணையுடையவர்கள் என்று கருதவும் இடமுள்ளது.

இவன் சிவனை வணங்குவோன். 'சிவநெறியில் நேமன்'[88] என்று குறிக்கப் பெறுகிறான். தச்சணாமூர்த்தியை வணங்கிப் பணிக்கிறான். மேலும்,

'வேலும் மயிலும் துணையெனவே நித்தம்
வேண்டிப் பணிந்தேத் திடும்நற் பாக்கிய
சீலன்......'[89]

சின்னமகிபனின் சைவப் பற்று இவற்றால் விளங்கும்.

கலைஞர்களை ஆதரிப்பவன். கவிஞர்களை அணைப்பவன், மக்களிடம் அன்பு பாராட்டுவோன். சிறந்த வள்ளல், தகுதி அறிந்து பரிசளிப்போன். நல்ல அறிஞன், பாரதம் படிப்பவன். உண்மையானவன். தோற்றப் பொலிவு மிக்கவன். அனைவரும் அவனை விரும்பும் பண்புடையவன். ஆகையினால் புலவர்கள் அவனைப் பாடி புகழ் பெறுகின்றனர். இதுவரை மூடிக் கிடந்த சின்ன மகிபனின் பெருமைகளை இந்தக் குளுவ நாடகம் வெளிப் படுத்திக் காட்டுகிறது.

குளுவனும் சிங்கனும்

சின்ன மகிபன் குளுவ நாடகத்தில் வரும் குளுவன் சிறப்பு மிக்கவனாகத் தோன்றுகிறான். அவனைச் சித்திரக் குளுவன் என்றும் ஏகாந்த யோகக் குளுவன் என்றும் கவிஞர் கூறுகிறார். அவனுடைய புறத்தோற்றம் முன்பே விரிவாக விளிக்கப் பட்டுள்ளது. அவன் அழகன். சுறுசுறுப்புடன் செயல்படுவோன். திறமையுடன் கண்ணிகள் பரப்பிப் பறவைகளைப் பிடிப்போன். சிங்கனைத் தன் கையாளாகக் கொண்டு செயலாற்றுகிறான். இறைவனைப் பணிகிறான். அரசனை மதிக்கிறான். அதிகாரிகளை அணைக்கிறான். அறிஞர்களைப் பாராட்டுகிறான்.

அவனைச் சிறந்த கலைஞனாகவே பார்க்கமுடிகிறது. நன்றாக ஆடிப்பாடும் திறமுடையவன். பறவைகளைப் பங்கிடுவதில் அவனுடைய அறிவு, நுட்பம் புலனாகிறது. திருக் கோளையாவுடையார், மிதிலையாவுடைநாதர், அண்ணபூரணி, முத்துக்குமரக்கடவுள், ஆகிய வரிசையில் இறைவர்களுக்குப் பங்கு கொடுக்கிறான். அடுத்து ரகுநாத சேதுபதி, மருத பாண்டியர், அழகிய சிற்றம்பலக் கவிராயர், சின்ன மகிபன் ஆகியோருக்கு

88. ,, 18, iii.
89. ,, 21, iv.

வழங்குகிறான். பின்னர் வயித்திய லிங்க பூபாலன், சுப்பன் குழந்தை, வயித்திய லிங்க மகிபன், காரியம்பலம், சொத்திக் கருப்பதுரந்தரன், பாம்பாட்டி, எழுவக்கோன், நகரத்தார், கொல்லன் குழந்தை ஆசாரி, தச்சன் வைத்தி ஆசாரி, தட்டார் முத்து வீரப்பன் ஆகியோருக்கு வரிசையிட்டுத் தருகிறான். மிஞ்சியதைத் தனக்கென ஒதுக்குகிறான்.

குளுவனுக்கு உதவும் சிங்கன் பணியாளனாகவே வருகிறான். கண்ணிகளைப் பரப்புகிறான். பறவைகளைப் பற்றுகிறான். அவற்றைப் பங்கு வைப்பதில் குளுவனுக்கு உதவுகிறான். இறுதியில் தனது துணைவியான சிங்கியைத் தேடிக் கண்டு பிடித்து அவளுடன் மகிழ்கிறான்.

### சிங்கி

குளுவ நாடகத்தில் வரும் ஒரே பெண் பாத்திரமாகச் சிங்கி விளங்குகிறாள். நாடக இறுதியில்தான் தோன்றுகிறாள். குறி சொல்லிப் பலவிதமான பரிசுப்பொருள்களை வாங்கி வருகிறான். சிங்கனை வியப்பில் ஆழ்த்துகிறாள். அவனிடம் அளவில்லாத பற்றுடன் காணப்படுகிறாள். மனம் ஒன்றிப் பேசுசிறாள். சிங்கனைக் கூடி இன்ப வாழ்வில் திளைக்கிறாள்.

### சமுதாய உணர்வுகள்

பேரரசுகள் வீழ்ச்சியடைந்து நாடானது சிறுசிறு நிலப்பரப் பாகப் பிரிக்கப் பெற்று அவை ஒவ்வொன்று சிற்றரசர்களின் மேற் பார்வையின் கீழ் வருகின்றன. குறுநில அரசுகள் ஒன்றையொன்று மோதித் தங்கள் வலிமையைச் சோதித்து சீர்குன்றிய காலகட்டம். மிகக் குறைந்த இடப் பரப்புகளுக்கு ஒரு தலைவர் தோன்றி ஆளுகின்றனர். அங்கு உட்பூசல், புறப்பகை நிலவி வருவது இயல்பு. நிலத்தலைவர் நல்லவர்களாகவும் தீயவர்களாகவும் இருக்கலாம். நல்லவர் தலைமை தாங்கும் இடம் அமைதியாக இருக்கும். மக்கள் மகிழ்வுடன் வாழ்வர். அங்கு கலைகள் ஆதரிக்கப்படும். கல்வி தழைக்கும்.

கோனாடு சின்ன மகிபனால் ஆளப்படும்போது அமைதி நிலவு கிறது. மிதிலை நகர் கலைகளை ஆதரித்து வளர்க்கும் இடமாக உள்ளது. அழகிய சிற்றம்பலக் கவிராயருடைய பரம்பரை நூல்கள் பலவற்றை இயற்றித் தமிழுக்கு வளம் பெருக்குகிறது. சின்ன மகிபனும் ஒரு கல்விமானாக விளங்குகிறான். கவிஞர் அவனை நாடுகினறார். அவர்களுக்குப் பலவித பரிசில் கொடுத்து ஆதரிக்கிறான் அரசன். யானைக் கன்றும் வளநாடும் தானமாகப் பெற்று நன்கு வாழ்கிறது கவிராயர் குடும்பம். ஆகையினால்

மற்ற கவிஞர்கள் அவரை நன்கு மதிக்கிறார்கள். அவையிலும் அரங்கிலும் அவருக்கு உயர்ந்த இடம் கொடுக்கப்படுகிறது.

மிதிலை நகரில் விழாக் காலங்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அக்காலத்தில் கொடை மிக்க வள்ளல்கள்மீது கவிஞர்கள் குளுவ நாடகம் பாடித் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துள்ளனர். அவற்றில் ஒன்று சின்ன மகிபன் குளுவ நாடகம். மக்கள் மத்தியிலும் அவற்றுக்கு மதிப்பு இருந்துள்ளது. பாடல் மிகுதி. அவற்றைப் பாடியவாறு ஆடி நிகழ்ச்சிகளைக் காட்டியுள்ளனர். மக்களும் புரிந்து பாராட்டியுள்ளனர். சமுதாயம் அறிஞர்களையும் கவிஞர்களையும் மதித்துப் போற்றும் காலமாக உள்ளது.

உழவுத் தொழிலே முக்கியமாக நடைபெற்றுள்ளது. நெல் கரும்பு, தெங்கு, வாழை, பலா ஆகியவற்றைப் பயிரிட்டுள்ளனர். கண்மாய்கள், கால்வாய்கள், கிணறுகள் ஆகியவை நிறைந்துள்ளன. ஏரி வாவி குளமென நீர்நிலைகள் பல வகையாக உள்ளன. வயல்களுக்கும், குளங்களுக்கும் தனித்தனிப் பெயர்கள் கொடுக்கப் பெற்றுள்ளன. வயல்களை செய் என்றே பெரும்பாலும் அழைத்துள்னர். வாய்க்கால், தடி, தளை, பண்ணை யென்று பலவிதமாக வயலைக் குறிப்பிட்டுள்ளனர். தனித்தனி வயல்களுக்கு வரப்புகள் உள்ளன. சில பெரிய வரப்புகள். உம்பளம் என்ற நிலங்கள் அரசனால் சிலருக்கு வரியில்லாது கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை அவர்கள் பரம்பரை உரிமையுடன் அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

அரசாங்க அலுவலர், கலைவல்லுனர் ஆகியோரின் சேவை திறமை ஆகியவற்றை அரசன் பாராட்டி நிலக்கொடை செய்துள்ளான். அம்பலகாரர், பாம்பாட்டி, கவிஞர் ஆகியோருக்கு வழங்கிய கொடை நிலங்கள் பற்றிய குறிப்புகளைப் பட்டயங்கள், கல்வெட்டுகள், இலக்கியங்கள், அனுப்வ பாத்தியதை ஆகியவற்றின் முலம் இன்றும் அறியலாம். பாம்பாட்டி என்ற ஒரு குடும்ப பரம்பரை பரமக்குடித் தாலுக்கா அக்கிரவேசி ஊரில் இப்பொழுதும் பழம்பெருமை தேய்ந்த நிலையில் இருப்பதை அறிய முடிகிறது.

குடும்ப உரிமைகளுக்கு மதிப்புள்ள காலமாக இருப்பதினால் வளர வாய்ப்பின்றிக் குன்றியவர்கள் குன்றிய நிலையிலேயே இருந்தனர் என்று கருதலாம். சமுதாயத்தில் இனப் பாகுபாடு இருந்துள்ளது. மிதிலை நகரில் நகரத்தார் சிறப்புற்று இருந்ததாக இந்தக் குளுவ நாடகத்தின் மூலம் அறிய இயலுகிறது. இன்றும் மிதிலைப் பட்டியில் அவர்கள் சிறப்பாகவே வாழ்ந்து வருகின்றனர்.

குளுவர் மலைவாழ் மக்கள். அவர்களின் முக்கிய தொழில் பறவை பிடித்தல். சித்துவேலைகளை அறிந்தவர். முருகனை வணங்குவோர். சிங்கனைத் குறச்சிங்கன் என்று கூறுவதினால் அவன் குறவர் இனத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம். சிங்கன் குளுவனுக்கு அடங்கிப் பறவை வேட்டைக்கு உதவுகிறான். குறக் குலப் பெண்கள் உயர்குலத்தினருக்குக் குறி சொல்லிப் பரிசுப் பொருள்கள் பெறுகின்றனர். புலால் உண்ணல், மதுவருந்துதல் ஆகிய பழக்கங்களை உடையவர். ஆடைகளும் அணிகளும் குறைவாகவே கொண்டுள்ளனர். பல இடங்களுக்கும் அவர்கள் செல்வதினால் பல சமயம் கணவனும் மனைவியும் பிரிய நேரிடுகிறது. ஆனால் சந்திக்கும்போது அவர்களின் வாழ்க்கையில் இன்பம் அலை மோதுகிறது. உள்ளவர் கொடுத்து இல்லாதவர் பெறவேண்டிய காலமாக அது உள்ளது. ஆகையினால் இருப்போருக்கு இல்லாதோர் அடங்கியே வாழவேண்டிய அவநிலை ஏற்படுகிறது.

தொழில் செய்வோரை மறந்து ஒதுக்கிய சமுதாயம் என்று கூறமுடியவில்லை. பறவைகளைக் குளுவன் பங்கிடும்போது கொல்லர், தச்சர், தட்டார் ஆகிய பல்வேறு தொழில் செய்வோரையும் மதித்துப் பங்கு கொடுக்கும் குறிப்பு இந்தக் குளுவ நாடகத்தில் வருகிறது. கடவுளர், ஆட்சியாளர், அறிஞர் அதிகார வகுப்பினர். உயரினத்தினர், தொழில் வல்லார் என்ற வரிசையில் பறவைப் பங்கீடு நடைபெறுவது சமுதாய மதிப்பின் அளவை ஓரளவு அறியத்துணை செய்கிறது. நிலவுடைமையுள்ள, பாகுபடுத்தப் பெற்ற, ஏற்றத்தாழ்வுகள் மிக்க சமுதாயமே இந்தக் குளுவ நாடகத்தில் காட்டப் பெறுகிறது. கலையும் உழைப்பும் கீழ் மட்டத்தில்தான் பெருகியுள்ளது. ஆனால் அவற்றைப் பயன் படுத்தி மேல்மட்டத்தினரை அண்டியும் பணிந்தும் வாழவேண்டிய சூழ்நிலையே தாழ்நிலையருக்கு ஏற்பட்டுள்ளது.

இறைப் பற்று மிக்க சமுதாயமாக அது காணப்படுகிறது. நிலமாளும் மன்னனும் மலை வாழும் குளுவனும் இலைவனைப் போற்றிப் பணியத் தவறவில்லை. வணங்கும் கடவுளர் வேறுபடலாம். வணங்கும் முறை மாறுபடலாம். ஆனால் அனைவரும் கடவுளை நம்புகின்றனர். படையல் செய்து பணிகின்றனர். தச்சணாமூர்த்தி, முருகன், கோளலிங்கர், ஆவுடையநாயகி, ஆவுடைய நாதர் ஆகிய பெருந் தெய்வங்களையும் கருப்பண்ணர், சோடிச்சியம்மை, முத்தழகி, மங்கை செட்டிச்சி, கரடிப் பெருமாள் போன்ற சிறு தெய்வங்களையும் மக்கள் மனம் உருகி வணங்கியதை இந்தக் குளுவ நாடகம் பல இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிறது. சைவ முறைஷ்ய பெரும்பான்மையாகக் கூறப்

பெறுகிறது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வழக்கத்தைப் பின் பற்றியே பூசனை செய்கிறார்கள். அதே கடவுளையும் பூசனைகளையும் இன்றும் மிதிலைப்பட்டியை அடுத்துள்ள மக்கள் செய்து வருவதைக் காணலாம். இதிகாச உணர்வுடன் கலந்த காலம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இதிகாச நாயகர்களான ராமன், கர்ணன், காண்டீபன், நகுலன், வீமன் முதலிய பெயர்களை உவமைகளாகப் பயன்படுத்தி கவிஞர் தன் கருத்துக்களை மக்களுக்குப் புரிய வைக்கிறார். புராணப் பாத்திரங்களான மன்மதன், ரதி போன்றோர் அடிக்கடி இடம் பெறுகின்றனர். புராணக் கதைகளான அகலிகைக் கல்லுரு நீங்கியது, திருமால் ஆலிலை துயின்றது ஆகியவை இடம் பெறுகின்றன. இவற்றிலிருந்து மக்களின் புராணஇதிகாச பற்றும் அறிவும் விளங்கும்.

அரசனிலிருந்து குளுவன் வரையுள்ள அனைவரும் திருநீறும் குங்குமமும் அணியும் வழக்கமுடையவர். நல்ல செயல்களில் ஈடுபடுவதற்கு முன் புனித நதிகளில் நீராடும் வழக்கம் இருந்திருக்க வேண்டும். அரசன் அவனுக்கு உரிய விலை உயர்ந்த ஆடை அணிகளுடன் விருதுகளையும் அணிந்து காட்சி தருகிறான். குளுவன் அவனுக்குரிய சல்லடம், கச்சை, சருகை லேஞ்சு முதலிய ஆடைகளுடனும், கடுக்கண், சரப்பணி, உருத்திராச்ச மாலை போன்ற அணிகளுடனும் தோன்றுகிறான். தகுதிக்குத் தக்கவாறு ஆடை அணிகள் மாறுகின்றன.

இத்தகைய வேறுபாடுகள் நிறைந்த சமுதாயத்தில் வளமையும் ஏழ்மையும் பக்கம் பக்கம் ஒதுங்கியே காணப்படுகிறது. ஆயினும் அனைவரும் ஓரளவு மன அமைதியுடன் வாழ்வதாகவே குளுவ நாடகம் காட்டுகிறது. பிறரிடமிருந்து வாங்கி வாழும் வாழ்விலும் சிங்கனும் சிங்கியும் இன்பத்தில் பொங்கி வாழ்வது அவர்களுடைய மனப்பக்குவ நிலையையே காட்டுகிறது.

### தத்துவ உள்ளுறை

குளுவ நாடகத்தைப் படித்தவுடன் இதில் தத்துவ உள்ளுறை அமைந்துள்ளதா என்று அறியும் ஆவல் எழுகின்றது. அதன் அமைப்பு முறை அவ்வாறு காணப்படுகிறது. பெரும்பாலும் குளுவ நாடகம் எழுந்த காலம் இத்தகைய சமய உணர்வுகளை ஏற்படுத்தும் தன்மையுடையது.

வான்வெளியில் தன் போக்கில் பறவைகள் பறந்து திரிகின்றன. பயிர்களையும் கதிர்களையும் கொத்தி அழிக்கின்றன. குளுவன் வலைவீசி அவற்றைப் பிடிக்கின்றான். பின் தக்கார்க்குப் பங்கிட்டுக் கொடுக்கிறான். இறைவனுக்கும் அவை

கொடுக்கப்படுகிறது. இதுதான் குளுவ நாடகத்தின் செய லோட்டக் கருத்து.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற மூன்று தொகுதி களைக் கூறுகிறது. அவை முறையே இறைவன், ஆன்மா, உலகம் ஆகியவற்றைக் குறிப்பிடுவன. ஆன்மாவனாது உலகப் பற்றை அகற்றி இறைவனடி சேரவேண்டும் என்பது சைவ சித்தாந்தம். மனிதனுக்கு மெய்யறிவை உணர்த்துவதற்காக இறைவன் ஞான குருவாக உலகில் தோன்றுகிறான். உலகியல் வாழ்வில் மூழ்கிக் கிடக்கும் மனிதனுக்கு ஞான குருநாதன் இறையியல் உணர்த்தி அவனுடைய இயல்பான போக்கை தடுத்துக் கட்டுப்படுத்தி இறையடி நோக்கி வழி நடத்துகிறான்.

இந்தத் தத்துவத்தைக் குளுவ நாடகப் பொருளுடன் ஒப்பிட்டுக் காண முயலலாம். பறவைகளைப் பசுவாகவும் வயல் வெளியைப் பாசமாகவும் குளுவனை ஞானாசிரியனாகவும் அவனுடைய கண்ணிகளை அறிவுரையாகவும் அவனுடைய செயலை இறையடி சேர்க்கும் நல்வழியாகவும் கருத இடமுள்ளது. இடையிடையே நாடக மெய்ம்மை கருதிக் கவிஞர் இணைத்துள்ள சில பகுதிகளைக் களைந்து தெளிவான செயலோட்டத்தைத் திரட்டிப் பார்த்தால் இந்தத் தத்துவக் கருத்தாவது ஊடிணைந்து உயர்வூட்டுவதை உணரலாம்.

குளுவனை ஏகாந்த யோகக் குளுவன் என்றும் சித்திரக் குளுவன் என்றும் கவிஞர் கூறுவதை நன்றாக உணரவேண்டும். அவன் இச்செயலைப் புனிதமாகக் கருதி அதில் ஈடுபடுவதாகக் கவிஞர் காட்டுகிறார்.

‘தளமுயர் பறவை தனைவேட் டையாடக்
கன்னிமா மலையில் கதித்தமேதன் சுனையில்
நன்னீ ராடி ரம்மிய மாக’[90]

வருகிறான். அவன் சித்துக்களை நன்றாக அறிந்தவன். அவன் நீராடிய சுனை இருக்கும் மலையும் சாதாரண மலை அல்ல.

‘சைவதே வர்களுந் தான்விளை யாட
ஆண்ட மடமும் அரங்கநீர்ச் சுனையும்
வேண்டிய ரிஷியும் மிகுபதஞ் சொரியும்
முனியுமன் பதினெண் முதன்மைச் சித்தரும்
கனிவு டன்வருங் கன்னி மாமலை’[91]

90. மேற்படி, 10,74-79.
91. மேற்படி, 9, 18-22.

இத்தகைய உயர்வுடைய மலையில் தோன்றிய சுனையில் நீராடி வருகிறான். அதே மலையில் வாழக் கூடியவன். வேட்டை தொடங்கும் முன்னர் குளுவன் சிங்கனை நோக்கி,

'வேட்டைக் காரனை நினைத்துப் போற்றிக்கோ'[92]

என்று கூறுகிறான். இறைவனாகிய முருகனும் வேட்டைக்கார னே என்பதை இங்கு நினைவு படுத்துவதாகக் கருதலாம். முருகன் வேட்டைக் காரனாக வந்து வள்ளியை இணைக்க முயல்வதை எண்ணிப் பார்ப்பது நல்லது.

சிவஞான போதமும் இந்த இடத்தை விளக்க உதவும்.

'ஐம்புல வேடரின் அயர்ந்தவை வளர்த்தென தம்முதல் குருவு மாய்த் தவத்தினில் உணர்த்த அன்னிய மின்மையும் அரன் கடல் செலுமே'[93]

இந்தச் சூத்திரத்தையும் மேற்கூறிய கருத்துடன் இணைத்துக் காணின் தெளிவு பிறக்கும்.

கோட்டூர் நயினார் குளுவ நாடகத்தில் இந்தத் தத்துவம் இன்னும் சிறப்பாகவும் தெளிவாகவும் விளங்கும் தரமாக உள்ளது.

குளுவன் 'சிக்கும் சிவயோகக் கண்ணிகள்' தாங்கி வருகிறான் அவன் கையில் பறவைகளைப் பிடிக்கும் கண்ணிகளுடன் மாத்தி ரைக் கோலும், கமண்டலமும் உள்ளன; அவன் பிடிக்க வரும் பறவைகள் 'சூத்திரமான பறவைகள்' அவற்றைப் பிடிக்க அவன் 'சிவ சிந்தையாய்க் கண்ணியைத் திருத்துகிறான்' கண்ணியைத் திருத்தும் போதே,

'அகத்திய தீர்த்த மாடியே அஞ்சு
அச்சர மந்திரமும் பாடியே
செகத்தினிற் குருவமடா தினம்
தெரிசிக்கக் கலிபோமடா'[94]

என்று பாடுகிறான். பறவைகள் கண்ணியில் சிக்கிக் கொள் கின்றன. அவை குண்டலி வாவிக் குளம் வயல் தோறும் குலாவித் திரிந்தவை. அவற்றைப் பிடித்து நயினாரைத் தரிசிக்கக் காரண மான பரிபூரணத்தில் சேர்த்துவிட்டதாகக் குளுவன் கூறுகிறான். இவற்றை ஊன்றிக் காணின் சைவ சித்தாந்தக் கருத்து திரண்டு வெளிப் படுவதைக் காணலாம்.

---

92. மேற்படி ,, 31, xviii.
93. சிவஞான போதம், சூ. 8.
94. கோட்டூர் நயினார் குளுவ நாடகம், 29, சரணம் 2.

எளிய முறையில் பாமரர் வாழ்வில் சைவ சித்தாந்த கருத்தைச் சுவைப்பட விளக்குவதற்கே குளுவ நாடகம் இம்முறையில் அமைக்கப் பெற்றுள்ளதாகவும் கருதலாம்.

இலக்கிய நயமும் மொழிநடையும்

தமிழ் நாடக இனங்களில் ஒன்று என்ற நிலையில் குளுவ நாடகத்துக்கு ஒரு தனித்துவச் சிறப்பு உள்ளது. பாமர மக்களையும் கவர்ந்து மகிழ்விக்கும் இயல்புடையது. புலவர் கூற விரும்பும் கருத்துக்களைச் சுவைபட இணைக்கும் அமைப்பு முறை உள்ளது. பாட்டுடைத் தலைவனின் பண்பு நலங்கள், குளுவர் வேட்டையாடும் முறை, சமய உணர்வுகள், வரலாற்று உண்மைகள், சமூக இயல்புகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக இன்னிசைப் பாடல்களின்மூலம் வெளிப்படக் கலைஞர்கள் ஆட்டம் துணை செய்கிறது. அறிவுக் கருத்துக்களை இன்பமாகச் சுவைத்து மகிழத் தக்க எளிய கலையாகக் குளுவ நாடகம் விளங்குகிறது.

விரிவான விளக்கங்களை அகவல் மூலமும் சுருக்கமானவற்றில் இசைப் பாடல்கள்வாயிலாலும் கூறுவர். விருத்தம், கலிப்பா போன்றவற்றில் செயலும் பொருளும் அழுத்தம் பெறுகின்றன. இசை பாடல்களில் செயலும் உணர்வும் சுவைப்படப் புலனாகின்றன. அவைப்பலப்பல இராக தாளங்களில் பாடப் பெற்றிருக்கும்.

ஒலிநயம் மிக்க சொற்களே பெரும்பாலும் பயன்படுத்தப் படுகின்றன.

'நதிரத்தின மணிசித்திர வயிரக் கல்லைவைத்து'[95]

என்பதில் அது செவ்வனே விளங்கும். குறிப்பாக 'கலீரேன, சலசல சலவென' ஆகியவையும் தோற்றக் குறிப்பாகப் 'பளீரென' போன்றவையும் தேவை கருதியும் பயன் கருதியும் இணைக்கப் பெறுகின்றன.

பேச்சு வழக்கை ஒட்டி 'ரெம்ப, நித்தம், சல்லியம், ரெண்டு, அம்பது, நூத்தேழு' ஆகியவைப் பயன்படுகின்றன. பறவை என்பதின் வட சொல்லான 'பக்ஷி' யை 'பட்சி' என்றும் 'பச்சி' என்றும் இருமுறையில் கவிஞர் எழுதுகிறார். 'மிதிலை' என்பது மிதுலை' யாகிறது. வடசொற்களான 'தக்ஷணாமூர்த்தி, தாஷ்டகம், கெம்பீரம், கிருஷ்டி' போன்றவையும் இடம் பெறுகின்றன. பொருள் சிறப்புடைய 'ஒளிமொய்த்த வயிரம்', பொன்னுயர் மிதுலை, வட்டந் தழைத்திடும் குடையான், கண்டு வில்லம்பு, புகழ்கனி வாயன்' போன்றவையும் மிகப் பொருத்தமாக அமைந்து மொழியழகைப் பெருக்குகின்றன. 'லேஞ்சு' என்ற போர்த்துக்

95. சின்ன மகிபன் குளுவ நாடகம், 10, 1.

கீசிய சொல் பார் (Bar) என்ற ஆங்கிலச் சொல்லும் இடை நுழைந்துள்ளன. இவ்வாறு பலமுறையில் பலவிதமாகச் சொற்கள் பாடல்களில் வந்துள்ளன.

உவமைகள் குறிப்பாகவும் சுருக்கமாகவும் பல இடங்களில் வருகின்றன.

'வாடிய பயிர்க்கிரங்கி
மழைமுகில் சொரிதல் போலத்
தேடிய சிங்கன் முன்னே
சிங்கியை வரக்கண் டானே'[96]

என்பதிலுள்ள உவமை மிக நயமானது. 'அன்ன நடையாள், வஞ்சிக் கொடியாள்', போன்றவற்றில் அமைந்துள்ள நயம் சுவைக்கத் தகுந்தது.

'சங்கநிதி சுரபிசிந் தாமணி யொப்பான
தானகர் ணன்சுப்ப ளைகைப் பூப
துங்கனெனுங் குழந்தை வயித்திய லிங் கேந்திர
துரந்த ரிகன்தனைப் பயின்றசுப கெம்பீரன்'[97]

என்பதிலுள்ள உவமைகளும், நிரல்நிறை அமைப்பும் திரும்பச் சிந்தித்து உணரத்தக்கன. சின்னமகிபனுடைய மக்களான சுப்பன் குழந்தை, வயித்தியலிங்கம் ஆகிய மூவரையும் சங்கநிதி, சுரபி, சிந்தாமணி ஆகியவற்றுடன் நிரல்நிறையாகவும், கர்ணன், அளகைப்பூபன் (குபேரன்), இந்திரன் ஆகியவர்களுடன் தனித் தனியாகவும் ஒப்பிட்டுக் கூறும் முறை மிகவும் நயமுடையது. இறுதித் தருவில் (41) சிங்கனும் சிங்கியும் உரையாடும்போது பாடல் கண்ணிகளை அந்தாதி முறையில் அமைத்து இருப்பது சுவைத்து மகிழத் தக்க இடமாகும்.

கலப்பு மொழியாலும், வழக்கு மொழியாலும், இலக்கிய மொழியாலும் பாடல்களை எழுதி பல்வகை அணிகளையும் சுவைகளையும் கூட்டி ஒலி வேகங்கொடுத்துப் பாமரர்களும் கேட்டுப் புரிந்து மகிழும் வண்ணம் சின்ன மகிபன் குளுவ நாடகம் எழுதப் பட்டுள்ளது,

**நடிப்பு முறை**

இக்குளுவ நாடகத்தில் மூன்று நடிகர்களுக்கே இடம் உள்ளது. முற்பகுதி பாடகர்களால் பாடப் பெறுவன. குளுவனின் வருகைக்குப் பின் பாடகரும், நடிகரும் கலந்து செயல்படுவர். இறுதியில் சிங்கியாக வரும் நடிகர் இணைந்து கொள்வார்.

---

96. மேற்படி, 40, 3-4.
97. „ 1, 1-2.

பாட்டுடைத் தலைவரும், அவனுடைய அவையினரும் கண்டு களிப்பர். மற்றவர்களும் கூடிக் காண்பர். நாடகம் பலவகை யான இன்பத்தை ஒவ்வொருவருக்கும் தரும். முடிவில் பாராட்டும் பரிசுகளும் வழங்கப் பெறும். பாடியாடும் திறமையுடையவரே இதை நடிக்க முடியும்.

குறிப்பிட்ட ஒரு தலைவனைப் போற்றி குறிப்பிட்ட ஓர் இடத் துக்குத்தக்கவாறு எழுதப் பெறுவது குளுவ நாடகம். அதில் கூறப் பெற்றுள்ளகருத்துக்கள் குறுகியகால எல்லையையும் இடவெல்லை யையும் உடையன. ஆகையினால் ஒரு காலத்தில் ஓரிடத்து மக்களையேமகிழ்ச்சியில் ஆழ்த்தியகுளுவ நாடகத்தால் காலத்தை வென்று பல இடங்களுக்குப் பரந்து நிற்க முடியவில்லை. இருப் பினும் அதன் எல்லைக்குள் அதற்கு ஓரிடம் உண்டு. தமிழுக்கு வளங்கூட்டும் நாடக இலக்கியப் பிரிவுகளில் குளுவ நாடகமும் ஒன்று என்பது உறுதி.

# A Peep Into Cinna Makipaṉ Kuluva Nāṭakam

### Circumstances Leading to Kuḷuva Nāṭakam

The mighty empire of the later Cōḷās was broken into small pieces which caused the rise of Chieftains who ruled small portions of the country independently. The prevailing political situation forced the people to live seclusively but with proper link with other parts. They had to submit to the powers of the Chieftains and lived in accordance to their wishes. The temple of worship became their common centre of meeting and the festivals connected with religion became their means of common interest. The gala occasions were celebrated with pomp and pleasure. They were entertaining and pleasing. Street-shows having local interests had been conducted to please the Chieftains. The common people were the willing participants of those shows.

The famous plays encouraged by the great monarchs of the mighty Cōḷā empire had no place in these petty political units. There were no troups well organised to conduct dramatic performances. Due to political changes the knowledge of the people became limited. The people had to satisfy themselves within their small area. So nothing superior and intellectual could be expected from those people. In such a state of affairs, the entertainments of the people could not bear much value.

There were poets and scholars who were left uncared for. They had to approach the Cheiftains for any kind of support

and patronage. When they visited these petty rulers, they had to praise them in order to receive their attention. Since the knowledge of the poets was limited to their own area, they wrote street-shows suitable to their own places only. As a matter of fact nothing universal and great could be expected from them. The plays written by them pertain to the Cheiftains and their small lands. The local deities were also praised in them.

The plays varied from land to land and also from tribe to tribe. They used different forms to express their ideas and feelings. The form designed by the tilling class was named as paḷḷu. The fortune-tellers of the mountainous areas helped the growth of Kuṟavañci. In order to check the social vices of the common people Noṇṭi Nāṭakam was written. The life led by the hunting race belonging to the mountains helped the formation of Kuḷuva Nāṭakam.

Eighteenth Century and the earlier years of the nineteenth century would have envisaged Kuḷuva Nāṭakam. Mostly the Chieftains belonging to the places which are now in the Rāmanātapuram and Tirunelveli districts had patronised this kind of street-shows. The Kuḷuvams praised particular gods or chieftains and accordingly they acquired their names.

Drama in its developed form is almost real and natural compared to what is going on in the society. Moreover in writing a drama certain methods have to be followed and particular rules and regulations should be adhered to. Modern drama needs garish lights, flaunting curtains and festal atmosphere in order to create real effect upon the audience. But in the earlier centuries the resources were limited and there were only scanty means. The common man of the past could not afford rich amenities and so had to be contented with what he had. Therefore only street-shows could be possible. Mostly they had to use the conveniences provided by nature and had to depend upon the support given by the cheiftains. Generally, the cheiftains were praised as heroes in the Kuḷuva Nāṭakams. So they became volunteers for such performances. They gave money and valuables to the performers as well as to the authors. The common people enjoyed the plays along with their ruler and his court. The poets were respected and honoured in the presence of

the people. So street-shows like Kuḷuva Nāṭakam had a time to grow and develop with popular admiration.

**Kuḷuvam**

Kuṟavañci deals with Kuṟavās while Kuḷuvam deals with Kuḷuvās. Both these tribes had their origins from mountainous areas. Whether both had come out of the same origin is a matter to be considered. They haveindividual differences oftheir own.

At present while Kuṟavās are well known throughout Tamil Nadu, Kuḷuvās are known only in the south, probably upto Putukkōṭṭai district. Kuḷuvās are included as one among the scheduled tribes, by the Tamil Nadu Government and are helped for their development. In Kanyakumari district they are seen well settled around tanks. Now they are fast improving in civilization and education. A few of them own small houses and one or two have entered into Government Services. Generally they are seen roaming about in the villages expccting alms from house to house. They spare no inconvenience to live in open spaces in groups. Monkeys and poisonous snakes are seen carried by them when they go begging. They are proficient in catching birds, especially those which are living in waters. This might have been the reason for selecting tank bunds as their abodes.

They catch water birds like cranes, water-fowls etc. by using nets and a type of small bows. Herbs and mountainous goods are collected by them and are sold to the villagers. They know magic and by using certain powers they try to give treatment to some of the incurable maladies of the villagers. For a long time they had lived in their own way without proper social mingling with the common people. But now astonishing changes have been noticed in their lives. They make themselves ready to embrace the ensuing civilization of humanity.

'Kuḷuvai' is the name of a water-bird. Such birds are caught by the Kuḷuvās, Perhaps this name might have been acquired by them because of this kind of hunting. Whether they were related with the Kuṟavās or not is also a matter to be thought over. Etymologically both the words are closely related. There is a good chance for 'Kuṟavaṉ' to be pronounced as 'Kuḷuvaṉ'. In 'Rāmanātapuram area 'Kuñcu Kuṟuvāṉ' is ordinarily said as

'Kuñcu Kuḷuvāṉ'. The word 'Puṟakkaṭai (backyard) is commonly said as 'puḷakkaṭai' by most of the people. So there is a possibility of 'ṟ' being changed into 'ḷ'. In consideration of this fact, it may be assumed that 'Kuṟavaṉ' had been transformed into 'Kuḷuvaṉ' and had developed into a separate trible in due course.

The Kuṟavāmaids are famous in fortelling the future of human beings. The males are talented in hunting. They are reputed, in literature, as good hunters especially of wild animals. They use big bows. The Kuṟavā women (Kuṟatties) read palms and tell the future. They also tattoo various figures on the skin by pricking and colouring. For that they receive money and gifts.

The Kuḷuvās are noted for catching birds especially that which live in waters. They take with them nets and small bows. Medicinal herbs are collected by them for treatment They know magic and by that knowledge they do certain wonders. They sell birds and other mountainous goods. They play certain tricks wonderfully which are appreciated by the people. For their acts gifts would be given to them. Kuḷuvā maids are also called as Kuṟacciṅki as the Kurava maids.

There should have been some relationship between Kuṟavās and Kuḷuvās in spite of certain individualities oftheir own. There is a possibility to suggest that Kuḷuvās had their origin from the Kuṟavā tribe. As seen in literature both of them are treated with notable differences. So they have to be considered as separate tribes,

Kuḷuvaṉ is considered as the attender of Kuṟavaṉ or a fowler's attendent.[1] If so, he is lower in rank than Kuṟavaṉ. In Kuṟavañci Nūvaṉ is said to be the friend and helper of Ciṅkaṉ who is in fact the Kuṟavaṉ. But in Kuḷuvam Ciṅkaṉ is presented as Kuḷuvaṉ's attendent. In such a situation Ciṅkan would be inferior to Kuluvan. In any case both are not the same.

**Kuṟavañci and Kuḷuvam**

Both Kuṟavañci and Kuḷuvam are street-shows propularly played almost in the same period and mostly in the same area. But Kuṟavañci became more famous than Kuḷuvam. So the former is found in large numbers than the latter.

---

1. Tamiḷ Lexicon, Vol II (1928) P. 1043.

Kuṟavañci differs considerably from Kuḷuvam. It is unique in its theme and construction with regard to the introduction of Kuṟatti to play the main role in it. The love theme is duplicated as between the hero and heroine and also between Ciṅkaṉ and Ciṅki. The role of Ciṅkaṉ is minor and comes only in the far end of Kuṟavañci. The fortune telling of the Kuṟatti occupies an important place in it. The hunting scene is no more than a reference in Kuṟavañci. The hero makes his direet appearance in the show. His procession makes the heroine sick with love for him.

Kuḷuvam praises a hero who has no action in the real show. Kuḷuvaṉ, Ciṅkaṉ and Ciṅki are the three characters playing their roles in Kuḷuvam. Bird hunting is the main action in it. The meeting of Ciṅkaṉ and Ciṅki takes place in the same way as it takes place in Kuṟavañci.

Both Kuṟavañci and Knḷuvam aim to praise a particular hero but in a different form. The techniques adopted also differ considerably. The catching of the birds occupies the main action of the show. The introductory portion preceeding the actual action vividly gives an account of the poetic hero who has nothing to do with the dramatic action of the street-show. Though Kuṟavañci and Kuḷuvam are dramas to be performed as street-shows, they stand independently in form and also in their way of presentation. In other words each of them has got their own individuality. Eventhough Kuḷuvam has got a thin relationship with Kuṟavañci, it has to be considered differently as a separate genre.

## Kuḷuva Nāṭakam in Tamil

Kuḷuva Nāṭakam praises the glory of a God or a great man. It is full of songs and Viruttams. They were presented before an audience in a dramatic way. Only three actors took part in it. During the eighteenth century they were very popular in the Southern districts of Tamil Nadu especially Rāmanātapuram.

Kuḷuvam opens with an invocation to different Gods. Next comes the Toṭaiyam which also praises the Gods. If follows with Maṅkaḷam. Then the poet describes in detail about the hero and his land. It is in the Akaval metre. After that the arrival of the Kuḷuvaṉ would be announced in a song and soon

after he comes on the stage. He introduces himself and expresses his talent of magic. Ciṅkaṉ also makes his appearance.

Both of them prepare to go for bird hunting. They see the birds coming in thousands over the fields. They spread the net and the birds are caught in it. The Kuḷuvaṉ and his attendant collect the birds. They share the birds with their ruler and other important persons. They are given valuable presents. With their own share of birds and presents they return to their mountain.

Ciṅkaṉ looks for his wife Ciṅki. She comes with valuable gifts given to her in return for her foretelling. Both exchange thoughts and become more intimate with real affection. At last they praise the Gods and the ruler. With best wishes to all Kuḷuvam comes to an end.

This is the general form and manner of presentation The main aim of Kuḷuvam is to praise the hero. In return gifts were given to the poet and the actors. It was a source of entertainment. The ruler and his people had enjoyed the street-show in good humour.

Hitherto Kōṭṭūr Nayiṉār Kuḷuva Nāṭakam and Eḷu Nakarattār Pēril Kuḷuva Nāṭakam had come out in print. Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam is found in palm leaves in its manuscript form. The names of Tirukkuṟṟālak Kuḷuva Nāṭakam, and Aruṇācalam Ceṭṭiyār Pēril Kuḷuva Nāṭakam are said to have been existed earlier. Elders of Ceṭṭināṭu say that certain other Kuḷuvams were also in performance earlier and orally recited some of the portions in them. But they were not definite in their names. Any way Ceṭṭināṭu area had seen much of the Kuḷuvams in Tamil during the eighteenth century and the earlier decades of the nineteenth century.

Kōṭṭur Naiṉār Kuḷuva Nāṭakam speaks about the glory of Lord enshrined at Kōṭṭūr near Virutunakar in the Rāmanātapuram district. It bears rich philosophical thoughts pertaining to Saivism. This Kuḷuvam deals with such a philosophy in very simple terms so that even a common man can understand it very clearly with ease.

Eḷu Nakarattār Kuḷuva Nāṭakam by Kaṭikaippulavar pays high tribute to the Nakarattār Community who live for centu-

ries in Ceṭṭināṭu. Their aptitude for trade and commerce has been praised much. Moreover this Kuḷuvam speaks much of their generous nature. The religious faiths they follow is also spoken of in it. This Kuḷuva Kāṭakam seems to end in an abrupt way. Most probably it was printed incompletely.

Tirukkuṟṟalak Kuḷuva Nāṭakam might have spoken about the glories of the Lord at Kuṟṟālam. Aruṉācalam Ceṭṭiyār Kuḷuva Nāṭakam might have given an account of the munificent qualities of a man belonging to the Ceṭṭiyār Commutiny.

The form and pattern of all these Kuḷuvams would be the same. But they speak about different Gods and persons, Songs are in various rākās. All of the Kuḷuvams are meant for enactment.

**Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam**

Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam is found in palm leaves. One such manuscript is found preserved with care in Dr. U. Vē. Cāminātaiyar Library at Tiruvāṉmiyūr numbered as 777. Some of the palm leaves are found broken and certain portions found worm-eaten. But the complete work is found from beginning to end.

**Date of the work**

Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam might have been staged during the time of Ciṉṉa Makipaṉ who ruled, Mitilai as its Chieftain. The author refers to Marutupāṇṭiyaṉ, Rakunātaṉ and Vaṭuka nātar as contemporaries of Ciṉṉa Makipaṉ. Marutupāṇṭyaṉ ruled Civakaṅkai from 1780 to 1801 A.D. So this work should have been written within these 21 years.

Rakunātaṉ is said to be in Ciṉmaturai when this Kuḷuvam was written. During these 21 years there was no ruler in this name at Maturai. As a matter of fact the rule of the Nayaks ended in 1736 by the death of Queen Mīṉakshi. It should be remembered that Kiḷaccivalpaṭṭi is known by the name ciṟumaturai because of its Mīṉakshi temple and its formation of streets just like the famous Maturai. Really Kiḷaccivalpaṭṭi was a part of the Cētupati Kingdom. After the death of the grand old Cētupati (Kiḷavaṉ Cētupati) his kingdom was divided into few parts. Maṟavaṉ Nāṭu, a part of it was under Vaṭuka-

natar the eldest son of Kīlavaṉ Cētupati. At that time the lands around Kīlaccivalpaṭṭi were under the supervision of Vijaya Rakunāta Tēvar. He might have been the ruler referred to in Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam. In fact he died in 1790 A. D. If so, this Kuḷuva Nāṭakam would have been written some time between 1780 and 1790.

## Author

It seems traditional and customary that the authors of Kuḷuva Nāṭakam report their names as the play progresses, in their introductory parts. Kaṭikaippulavar in Eḷunakarattār Kuḷuva Nāṭakam and Vellaiyāppulavar in Kōṭṭur Kuḷuva Nāṭakam have given their names likewise, In Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam it is said that the ruler had given a diamond anklet to Parakutuppaṭṭi Pacumpoṉ Muttāṇṭi as a gift for his dramatic work wonderfully done to the pleasure of the poets.[2] The author had given out his name through indirect means. He belonged to the village named Parakutuppaṭṭi. The attributive term 'Pacumpoṉ' suggests that his family might have hailed from Pacumpoṉ which had produced a number of poets to its credit even from the Caṅkam period. Nothing more can be said about the poet with what is known about him at present. It has to be thought over whether he was one among the 21 poets who had celebrated the court of Marutupāṇṭiyar at Civakaṅkai.

## Aim

Every literary work has got some aim in its purview. Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam aims to praise the greatness of Ciṉṉa Makipaṉ, the rular of Mitilai Nakar, now called as Mitilaippaṭṭi in the Tiruppattūr Taluk, Rāmanātapuram District. During the time of the poet, he might have been famous among the people. He was noted for his munificence. Poet Aḷakiya Ciṟṟampalak kavirāyar was in his court with full of praises for him. He was a great lover of scholars and had helped them in his desire to give willing support to Tamil. The poet referred to this quality in many places in the in Kuluva Nāṭakam.

2. Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam, 10, 65-70.

As a matter of customary procedure the poet could expect costly presents from the ruler for a literary work like that of this Kuluva Nāṭakam. During that time this type of work was very popular among the common people. The poet might have written this piece to show off his talent of creating literary works in an impressive way.

Any way the poet had praised a good ruler who had earned good name among the people and also among the educated circle. Through this work the poet had tried to impart religious as well as literary knowledge to the people. When it was acted it might have given great pleasure to all inclusive of the ruler and his men.

## Form

Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam sets a good example of the particular genre. Following the literary tradition of the age, it begins with 'Kāppu' which is nothing but invocation to gods, It is praying to some gods for their blessings to make the work a grand success. Tōṭaiyam follows Kāppu and Maṅkaḷam is the next part.

Soon after, a vivid description about Ciṉṉa Makipaṉ and his country is given in 'Akaval' and then in 'Cantam'. Though it is the main portion of the work, it really serves as the introductory remarks for the dramatic action to follow. An idea about the coming Kuḷuvaṉ was given in this descriptive part.

Then the Kuḷuvaṉ makes his appearance on the stage. He is followed by Cinkaṉ who is really his attender. Both of them announce their own arrival. The Kuḷuvaṉ expresses his talent of magic and gives out a lot of things which he could do only with the help of magic. There is humour in his talk.

Immediately after, Kuḷuvaṉ and Ciṅkaṉ go for hunting the birds. Musical songs are being sung when they see the birds coming on to the fields. Then they spread the net in order to catch them. A large number of birds are seen falling in thc net Then the Kuḷuvaṉ divides the birds and gives one share each to the ruler and his men. They give presents to them. They thank God for His mercy and return to their mountain.

DR. T. P. M. LIBRARY

Ciṅkaṉ looks for his wife Ciṅki who had left him for a long time. Both of them meet in utmost joy. She has brought a lot of precious things. Ciṅkaṉ questions her about those articles. She replies with pride that they were presented to her by nobles in appreciation of her foretelling. Then they sing the praises of the Lord and the ruler. The action comes to a close happily.

The play ends with 'vāḻl'. With best wishes to one and all from the ruler the people the poet ends up his work.

Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam seems to be a perfect one of its kind. A well designed form can be seen it it. At first the hero of the work is seen described. Then the dramatic action of the Kuḷuvaṉ begins. The hunting scene is dramatised in songs. When the birds are caught they are divided among men in high positions according to their rank. A share is allotted to the hunters also. In the end the long separated couple meet in happiness. The form is completed here. The earlier half is descriptive while the latter half is dramatic.

Kuḷuva Nāṭakam is built up of songs and Viruttams. There are Akavals and Kalippās also. In this Kuḷuva Nāṭakam there are 17 Āciriya Viruttams, 17 songs, 5 Kalippās, 1 Kali-viruttam, 1 Akaval and 1 Cantappāṭal. Altogether there are 42 poeme in 438 lines. The songs are sung in many tunes or rākās which would add to the beauty of performance. The language used is very simple. So the play can be easily followed and understood by any common man.

**Characters**

Ciṉṉa Makipaṉ Kuḷuva Natakam centres around the praise worthy life of Ciṉṉa Makipaṉ, the ruler of Mitilai. But he has no part in the real action of the street-show. His noble actions and glorious achievements are expressed in glowing terms from the beginning to the end of the play. In fact he is one of the spectators of the show. When he heard of his glories uttered on the stage, certainly he would be generous in his gifts to the poet and the actors. Further his court is also praised. So all of them would be pleased to see the play being performed before them.

The Kuḷuvaṉ is the main character in action. His external appearance is explained in simple terms to suggest that he is not

a Kuḻuvaṉ of the ordinary type. He is called as 'Ekānta Yōkak-Kuḻuvaṉ' to signify his philosophical importance. He knows the art of magic. His competance in doing extraordinary things to the wonder of all has been explained by the poet in appealing terms. He commands respect from all quarters. Ciṅkaṉ attends to his needs and obeys to his commands.

The Kuḻuvaṉ carries with him various hunting materials like nets and bows. He sets out to catch birds in the fields. With the help of Ciṅkaṉ the birds are caught in large numbers. It is he who divides the birds to all and receives gifts in return. As a strong devotee of Lord Murukaṉ, he returns to the mountain after his succeesful hunting trip to pay homage to the Lord. He seems to be the personification of a 'saviour' helping the souls to their redemption.

Ciṅkaṉ is lower in rank but vigilant and untiring in his services. He is very sincere and always seems busy. When he has achieved his object, he returned to his mountain in search of his spouse. He meets her and enjoys with her to his heart's content He is duty bound. His way of life suggests that if anyone does his duty sincerely happiness could come to him naturally.

Ciṅki is proficient in fore-telling. She goes on doing her work and receives valuable presents as compliments to her talents. She seems very proud of her achievements. As a satisfied woman she meets her husband happily. Both are successful in their services and show eagerness to meet each other. A happy life is ensured for them. They are united to enjoy life in a contented way.

All the characters are introduced in their true colours with philosophical contents. They are selected from ordinary life to implant deep thoughts with superior value. They appear very common but preserve something very precious and valuable. The worth of Kuḻuvam has to be estimated in consideration with the superior values of these characters, who are selected from the ordinary stock of human beings.

The hero of the Kuḻuvam is placed in a previleged position since he is the ruler. The dramatic characters are expectants of his magnanimity. They have something rare in them. Moreover they are honest in their services and talented in their arts. poorly

clad they carry rich values. The real values of Kuḷuvam rest in these characters who are drawn very attractively in quite ordinary dresses.

**Social Values**

It was a time when big empires degenerated into small pieces of lands ruled by Chieftains. Often times they were at odds causing danger to the peace and prosperity of the people. At times when good relationship existed between the Chieftains, arts and literature of lower type would develop. When Ciṉṉa Makipaṉ Kuḷuva Nāṭakam was written Mitilai was friendly with the neighbouring lands because of the good policies adopted by its rulers. Aḷakiya Ciṟṟampalak Kavirāyar was the court poet. He was greatly respected and highly honoured. Other poets were also patronised by Ciṉṉa Makipaṉ. So they were in good spirits to sing his glory. Folk-arts received good support from him. Therefore they would develop in a natural way. Artists would train themselves to show off their talents. It may be assumed that the position of the artists in the society was good.

People had to satisfy themselves with the limited resources of the small politically divided areas where they lived in. So a high standard of life could not be expected in them. Most of them were peasants solely depended upon land. The fertility of the soil was the only source which gave life and vigour to the people. That was why the poets gave particular importance to rain. When the rain failed everything would be barren and lay waste. The sweet music of life solely rested in rain. The ruler depended upon the revenues collected from those owing the lands. Those who had more lands would pay more and had greater relations with the ruler. The landless had to implore the mercy of the land-owners to earn their livlihood. So naturally the land-owners became masters and the farm labourers became servants. By developing good relationship with the rulers, the land-owners improved their chances of controlling the poor workers in the fields. The social conditions were such that the poor labourers had to obey the commands of the landed gentry and lend their services for normal rates suggested by the owners. Political support was for the rich and so the poor had to suffer their fate in such a social and political set-up. They were

neglected by all. The poets who had praised the rain, had forgotton the services of farm-workers. Their untiring hands were those which had converted the pastures and forests into fertile fields smiling with corn and paddy. The social set- up of those days was such that the poets had neglected to sing high of the life breath of the society.

Cultivation was the main source of labour in those days. Paddy, sugar-cane,cocoanut, plantain, jack-fruit, etc. were mainly cultivated in Ci<u>nn</u>a Makipa<u>n</u>'s land. Tanks, wells. Canals were there. Fields were identified with particular names of their own. Poets and high officers were given lands free of tax which were called as 'Umpaḷam'. Lands could be enjoyed with generation rights.

There were political officers with stipulated duties and powers, Kāriyampalam, (Ampalakāra<u>n</u>), Karuppa Turantara<u>n</u>, pāmpāṭṭi and Eḷuvakkō<u>n</u> were the four important officers occuping high positions in political affairs, They were highly respected by the people. Even to-day in the village of Akkaramavaci in Paramukkṭi taluk, a particular family is called as 'Pāmpāṭṭi'. Perhaps they descended from one occupied this positien under a Chieftain.

The society was a divided one. Particular communities were respected and honoured. When shāring the birds the Kuḷuva<u>n</u> specially mentioned Nakarattār. It suggests that such a community was kept in high respect in these days. As things stands at present, the major community around Mitilaipaṭṭi is Nāṭṭuk Kōṭṭaic Ceṭṭiyar otherwise called as Nakarattar. It would be natural on the part of the poet to mention about the major community of the locality. Further such people had encouraged Kuḷuva Nāṭakam very much.

The difference between the rich and the poor was there. The poor had to extend their hands to the rich. They were the overlords of everywhere. So the poor had to submit to the wishes of the rich. Always the poor seemed to be at service to them and found ready to serve at their back and call' The social position was such that the poor had to obey the rich. Even then they were shown out as happy and contented.

It could not be said that the working class was utterly neglected by the society. When the Kuḷuva<u>n</u> divided the birds,

he allotted shares to the black-smith. carpenter and gold-smith also. He reminded of their good services to the society. Anyway it was a society partitioned with compartments of community, labour. etc.

The mountianeous tribes like Kuluvaṉ, Kuṟavaṉ etc. had, rare connections with these living in the other parts. They had their connections only in the arts of magic, foretelling, folk-performances etc. For medical purpose also their help was sought for. Ordinarily they were hunting and had little or less relations with others.

People had good faith in God. The ruler was the devotee of Lord Civaṉ. The mountianeous tribes worshipped Lord Murukaṉ. He was honoured by them since he had married Valli who belonged to the Kuṟavā tribe. They celebrated him as a hunter because he approached Vaḷḷi in the guise of a hunter to deceive her and then to marry as to the desire of sage Nāratar.

There are two types of Gods. They are Civaṉ, Tirumāl, Murukaṉ etc. Who are higher in rank and so called as 'Peruṉ-tēyvam'. Gods like Karuppaṇṇaṉ, Karaṭipperumāḷ, Maṅkaic Ceṭṭicci, Muttammai etc. are ranked lower and called by the name 'Ciṟuteyvam'. Both these types were worshipped by the people in those days with equal respect. Saivism was the popular religion. Karuppaṇṇaṉ was respected more than any other ciruteyvam. Mostly religious minded people are orthodoxical. Such a nature could be expected of those people also. Saiva Siddhanda Philosophy was liked by them. Kuḷuva Nāṭakam was designed in such a way to expone metaphortically this Philosophy.

Epics were famous in those days. There are so many epical and puranic references in this Kuḷuvam. In order to ensure easy grasp of what he is saying, the poet has used the names of epical characters as similes. Religion had its important share in deciding important matters that are happening in the prevailing society.

In short the society described in this Kuḷuvam was full of disparities and differences. Amidst such differences the people

had tried to live happily and peacefully. Religion had its big share in organising and shaping the social life of the people.

**Philosophical Contents**

Man was pressed hard with external problems. The excruciation made him feel worried and so something unwilling may tend to happen. He should be strengthened to face problems. when man was stepped up in materialism he could not satisfy himself in his needs. Religious and philosophical idealogies could tame his mind to accept failures and bear agonies. He could sustain any amount of difficulties by developing his spiritual strength. So he was trained in the way of religion. Sometimes religion would be advantageous for a few to decline a lot. In such situations it would prove as something dangerous and harmful to the society. That should be avoided. Anyway spiritual strength has got its own value. Multifarious problems of materialistic life can find solutions through spiritual means. So thinkers ordained religious philosophies which are very difficult to understand and follow by common people. In order to make them easy certain methods are being adopted by scholars and poets. It may be considered that Kuluvam is one such method to inculcate the Saiva Philosophy of God, Soul and Matter. They are termed as pati, pacu and pacam.

The birds are the souls. The open fields represent matter. A wise teacher or saviour has to impart knowledge so that they can attain salvation. The Kuluvan serves the purpose of the saviour otherwise called as 'Gnana Guru'. If man is redeemed of his guilts he would reach the feet of God. Such a philosophical impulse is very clear in Kōṭṭūr Naiṉār Kuḷuva Nāṭakam.

**Historical Notes**

To some extent certain historical facts are well known from this Kuḷuva Nāṭakam. Ciṉṉa Makipaṉ of Mitilai, Marutupāṇṭiyar of Civakaṅkai, Vijaya Rakunāta Tēvar of Ciṟumaturai and Vaṭuka Nātar of Maṟava Nāṭu were contemporaries. Aḷakiya Ciṟṟampalakkavirāyar in the Court of Ciṉṉa Makipaṉ was the grand-son of the famous poet of the same name who had lived when Tirumalai Nāyakkar ruled Madurai. There was place during the time of Ciṉṉa Makipaṉ and he had developed sweet relationship towards the neighbouring countries. Deep enquiry may suggest more facts.

## Style

Ci<u>nn</u>a Makipa<u>n</u> Kuḷuva Nāṭakam is built up of songs and poems of various kinds. They are sweet to sing and pleasant to hear. They can attract even the ordinary people. What the poet wanted to impart were all given out in simple style. Moreover it is impressive. It could help the author to achieve his object in view.

Spoken language is used by the poet in many places. Words are used as they were spoken by the people in those days. Three is nothing ambiguous in any one of the usages. Sanskrit words are mixed in abundance. They do not appear unnatural or artificial since in those days people were very common in using them. Sweet sounding words are added to suit the contents. Sometimes words are high sounding as to the necessity of the contexts. By using certain folk-techniques the author had tried to intensify his ideas. They are really effectivc. Though literary embellishments and beauties are less in this Kuluvam it had not failed its audience in its attractions.

## Dramatisation

Only three characters took part in the action. Many of the events had to be shown out in singing than in action. When singing they had to reveal out their feelings. The spectators had to form mental pictures of the events taken place. Kuḷuvam was a folk-play to make people merry. With limited resources it had to be performed.

## Place of Kuḷuvam in Tamil

Kuḷuvam is a form suited for a street-show. Its area is very limited. It had attracted a particular set of people belonging to a particular place. The theme of it suits only to a small circle of people belonging to a particular period. Its boundary is limited by space and time. So it could not widen itself, to other places and could not swim forward crossing the passage of time. When and where it was written and acted, it had its value of pleasing people. Kuḷuvam has got timely importance with local values. It has got its own little share in enriching Tamil language and literature as a dramatic genre with individual qualities.

# சின்ன மகிபன் குளுவ நாடகம்

## காப்பு

1. சங்கநிதி சுரபிசிந் தாமணி யொப்பான
தானகர் னன்சுப் பன் ஸகைப் பூபன்
துங்கனெனுங் குழந்தை வயித்திய லிங் கேந்திர
துரந்த ரிகன் தனைப் பயின்றசுப கெம்பீரப்
பங்கயவில் மதனனெனுஞ் சின்ன னேந்திரப்
பாக்கிய பதிமேல் குளுவன்பனு வல்கூற
மங்கையெனு மாவுடையாள் பங்கில் மேவி
வளர்திருக் கோள லிங்கமலர்க் காப்பாமே.

2. பொன்மிருந்து வளருமல்லைக் கவிஞற் சக்கரப்
பூபதியாய்ச் செங்கோல் புரியுங் கோமான்
தென்துமிலை யழகியச் சிற்றம்ப லேந்திரந்
தீரன் மகிழ்சின்னன் வசீகரன் மீதில்

---

(1) சங்கநிதி, சுரபி, சிந்தாமணி ஆகியவை கேட்டவற்றைத் தரும் தன்மையுடையன (விளக்கம் பின்னால் காண்க).
துங்கன் — பெருமை மிக்க வெற்றியை உடையவன்.
துரந்தரிகன் — வேகமாகக் குதிரை செலுத்துவோன்.
பங்கயவில் — தாமரை மலராகியவில்
மதனன் — மன்மதன்
பனுவல் — நூல்
பங்கில் மேவி — பக்கத்தில் நாயகனாக அமர்ந்து.
மலர் — பாதமாகிய மலர்.
சுப்பன், குழந்தை, வயித்தியலிங்கம் — சின்ன மகிபனின் மக்கள்.

(2) மல்லை — பெருமை மிக்க, வளமான, மல்லையூர்.
பூபதி — பூமியை ஆள்வோன்.
குஞ்சரம் — யானை

நன்மணிநன் னூற்கவிஞர் பாதம் போற்றி
நலத்தமிழால் குளுவ நாடகத்தைக் கூறக்
கனமதக்குஞ் சரவிகடக் கம்ப கும்பக்
கணபதி பொய்யா மொழியால் காப்பாமே.

3. பூவுமலர் மகள்நிறையும் வயித்திய லிங்கப்
பூபதிநற் றுணைவிளங்கிப் பொருந்தும் கீர்த்தி
மேவுவரை மன்ன னெனுந் திகழ் கெம்பீர
விற்பன்னாஞ் சின்னன் விசையன் மீதில்
கூவுகுயில் மொழியி லின்னன் னூ லினைக்
குளுவ நாடகத் தமிழாய்க் கூறநாளும்
ஆவுடைய நாதர் சிவயோக வல்லி
யருள்நிறைச் செஞ்சரண விணையாடிக் காப்பாமே.

## தோடையம்

4. திருநிறை பெறுபுயன னழகிய
சிற்றம் பலக்கவி ராசமால்
மருவு மிருதய மகிழ்சின்னன்
மகிபத னப்பதி மீதிலே
குருவின் பதம்பணிந்து மநுரிதக்
குளுவ நாடகங் கூறவே
கருணை நிறைதிரு வுடையவர்க்
கமலச் சேவடி சரணமே.

---

விகடக்கம்பம் — வினோதமான, அசைந்துவரும்.
கும்பம் — (குடம்) யானையின் நெற்றி, மத்தகம்.
அழகிய சிற்றம்பலம் — மிதிலைக் கவிஞர்.

(3) பூவும் — பூமாதேவி. மலர்மகள் — திருமகள் (செல்வம்)
மேவுவரை — பொருந்தும் மலை.
விற்பனன் — நன்கு கற்றவன்.
விசையன் — வெற்றியுடையவன்.
நாளும் — தினமும், எப்போதும்.

(4) புயன — கரத்தையுடையவன்.
மால் — பெருமையுடையவன்.
மருவுமிருதயம் — ஒன்றி உறவாடும் உள்ளம்.
மகிபதன் — பூமியை ஆள்வோன்.
தனபதி — குபேரனுக்கு ஒப்பான செல்வன்.
மதுரிதம் — இனிமையான.
கமலச்சேவடி — தாமரைமலர் போன்ற சிவந்த பாதம்.

5. காண்டீபன் மருதுபாண் டியன்மகிழுங்
கர்ணன் சின்னன் பூபன்மேல்
நீண்டிடுந் தமிழ்க்குளுவ நாடகம்
நிறைந்த சபைதனில் கூறவே
பாண்டியனு தவுமழகு சவுந்தரி
பதிபுகழ்க் கரடிப் பெருமாளும்
வேண்டிலுவ ணமணிமர வடிகருப்பணன்
மெய்ப்பதந் தான்துணை யாகவே.

6. துங்கன் வயித்திய லிங்கன்
துணைபெறு தூயனைவர் சகாயனாஞ்
சிங்கடாகைப் பிறங்க முல்லிய
சீலன் சின்னன் மாலின்மேல்
பொங்கு தமிழிலங்குங் குளுவன்சொல்
பொருந்தப் புவிதனில் கூறவே
மங்கைசெட் டிச்சியம்ம னலங்கிரத
மலர்பதந் துணையாய வணங்குவாம்.

7. வாமனுயர் சுபபூப னழகப்ப
வாகன் குழந்தைய யோகன்
சோமன்வயித் தியலிங்கத் தீரன்தனைப்
பெற்றதூ யன் சின்னன் நேயன்மேல்

---

(5) காண்டீபன் — வில்வித்தையில் சிறந்தவன் (அருச்சுனன்)
மருதுபாண்டியன் — சிவ கங்கைச் சீமை அரசன்.
கர்ணன் — கொடையில் சிறந்த கர்ணன் போன்றவன்.
பூபன் — பூமியை ஆள்பவன்.
நிறைந்தசபை — கலவிமான்கள் நிறைந்த அவை.
சவுந்தரி — சவுந்தரியம்மன்
காடிப்பெருமாள் — ஒரு தெய்வம்

(6) வயித்திய லிங்கன் — சின்னனின் துணைவன்.
ஐவர் சகாயன் — ஐவரை உதவியாளராய்ப் பெற்றவன்.
சிங்கடாகை — (சிவகப்பிடாகை) சிங்கம்புணரி என்ற ஊர்
பிறங்க — விளங்க.
முல்லிய — வெற்றியுடைய
மங்கை செட்டிச்சியம்மன் — வள்ளிநாயகியம்மன்.
அலங்கிருதம் — அலங்காரமாக அமைந்த.

(7) வாமன் — சிவன், வாமனன்.
அழகப்பவாகன் — அழகான உடலமைப்புடையவன்;
சோமன் — குபேரன், சந்திரன்.
காமரதிமயல் — காமவின்பம்.
பாணியும் — இசைப்பாணியும்.

காமரதி மயலிருமாக் குளுவன்சொல்
கருத்தி லுயர் தமிழ்க் கூறவே
பாமலிபா ணியுங்கற்கக் கருப்பணர்பொற்
பதந்த னைத்துதி செய்வாம்

## மங்களம்

8. மங்களம் சதானனுக்கும் வள்ளிமண வாளனுக்குஞ்
செங்கமல மலர்மார் பனுக்குஞ் செயமங்களம்.
எங்கள் சின்னன்பூ பாலனுக்குஞ் செயமங்களம்.
பொருள்நிறைகு பேரனுக்கும் புண்ணிய சரீரனுக்குந்
திருவளர் பொன்மார் பனுக்குஞ் செயமங்களம்.
எங்கள் சின்னவசீ கரனுக்குஞ் செயமங்களம்.

## அகவல்

9. செந்தா மரையான் தினங்குடி யிருந்து
சந்தான வாழ்வு தான்வளர்ந் திடுவோன்
மன்னவர் பெரியோர் மறையோர் தபோதனர்
தன்னனை யவர்க்கு நல்வரம் பெற்றோன்
மல்லிகை முல்லை மாதுளை பலவு
நெல்லிமா விலுப்பை நிறைந்தசெண் பகமும்
கன்னலுங் கதலி கமுகுதெங் குகளும்
புன்னைமா வனமும் பொருந்தியே வளர்ந்து
வானி லுலாவ மடந்தையும் மேவ
நானிலஞ் செழிக்க நல்மனை செழிக்க
மந்திவா னரங்கள் மரங்களி லுலவ
சிந்திய கனியில் தேன்மிகச் சொரிய
குயில்பல கூவ குவலயம் புகழ
மயில்விளை யாட வரிவண்டு பாட

---

(8) சதானன் — சதாசிவன் (நிலைத்திருப்போன்)
வள்ளிமணவாளன் — முருகன்.
செங்கமல மலர்மார்பன் — திருமால்.

(9) செந்தாமரையாள் — திருமகள்;
சந்தன வாழ்வு — மக்கள் பேறுடைய வாழ்வு
தபோதனர் — தவமுனிவர்
கன்னல் — கரும்பு
கதலி — வாழை
வானரம் — குரங்கு
தேனதி — தேன் போன்ற நீரையுடைய நதி
குவலயம் — உலகம்
தீர்த்தனம் — தீர்த்தமாடல்

வானவர் புவியோர் மறையோர் தபோதனர்
தேனதி யதனில் தீர்த்தன் மாட
தெய்வகன் னியர்கள் தினந்தினம் வருக
சைவதே வர்களுந் தான்விளை யாட
ஆண்ட மடமும் அரங்கநீர்ச் சுனையும்
வேண்டிய ரிஷியும் மிகுபதஞ் சொரியும்
முனியுமன் பதினெண் முதலமைச் சித்தரும்
கனிவு டன்வருங் கன்னிமா மலையான்
குவலயஞ் செழிக்கக் கொண்டல் நீர் பொழிய
சிவ தவ முயருந் திருமணி ந தியான்
நானாடு மெய்க்க நவமணி கொழிக்குங்
கோனா டுடைய குபேர துல்லியன்·
பொன்னுல கிணையாய்ப் பூவுல கதனில்
மின்னுசெம் பொன்னுயர் மிதுலையம் பதியான்
கோலிய மருவலற் கோட்டைகொத் தளத்தைக்
காலினா லெத்துங் கடகுஞ் சரத்தான்.

### சந்தம்

10. நதிரத்தின மணிசித்திர வயிரக் கல்லைவைத்து
நலமுற்ற சருகைப்பொன் னுருவுள்ள குமுழ்வைத்து
நிதிபெற்ற சுடிகைக்குள் இலங்கிட்ட கொலிசிட்டு
நேர்ந்த தொங்கலின் மணிக்கலம் கலீரென
ஆய்ந்த சங்கிலி விருதொடு பளீரென
வாய்ந்த குங்குமத் திலகம் இலங்கிய
வேந்தர் கண்டவர் மனத்ததி சயமொடு
பஞ்சகதி கொண்டு கட ருஞ்சக்தி மண்டநடை

---

கொண்டல் — மேகம்
நானாடு — நால்வகை நிலமுடைய நாடு
நவமணி — ஒன்பது வகை மணிகள்
பொன்னுலகு — தேவருலகு.
பூவுலகு — மண்ணுலகு
மிதுலையம்பதி — (தென்) மிதுலைநகர்
கோலிய — கைப்பற்ற விரும்பிய.
மருவலர் — பகைவர்
எத்தும் — ஒற்றித்தள்ளும்

(10) நதிரத்தினம் — வணங்குவதற்குரிய ரெத்தினக் கல்
சருகைப்பொன் — சரிகைக்குதவும் பொன் இழைகள்
குமுழ் — (குமிழ்) உருண்டு திரண்ட வடிவம்.
தரளம் — முத்து
சுடிகை — முடி, நெற்றிச் சுட்டி

(விஞ்சு) செஞ்சரண் கொஞ்சுவாம் பரியான்
அனுமடா லச்சினமடா லம்புசேர் மாக்கடால்
பனுவன் சொற்களில் பகர்பொருட் டாளன்
சந்திர வட்டந் தழைந்திடுங் குடையான்
பைந்தமிழ் துலங்கும் பாரதக் கையான்
சத்தமே கங்கள் தானொலிப் பதுபோல்
மெத்தவே முழங்கும் வெண்முர சொலியான்
பவளமல் லிகையும் பருமுல்லை மல்லிகை
குவளைமா லிகைசேர் கொடியம் பதியான்
தெக்ஷணா மூர்த்தித் திருப்பதம் பணியும்
வச்சிர சரீர மனுகுல ராமன்
ராசரா சேந்திரன் நளின குணாலன்
போசரா சேந்திர புண்ணிய குபேரன்
வேந்தன் குளந்தாபு ரிகுடைநிழல் செங்கோல்
நடத்தும் பிரசங்க நளினஒய் யாரன்
திடத்துங் கனன்சிரோ ரத்தின வுசிதன்
உடையா மகிப னுதவு குமாரன்
குடையா ளம்நான் குமுளகெம் பீரன்
விருதுபூண் டிடுமால் விசையசிங் காரன்
மருதுபாண் டியமால் மகிழும் பிரதாபன்
பஞ்ச லக்ஷணமும் பகர்குரு பீடம்
புனஞ்சொல்நன் னூல்நெறி போதித்த வள்ளல்
புவியெலாம் புகழும் புனிதமால் மல்லைக்
கவிச்சக் கரவர்த்தி கதித்த வதானி
அழகுசேர் கின்ற யானையின் கன்று
வளநாடு பெற்ற மார்க்கண் டயோகன்
திவ்விய மழகிய சிற்றம் பலேந்திரக்

---

விருது — வெற்றிச் சின்னம்
இலகிய — (இலங்கிய) ஒளிவிடுகின்ற
பஞ்சகதி — குதிரையின ஐவகை நடை
வாம்பாரி — தாவிச் செல்லும் குதிரை.
சத்தமேகம் — (சப்தமேகம்) ஏழ்வகைமேகம் (வி.பி.கா.)
வெண்முரசு — அழகுடைய முரசு
மாலிகை — பூமாலை, வரிசை.
கொடியம்பதி — கொடிகள் பறக்கும் நகரம்
தெக்ஷணாமூர்த்தி — சிவபெருமான்
நளின குணாலன் — இனிமையாகப் பேசுவோன்.
குபேரன் — செல்வன்
குளந்தாபுரி — சிவகங்கை
பிரசங்கம் — பேச்சு
ஒய்யாரம் — சிறப்பு
உசிதன் — மேன்மையுடையவன்

கவிராச போச காண்டீபன் மகிழ்வோன்
துற்குண வண்டர் சொல்மொழி கேளான்
சற்குண மானோர் தன்மொழி கேட்போன்
சந்திர சூரியர் தான்வடக் கெழினுஞ்
சுந்தர விலாசன் சொல்லுரை தவிரான்
அடுத்தவர் தம்மை யாதிரித் தன்னங்
கொடுத்து ர்ஷிக்கும் குருகுலத் தரசன்
வில்லினில் ராமன் மெல்லியர் காமன்
மல்லினில் வீமன் முல்லையம் தாரன்
வாசனை பொருந்தி வளரும் மாப்பிள்ளை
சிற்றம் பலய்யர் தினந்தினம் மகிழ்வோன்
வள்ளல்நற் குணமுடையான் வடுகநா தேந்திரன்
உள்ளமே மகிழு முல்லாச யோகன்
வந்தனைப் பொருந்து வயித்திய லிங்கத்தை
நற்றுணை படைத்த ரஞ்சித போகன்
அனந்தருஞ் சுப்ப னழகு பூபனைய
மன்னவன் குழந்தை வசீகரன் தனையும்
நிதிநிறை வயித்திய லிங்க பூபனையும்
மதிநிறை பொருந்த மக்களென் றழைப்போன்
கற்றவர்க்குதவுங் காரியம் பலமுஞ்
சொத்திக் கருப்ப துரந்த ரன்தனைப்
பருவ மாலான் பாம்பாட்டி தனையும்
இருநிதி வளரும் மெழுவக்கோன் தனையும்
மனமிக மகிழும் வாக்கரிச் சந்திரன்

---

உடையா மகிபன் — உடையான் என்னும் அரசன்
குடையாளம் — குடை முதலிய சின்னங்கள்
கெம்பீரம் — வீரத்தோற்றம்
விசையம் — வெற்றி
அவதானி — அவதானம் செய்தவர்
அழகிய சிற்றம்பலக் கவிராசர் —
திவ்வியம் — தெய்வத் தன்மை
போசன், குருகுலம் —
மெல்லியர் — பெண்கள்
மல் — குத்துச் சண்டை
வடுகநாதேந்திரன் — மறவர்நாட்டு அரசர் (வைரவக் கடவுளையும் குறிக்கும்)
வந்தனை — (வந்தனை) பணிந்து வணங்கல்
ரஞ்சிதபோகன் — இனிய வாழ்வை அனுபவிப்பவன்.
அனந்தரும் — அடுத்தபடி வாரிசுக்கு உரிமையான.
காரியம்பலம் — காரியக்காரன்
கருப்பது ரத்தன் — உட்படு கருமத் தலைவன் (வயிற்றுக்கு உணவளிப்போன் எனவும் படும்)

கனகாம் பிரியக் கர்ண வுதாரன்
செந்திரு மார்பன் சீயக் கோபன்
ஆய்ந்தரு வுதாரன் அசகாய சூரன்
பொன்னுயர் நேயன் புகழ்கனி வாயன்
தென்னவ னிணைசேர் சின்னன் பூபன்
மீதினில் புலவர் மிகமன மகிழத்
தாதுசேர் குளுவன் தமிழ்தனை யுரைக்கப்
பரகுதுப் பட்டிப் பசும்பொன்முத் தாண்டிக்கு
வரகுசே கரனடி வச்சிர வளையுத்
தந்த கர்ண வுதார கெம்பீரன்
அய்ந்தரு நிகரா யம்புலி புகழ
வந்த சின்னன் மகிபதி நாட்டில்
வளர்திரு மிதுலை மாநக ரதனில்
தளமுயர் பறவை தனைவேட் டையாடக்
கன்னிமா மலையில் கதித்ததேன் சுனையில்
நன்னீ ராடி ரம்மிய மாக
முருகரை வணங்கி முகத்திநீ றணிந்து
திருநுதல் விளங்கத் திலதமுந் தரித்து
சல்லடந் தொடுத்துச் சருகைலேஞ் சணிந்து
நல்லபொன் கச்சை நலமுடன் வரிந்து
பத்தரை மாத்துப் பசுந்தங்கக் கடுக்கன்
மெத்தவே தரித்து மேன்முரு கணிந்து
சரப்பணி கண்டி தளதள தளெவென
வீரக்க ணையாழி மினுமினு மினுவென
அக்குவக் கரமணி அழகுடன் தரித்து

---

பாம்பாட்டி — காலமறிந்து கூறுவோன் (பருவமால்)
எழுவக்கோன் — நிதியை பரிபாலிப்பவன் (இருநிதிவளரும்)
இருநிதி — சங்கநிதி, பதுமநிதி.
கனகாம்பிரிய — பொன்னைப் போன்று விரும்பத்தக்க
சீயம் — சிங்கம்
அசகாய சூரன் — உதவி வேண்டாத் தனி வீரன்.
வச்சிர வளை — வைரத் தண்டை
பரகுதுப்பட்டி — ஓரிடம்
முத்தாண்டி — புலவர்
வரகுசேகரன் — இறைவன்
தளமுயல் — கூட்டமாக, தரையிலிருந்து உயர்ந்த
கதித்த — தோன்றிய
நீறு — திருநீறு
திலதம் — திலகம்
சல்லடம் — வர்ணமுடைய அரைக்கால் சட்டை
சருகைலேஞ்சு — சரிகையுடைய கைக்குட்டை துணி.
கச்சை — அரைக்கச்சு

கொக்குமா பச்சி கொண்டையில் சொருகிச்
செம்பொன் தாயித்தில் சிறுநரிக் கொம்பு
இன்பமா யடக்கி யிருகையி லணிந்து
சுண்டுவில் லம்பு துலங்குகூ னருவாள்
மண்டலம் புகழ்வளரிதொட் டிலங்க
கொக்கு முக்கூடுங் குருவெண் ணாரை
சிக்குகண் ணிகளுஞ் சேரவே யெடுத்து
சிங்கனுங் கூட சிந்தைதான் மகிழ்ந்து
அங்குட னேவிளை யாடி வருகவே.
அரக்குடன் கள்ளு மறிவுடன் குடித்து
வெறிக்கெனப் பார்த்து விசையைத் திருத்திச்
சிலம்புக ளொலிக்கத் திகிதிகி திகியென
நிலம்புகழ் களரி நிறைந்து கொண்டாடச்
சிலைமதன் போலச் சிறந்திடு கன்னி
மலைவளர் குளுவன் வந்து தோன்றினனே.

## குளுவன் தரு

(பல்லவி)

11. (ஏகாந்த யோகக் குளுவனும் நானே)

(சரணம்)

திருவரை மார்பன் சீயக்கலி கோபன்
தென்னவன் மைந்தச் சின்னன் நாட்டினில்

---

முருகு — காதணி
சரப்பணி — கழுத்தணி
கண்டி — உருத்திராக்க மாலை
கணையாழி — மோதிரம்
அக்குவக்கரமணி — உருத்திராட்சமாலை
கொக்குமாபச்சி — கொக்கிறகு
தாயித்து — மந்திர தகடுள்ள ஓர் அணி.
நரிக் கொம்பு — நரிப்பல்.
சுண்டுவில் — சுண்டியடிக்கும் சிறியவில்
கூனருவாள் — வளைந்த அரிவாள், வாங்கரிவாள்,
மண்டலம் — உலகம்
வளரி — சிறிய கம்பு, ஒருவகை ஆயுதம்.
முக்கூடு — கொக்கு பிடிக்கும் கூடு,
சிக்குகண்ணி —பறவைகளைப் பிடிக்கும் கண்ணி
அரக்கு — சாராயம்
வீசை — மீசை
களரி — களர்நிலம்
சிலைமதன் — கரும்புவில்லையுடைய மன்மதன்.

விருத ராசர்களு மிருதய மகிழப்பட்சி
வேட்டைக ளாடுங் குளுவனும் நானே—
ஏகாந்த யோகக் ...... (i)

அன்பர்க்கு அன்னங் கொடுத்து ரட்சிக்கும்
அழகு சின்னக் மகிபதி நாட்டினில்
இன்பமதாய்ப் பச்சி வேட்டை களாடும்
ஏகாந்த யோகக் குளுவனும் நானே —
ஏகாந்த யோகக் ...... (ii)

## விருத்தம்

12. அவனி யில்புகழ் படைக்க அழகிய சிற் றம்பலேந் திரகவி
அவதா னிமெய்க்குங் கர்னன் அழகுசின் னன்மால் நாட்டில்
நவமணி மாலை பூண்டு நல்ல கொக்கிறகுஞ் சூட்டி
குவலயத் துதிக்குஞ் சித்திரக் குளுவனும் நான டைய்யே.

## குளுவன் தரு

### (பல்லவி)

13. சித்திரக் குளுவனானே யெத்திசை யெல்லாம்
துதிக்குங் கரத்தன் சின்னண்ணன் மீதில்
முத்தமிழ் தனைப்படிக்க — சித்திரக் குளவனானே

(சரணம்)

தீரன் எவர்க்கு முபகாரன் தொடையினிலு
தாரன் வலுவில் ரணசூரன் தனத்தினிற்கு
பேரன் அழகில் ரதிமாரன் மிதுலைநகர்
ஊரன் சின்னணன் சுதகன் தனைத்துதிக்கும் —
சித்திரக் குளுவனானே ... (i)

---

(11) திருவரை மார்பன் — வளப்பமுடைய மலைபோன்ற மார்பினையுடைய சின்னன்.
மைந்தச் சின்னன் — விரும்புகின்ற சின்னன்.
விருதராசர் — வெற்றி விருதுகள் மிக்க அரசர்.
ரட்சிக்கும் — காப்பாற்றும்
ஏகாந்தம் — தனிமை.

(12) அவனி — பூமி
மெய்க்கும் — மெச்சும், பாராட்டும்
குவலயம் — உலகம்
துதிக்கும் — போற்றும்
சித்திரக் குளுவன் — சித்துக்களைச் செய்யும் ஆற்றலுடைய குளுவன் ; அழகு மிக்கவன்.

தென்னன் திரவிய சம்பன்னன் அறிவினில்விற்
பன்னன் கொடையுதவுங் கன்னன் மிகுந்திடுஞ் சம்
பன்னன் புவிபுகழு மன்னன் உயர்கமலக்
கன்னன் பதம்பணு சின்னணன் தனைத்துதிக்கும் —
சித்திரக் குளவனானே ...... (ii)

காமன் பெலத்தில்வெகு வீமன் அன்னசத்திர
சோமன் சிவநெறியில் நேமன் தனுவில்ரெகு
ராமன் அருளுமுல்லைத் தாமன்சொக் கருக்குகந்த
மாமன் இணைசின்னணன் வாமன் தனைத்துதிக்கும் —
சித்திரக் குளவனானே ...... (iii)

## விருத்தம்

14. அனந்தரு நிறையு லாவும் அழகிய சிற்றம் பலேந்திர
தனபதி மகிழ்சின் னண்ண நாஷ்டீகள் வளரு நாட்டில்
புனலுயர் ஏரி வாவி பொருகய லருந்தும் பச்சி
தினந்தினம் வேட்டை யாடச் சிங்கனும் வருகின்றானே.

## சிங்கன் வரு தரு

(பல்லவி)

15. சிங்கனு நானே கொடுக்குறச் சிங்கனும் நானே —
சிங்கனும் நானே ......

(சரணம்)

அழகிய சிற்றம்ப லேந்திரன்
மகிழ்ந்திடுஞ் சின்னண்ணன் நாட்டினில்
(பழகிய) வங்கண மேவுங்
குளுவனுக்கே நிதிவா ரணியுங் —
சிங்கனும் நானே ... (i)

---

(13) வலுவில் ரணசூரன் — வலிமையான் விற்போரில் வல்லவன்.
ரதிமாரன் — ரதியின் துணைவனான மன்மதன்
சுதகன் — மகன்
சோமன் — சந்திரன்
நேமன் — விதிமுறையுடையவன்
தாமன் — மாலையுடையவன்
மாமன் — பெரிய மன்னன்
வாமன் — அழகுடையவன்

(14) அன்ந்தரு — அளவில்லாத
அனந்தருநிறை — அன்னதானம் செய்யும் உறுதிப்பாடு
தாஷ்டீகன் — பலமுடையவன்
புனலுயர் — நீர் நிரம்பிய
வாவி — குளம்
கயலருந்தும் — மீன் தின்னும்.

(வெடுக்கெனப் பேசிடுங் குளுவனை
வீம்புடன் கெடுத்துச்) சொல்லித்
தடுக்கின்ற லோபபரைத் துண்டு
தடிகெண் டெட்டி யடிக்கின்ற —
சிங்கனும் நானே ... (ii)

மன்னர் மகிழ்கின்றசின் னன்பூப
மகிபன்தமி ழுக்குவரிசை தருகையில்
சன்னையஞ் சொல்லித்தடுக் கின்றலோபபரைத்
தாடியைப் பிடித்தாட்டி யுதைக்கின்ற —
சிங்கனும் நானே ... (iii)

பன்னுத மிழுக்குத வுந்தயாள
பாக்கியசின் னன்யோக்கிய நாட்டினில்
பொன்னுயர்சித் திரக்குளுவனுக் கேதினம்
பொங்கல்சோ றுகறியுஞ் சுமக்கின்ற —
சிங்கனும் நானே ... (iv)

## விருத்தம்

16. பருவரதி மாதர்மதன் வயித்தி யலிங்கப்
பார்த்திபநற் றுணை விளங்கிப் பாரில் கீர்த்தி
வருதமிழுக் குதவுமுகில் சின்ன னேந்திர
மானபரன் தளைத்திலங்கி வளரு நாட்டில்
கருணை சிருஷ்டித்தல் மூன்றுநிறை யுந்தெய்வக்
கன்னியர்கள் சஞ்சரித்துக் கதித்து லாவுந்
திருமலை யினிற்பதஞ்சொல் முனிவ னமைத்துத்
தந்தசித்து வித்தைவளந் தான்சொல் வேனே.

## சித்து வித்தைத் தரு

(பல்லவி)

---

(15) அங்கணம் — அவ்விடத்தில்
வரிசை — பரிசில்
சன்னையம் — கோளுரை
லோபர் — தீயவர் (கஞ்சர்).

(16) பருவரதிமாதர் — பருவ அழகில் பொலியும் பெண்கள்.
பார்த்திபன் — அரசன்
பாரில் கீர்த்தி — உலகில் புகழ்
முகில் — மேகம்
மானபரன் — புகழ்மிக்கவன், மானம் மிக்கவன்,
சிருஷ்டித்தல் மூன்றும் — படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்கள்.
கதித்துலாவும் — சிறந்து வாழும்.
திருமலை — கன்னிமாமலை
பதஞ்சொல் முனிவன் — அறிவுரைகூறும் முனிவன், பதஞ்சலி முனிவர்.

17. சித்து வித்தை யறிவேன் அடைய்யே
சித்து வித்தை யறிவேன்

(சரணம்)

சித்து வித்தை யறிவேன் பொன்னழகிய
சிற்றம் பலேந்திரன் மெய்த்த றிவர்கள்
மத்தகப் புயன்கொற்ற பரமெச்சிய வாகனன்
சின்னன் விவேக நன்னாட் டினிலே
சுத்த யிரும்பைப் பசுந்தங் கமாக்கும்
சூரிய லோகத்தில் சென்று திரும்பவும்
நித்தம் மிரவிற் பரிதியுண் டாக்கவும்
நேசத் துடன்பொடி வீசிக் கையாடவும்
— சித்து வித்தை...... (i)

சேலின விழிமட மாதற் கிருகொம்பு
சேர்ந்து முளைத்துத் திருப்பால் சொரியவும்
வாலியைத் தின்று மனிதர் செழிக்கவும்
மத்த கசந்தனை வாவென் றழைக்கவும்
ஆலிலை மேல்பள்ளி கொண்டானைக் காணவும்
ஆறுரை பாப்பார்க் கிருகணங்க ளுண்டாக்கவும்
கோலித் திரியும் பொருச்சாளி தான்ஒத்தைக்
கொம்பனைத் தாங்கிக் குலாவிச் சுமக்கவும்
— சித்து வித்தை...... (ii)

ஆனை தனைப்பெரும் பானையிக் குள்ளே
அடைத்து அய்ங்காத வழித்தொலை செல்கவும்
கானப் புலிதனை வானத்தில் வளர்த்து
கதித்துத் துலங்கிச் செழித்து வளரவும்

---

(17) (i) சித்து வித்தை — தெய்வீக ஆற்றலால் செய்யும் வித்தை, வியப்புறு வித்தைகள்
நித்தன் — தினமும்
இரவிற்பரிதி — இரவில் சூரியனை எழுச் செய்யல்
பொடிவீசி — மயிர்க்கூச்செறியுமாறு பொடித்து வீசுதல்.

(ii) சேலினம் — மீனினம்
வாலி — குதிரைவாலித் தானியம்; கரிக்குருவி
மத்தகசம் — மதம்பொருந்திய யானை
பள்ளிகொண்டான் — கண்ணன்
ஆறுரை — நல்வழி; சடங்குமுறை கூறல்
கணம் — இனம்; பூதகணம்
கோலி — சுற்றிவளைந்து
ஒத்தைக் கொம்பன் — விநாயகர்
குலாவி — மகிழ்ந்து கூடி

பூனையை வண்டு பிடித்து விழுங்கவும்
பூரண வெண்மதி பாலைக் கறக்கவும்
மானைப் பிடித்தென் வீடதனில் கட்டவும்
வம்பிட் டெதிர்த்தவர் கும்பிட்டு வீழ்கவும்
— சித்து வித்தை...... (iii)

தேறு பரிக்கு நகுல னழகிய
சிற்றம் பலக்கவிச் சிங்க மகிழ்தமிழ்
கூறும் புலவர்க் குதாரன் சின்னன்
குபேந்திரன் பண்ணைக் கலளைக்கு கரக்காலால்
ஆறு மரக்கால் பருவரிசிச் சோறு
அஞ்ஞூறு முட்டை ரெண்டாட் டுக்கறி
நூறு பணியாரம் ஒன்பது தோசையும்
நூத்தேழு மாங்கனி யுண்டேப் பமிடவும்
— சித்து வித்தை .... (iv)

## விருத்தம்

18. அயன்பதம் பணிந்துபோற்று மழகிய சிற்றம் பலேந்திரன்
தயவுடன் மகிழ்சின் னண்ணன் தயாநிதி வளர்நன் னாட்டில்
உயர்பற வைக்குக் கண்ணி யூன்றியே வேட்டை யாடச்
சியஞ்சிய மெனதே சிங்கா தெயவத்தை வணங்கு வாயே.

## வேட்டைக்கு உதவத் தெய்வம் பரவல்
## நொண்டித் தரு

(கண்ணிகள்)

19. கார்மேனியனே — நிறை
சின்ன னேபரி பூரணனே
சீர்மே வும்புயனே — நிதஞ்
செப்புதமிழ்நிறை கற்பகமே (i)

---

(iii) அய்ங்காதம் — நெடுந்தொலைதூரம்; ஐந்து காதம்
தொலை — தூரம்
வம்பிட்டு — வம்புசெய்து

(iv) நகுலன் — குதிரையேற்றத்தில் வல்லவன்
உதாரன் — வரையாது கொடுப்போன்
குபேந்திரன் — செல்வன்
பண்ணை — வயல்
அஞ்ஞூறு — ஐநூறு
ரெணடு — இரண்டு
நூத்தேழு — நூற்றியேழு.

(18) அயன் — நான்முகன்
தயாநிதி — தயைநிறைந்தவன்
சியஞ்சியமெனவே — மனவெழுச்சிக் குறிப்பு

திருக்கோள நாதய்யனே — முத்துச்
செல்விபொன்னா வுடைவல்லி (நாயகனே)
தருவெலாம் உலாவிவளர் — சிங்கை
தன்னில் வளர்கின்ற பொன்னழகே (ii)

மிதுலா புரிதனிலே — வளர்
வேதபொன் னாவுடை நாதய்யனே
பதுமா சனந்துலங்குஞ் — சுப
பைங்கிளி யாகிய சங்கரியே (iii)

சிவயோக நாயகியே — தவச்
சித்திர மயிலேறு முத்தையனே
தவமேவு பூரணனே — நல்ல
தருசேர் கரடிப் பெருமாளே (iv)

கரையில் கருப்பண்ணரே—திருக்
காரி யுடைய சவுரியனே
வரைசேர் துளபமல—ரணி
வாய்ப்பும் வனமரைக் கருப்பண்ணரே (v)

வீட்டுக்கு வாய்த்தகுல—தெய்வ
மின்னொளி தோன்றிய பொன்னம்மே
தேட்டுக்கு வாய்த்ததொரு—சிவ
சின்மயச் சோடிச்சி யம்மணியே (vi)

வேட்டைக் குகந்துவரு—கின்ற
விற்பன னேவெகு அற்புதனே
தாட்டீக மாகவேதான்—வரந்
தந்து பலனுந் தருவீரே. (vii)

## விருத்தம்

20. அழந்தரும் பொன்னழ கியசிற்றம் பலேந்திர
அதிபதிதன் மனமகி ழதிகெம்'பீரன்

---

(19) கார்மேனியன் — கருமை நிறமுடையவன்
சீர்மேவும் — சிறப்புமிக்க
புயன் — கையையுடையவன்
கற்பகமே — கற்பகத் தருவைப் போன்றவனே
தரு — மரம்
பதுமாசனம் — தாமரைமலர் போன்ற இருக்கை
நவச்சித்திரம் — ஒன்பதுவகை ஓவியம்; அழகான ஓவியம்
சவுரியன் — தூயவன்
வகைசேர் — இன்பம் சேருகின்ற
வன்மரை — அழகிய வண்ணமுள்ள தாமரை
தேட்டுக்கு வாய்த்த — நாடுவதற்குத் தகுந்த.

சுழன்றருளுஞ் சௌரிய சின்னன் யோகன்
செழித்தி லங்குங் கோனாட்டில் செழிமாபோல்
வளமுலவுங் கன்னிமலைச் சார்பி லோங்கி
வளருகின்ற பச்சிவர்க்கம் மகிழ்ந்து கூடிடும்
களநெல் மணிமின்னும் மிதுலைக் கண்மாய்க்
கலிங்கு தனில்வந் திறங்கக் கண்டேன்.

## பறவைகளைக் கண்ட தரு

(பல்லவி)

21. கண்டே னடைய்யே பறவையைக்
கண்டே னடைய்யே.

(சரணம்)

அகலியைப் பெண்ணுருக் கண்டவன் சின்னன்
காண்டீபன் நாட்டினில் கொண்டல னூரைப்
(புகழ்ந்தே செய்யெலாங்) குருகயல் வாரிக்
கொந்தளிப் பாகவே வந்துஇரை யுண்ணக்
—கண்டே னடைய்யே. (i)

வயித்திய லிங்கந் தனைப்பெற் றிடுந்துங்கன்
(விளங்குஞ்) சின்னன் மகிபதி நாட்டினில்
துலங்கும் மிதுலை வல்லப் பண்ணைத்
தன்னிலும் பரவைநடு வாய்க்கால் தன்னிலும்
—கண்டே னடைய்யே (ii)

இன்ப மதாயிர வாய்க்கால் தன்னிலும்
(சென்னெல் விளைந்திடுஞ் செய்யிலுஞ்) செங்கயலைத்
தின்றே கும்பிக் கிணற்றடிச் செய்பரணில்
(தங்கியே பறந்து) வோதையாய் மேய்வதைக்
—கண்டே னடைய்யே (iii)

---

(20) அழந்தரும்—ஒளிவிடும்
சௌரியம்—வீரம்
செழிமா—செழித்து வளர்ந்துள்ள மாமரம்
வளமுலவும்—வளமிக்க
கலிங்கு—மதகு; தண்ணீர் பாயுமிடம்

(21) அகலியை—இராமன் காலடிபட்டுக் கல்உருவம் நீங்கியவள்
காண்டீபன் – அருச்சுனன்
குருகயல்—பறவைகள் பக்கத்தில் பறந்து
வாரிக் கொந்தளிப்பு—நிறைவாய் வந்து ஒலியிடல்; கடல் கொந்தளித்தது போல்
வல்லப் பணணை—வயலின் பெயர்
இரவாய்க்கால்—வயலின் பெயர்

வேலும் மயிலுந் துணையெனவே நித்தம்
வேண்டிப் பணிந்தேத் (திடும்நற்) பாக்கிய
சீலன் திரு (மார்பன்) புகழ்பெறு தென்னவன்
சின்னன் மன்னவ (னாண்டிடும்) நாட்டினில்
—கண்டே னடைய்யே (iv)

நீலச் சிறகு நடுச்செய் வரப்பினும்
நின்ற பின்னர் செய்வரம் பெங்கிலும்
ஆலன் கண்மாய்க் குளவாய்க் காலின்
நீரினும் அண்டிலுட னிரையுண்டு வந்ததைக்
—கண்டே னடைய்யே (v)

## விருத்தம்

22. பஞ்சலெட் சணஞ்சேர் மல்லைப்
பதிசிற்றம் பலமெய்ஞ் ஞான
ரஞ்சிதன் பணிந்து போற்றி
(ரமணிய நாதரு)க் கீய்ந்து
மஞ்சிநல் விளைவுற் றோங்கி
மிகுமற வன்கண் மாயில்
மஞ்சுநீர் கயலைக் கண்டு
வருகுது பச்சி யய்யே.

## பறவைகள் வரும் தரு

(பல்லவி)

23. வருகுதய்யே பறவைகள் வருகுதய்யே

(அனுபல்லவி)

வருகுதய்யே திருலெட்சுமி கார்க்கின்ற மன்னவன்
சின்னன் நன்னைய நாட்டினில்
குருகுநாரை மற்றுனி வாய்காலில் கூடி
வந்தே விளையாடி யிரையுண்டு—வருகுதய்யே

---

பரவைநடு வாய்க்கால், கிணற்றடிச் செய், நீலச் சிறகு,
நடுச்செய்—வயல்களின் பெயர்
ஓதையாய்—ஒலிமிகுதியாய்
அண்டில்—அன்றில் பறவை
ஆலன் கண்மாய்—ஏரியின் பெயர்
இரை—உணவு

(22) மஞ்சி—களஞ்சியம்
மஞ்சு—மேகம்
மறவன் கண்மாய்—ஏரியின் பெயர்

(சரணம்)

கத்த வழகிய சிற்றம்ப லேந்திர
கன்னன் மாமகிழ் சின்னன் நாட்டினில்
மெத்த மிதுலை வயலின் உம்பளம்
மேவும் பெரியமடை யடிவாய்க் காலில்
வத்தனை செய்வோர் வார்செய் பிறகரை
வட்டத் தளையினில் முட்டைக் குருகுகள்
நித்திய மத்தி யடிச்செய் (தன்னில்)
நிலவிலே ரெம்பவும் மேயுந் தெளிகண்டு
—வருகுதய்யே (i)

வள்ள லழகு குழந்தை வயித்திய
மன்னனை யீன்றிடுஞ் சின்னன் நாட்டினில்
சள்ள வெள்ளையன் செய்மூலை பயிலுங்
சின்னப் பறவை களுஞ்செய் வரப்பில்
மெள்ள நடந்து களத்துவாய்ச் செய்யிலும்
மிளறு வருகின்ற சின்னக் கிணற்றிலும்
துள்ளித் திரியுங் கயலை விரட்டிச்
சுருக்காகத் தின்று முறுக்காக வேமிக
—வருகுதய்யே (ii)

கலிப்பா

24. அச்சுதன் நேரு மழகியசிற் றம்பலமால்
மெச்சுஞ் சின்னனேந்திரன் விளங்குகின்ற நாட்டில்
(வெச்சுஞ்) சினேகம் வெகுபாங்கா கவேகூடிக்
கெச்சிதஞ் செய்தேதான் கெலித்துமிகச் சேருதய்யே

---

(23) கார்க்கின்ற—காக்கின்ற
உம்பளம்—மானிய நிலம்
மடையடி வாய்க்கால், மத்தியடிச் செய், கள்ள வெள்ளையன்
செய் களத்துவாய்ச் செய்—வயல்களின் பெயகள்
வத்தனை—வர்த்தனை
வார்செய்—நீளமாகப் பிரிக்கப்பெற்றவயல்
நிலவிலே—நிலவின் ஒளியில்,
ரொம்பவும்—(நிரம்பவும்) மிகுதியாக
தெளிகேட்டு -ஒலிகேட்டு
மிளறு—மிலாறுச் செடிகள்

(24) அச்சுதன்—இறைவன்
வெச்சும்—வைக்கும்
கெச்சிதம்—உடல்நலம்
கெலித்து—மிகப் பெருகி

## பறவைகள் சேரும் தரு

(பல்லவி)

25. சேருதய்யே பறவைகள் சேருதய்யே

(அநுபல்லவி)

சேரு தய்யே அதிசுப பாக்கியஞ்
சேருஞ் சின்னன் வசீகரநன் னாட்டினில்
பாருல கம்புகழ் செட்டியூ ரணியில்
பச்சி யொருலச்சம் மிச்சமுடன் வந்து
—சேருதய்யே

(சரணம்)

செம்பொன் நிறைந்த குபேர னழகிய
சிற்றம் பலக்கவிச் சிங்க மனமகிழ்
அன்பன் வயித்திய லிங்க துணைபெறும்
அற்புதன் சின்னன் மெய்ப்புயர் நாட்டினில்
கம்புளி நாரைகள் கும்பு கும்பாகக்
(கொம்மள மிட்டுக் கூடிக் குலாவி)
இன்ப மதாக யிறங்கிக் கயலுண்டு
இத்தல மொய்த்திடு முத்தன் வயலிலும்
—சேருதய்யே (i)

பாகன் சுப்பிற மணியமோ கனழகிய
மகிபன் குழந்தை வயித்தி தனைப்பெற்ற
யோகன் அதிக விவேகன் சின்னன்
உசிதன் வளர்ந்து வுகந்திடும் நாட்டினில்

---

(25) செட்டியூரணி—ஓர் ஊருணியின் பெயர்
மெய்ப்புயர்-மெய்யாக உயர்ந்த; வலியகரத்தையுடையோர்
கம்புளி நாரை—ஒரு பறவையினம்
குப்புகுப்பாக—கூட்டங்கூட்டமாக
மொய்த்திடும்—நிறைந்திடும்
முத்தன் வயல்—ஒரு வயலின் பெயர்
பாகன்—பக்குவ நிலையுடையவன்
மோகன்—பற்றுடையவன்
வயித்தி—வயித்திய லிங்கத்தின் சுருக்கம்
விவேகன் – நுண்ணறிவுடையோன்
உசிதன் — தகுதியுடையவன்
உகந்திடும்—விரும்பிடும்
சலாகன்—கவர்ச்சியுள்ளோன்
சேகரம்—கூடிச் சேர்தல்
பாகன் கணமாய் வயல்—ஒரு வயல்
உன்னிதம்—கவனம்

தோகை மயில்மத மோக சலா (கன்)
சுகங்கொண்டு சூரியன் முகங்கண் டுலாவிச்
சேகர மாகவே பாகன்கண் மாய்வயல்
தென்னந் தோப்பில் வெகுவுன்னி தமாய்வந்து
—சேருதய்யே (ii)

## கலிப்பா

26. அய்ந்துதரு போலுதவு மழகியசிற்ற றம்பலமால்
சிந்தைமிக மகிழுஞ் சின்னன்மால் நன்னாட்டினில்
அந்தமுள்ள பச்சியெல்லாம் ஆவுடையார் செங்கைதனில்
விந்தையுடன் தானிறங்கி மேயிதுநீர் கெம்பாரே.

## பறவை மேய்கிற தரு

(பல்லவி)

27. மேயிது கெம்பாரே பறவைகள்
மேயிது கெம்பாரே.

(சரணம்)

மேயிது பச்சிகளே யிதமாகவு
மிகுந்தநீ ரினில்புகுந் துலாவியே
தூயதாய்ப் பகளைநேய முடன்கண்டு
சுத்திப்பத்திப் பத்திக்கெதுக் கெதுக்கென்னவே
—மேயிது கெம்பாரே...... (i)

முட்டைச்சிற குசுருநாரை சென்னாரை
மூக்குத்திக் குருகுபெரு நாரையுள்ளாங்
சிட்டக்கிட் டயிருந்தார்ப் பரிப்புடன்
கெக்கரித்தி ரைவிக்கிவிக் கிக்கொண்டு
—மேயிது கெம்பாரே...... (ii)

## விருத்தம்

28. அண்டிநேச ருக்குதவு செம்பொன்
அழகிய சிற்றம் பலேந்திர
கொண்டல் நல்மனது (கொண்ட)
குபேரன் சின்னன்மால் நாட்டினில்

---

(26) அய்ந்துதரு — கேட்டதை தரவல்ல ஐந்து தருக்கள்
ஆவுடையார் செங்கை — ஆவுடையார் கோயில் நிலம்.

(27) இதமாக — வாய்ப்பாக, இன்பமாக.
பகளை — இரையை
மூக்குத்தி, சென்னாரை, பெருநாரை, உள்ளான் — பறவை இனங்கள்.
கெக்கரித்து — வேதனை ஒலியெழுப்பி,

வண்டிலங் கியகா வோடை
மலர்விரி கமுகு சோலை
கண்டதோர் பறவைக் கெல்லாங்
கண்ணியைக் கொண்டு வாடைய்யே.

## கண்ணியைக் கொண்டு வரும் தரு

(பல்லவி)

29. கண்ணியைக் கொண்டு வாடா அடைய்யே
கண்ணியைக் கொண்டு வாடா.

(சணரம்)

கண்ணியைக் கொண்டுவா புண்ணிய மேவிய
காமன் சின்னன்வேள் நேமன்நன் னாட்டினில்
தண்ணீ ரொடுபுற மேட்டில் கவுதாரி
தாரள மாகவே கோரையில் மேயிது
—கண்ணியைக்...... (i)

## விருத்தம்

30. கல்லிடும் பச்சி பல்லைக் காட்டுதடா
தமிழருமை யறியா மல்சல சலென்று
கல்லி பண்ணுவோ ருடையபேச் சைக்கேளான்
காண்டீபன் சின்னன் வேள்கதிக்கும் நாட்டில்
நல்ல வயலேரி யோடுவாவி கூவம்
நதிதடாகந் தோறும் பறவை ரெம்ப
யெல்லையது கண்டமட்டும் மேய்ச்சல் தின்று
இரைக்குது சிங்கா கண்ணியினி நடைய்யே;

---

(28) வண்டிலங்கிய — வண்டுகள் பறந்து திரியும்
காவோடை — சோலையும் நீரோடையும்.

(29) நேமன் — விதிமுறை காப்போன்.
கவுதாரி — ஒரு பறவை இனம்
தாரளமாக — மிகுதியாக
கோரையில் — கோரைப்புல் தரையில்

(30) கல்லிடும் — ஒலிக்கும்
கல்லிபண்ணுவோர் — தவறுரைப்போர்
கதிக்கும் — சிறப்பாக விளங்கும்
வாவி — குளம்
கூவம் — கிணறு, கேணி
தடாகம் — ஏரி, குளம்
இரைக்குது — இரைச்சலிடுகிறது.

## கண்ணியூன்றுகிற தரு

(கண்ணிகள்)

31. கன்னி மலையானை வாழ்த்திக்கோ — சிங்கா
கண்ணியை யெடுத்துநீ தீத்திக்கோ
பன்னிரு கையனைப் போற்றிக்கோ — சிவ
பார்வதியைப் பணிந்தேத் திக்கோ. (i)

மிதுலைக் கண்மாய்க் கண்ணியிலே — பச்சி
மேய்ந்து வருதந்த வயலிலே
கதிருடன் பருவ ரப்படா அதில்தான் — கருங்
கண் ணி யைநீ நிரப்படா. (ii)

பண்ணை நிலமெலாங் கருதடா — அதைப்
பார்த்து வெகுபச்சி வருதடா
வண்ணக் குருவிகள் வருகுது — நடு
வாய்க்காலிற் தண்ணீர் பெருகுது. (iii)

ஆயிர வாய்க்கால் தன்னிலுங் — கிணத்
தடிச்செய் நடுச்செய் முன்னிலும்
போயித வாயதி லிருக்குது — மனப்
பூரணமாய்ச் செல்லஞ் — செருக்குது. (iv)

நாலு பிறான்செய் மூலையில் — கண்ணி
நாட்டு வருதுன் னாலையம்
ஆலிங்கன மாய் நல்ல வெளியடா — குள
வாய்ச் செய் சமைந்தொ ழியடா. (v)

அன்பது கண்ணியை யூன்றடா — கரை
யதிலேக் கருப்பரை வேண்டடா
உம்பளம் பெரிய மடையிலே — நீர்
ஓடுது வாய்க்காலின் நடையிலே (vi)

---

(31) தீத்திக்கோ — சரிசெய்துகொள்.
மதுலைக் கண்மாய் — ஓரேரி.
பருவரப்பு — பெரிய வரப்பு.
நிரப்பு — உன்றிப் பரப்புவாய்.
கருது — கதிர்.
வெகுபச்சி — மிகுதியான பறவை.
கிணற்றடிச்செய் — ஒரு வயல்.
நடுச்செய் — நடுவிலுள்ள வயல்.
இதமாய் — வயமாக, வாய்ப்பாக.
பிறான்செய் — (பிரான் செய்) — ஒருவயல்.
ஆலையம் — இருப்பிடம் (சரணாலயம்)
ஆலிங்கனமாய் — சுற்றி வளைப்பதற்குத் தகுந்த இடமாய்.
சமைத்து — ஆயத்தம் செய்து, முனைந்து.

வங்குவார்ச் செய்நல் நெல்லடா — பச்சி
வாரது பார்த்துநீ சொல்லடா
அங்கு பிறகரைத் தளையடா — திரு
அத்தியடிச் செய்யை வளையடா. (vii)

கள்ள வெள்ளையன்செய் கருஞ்செய்யாம் — நம்ம
களத்துவாய்ச் செய்யே பெருஞ்செய்யாம்
வெள்ளைக் கொக்கேயதில் கூட்டமாய — ஓடும்
வெண்கயலைத் தின்று நடமாடுதே. (viii)

சின்னக் கிணத்தான் கரையிலே — நல்ல
செட்டி யூரணித் துறையிலே
வண்ணப்பிறா நல்ல கறியடா — வரும்
வல்லமையாய் வில்லால் தெறியடா. (ix)

வாழைத் தோட்டத்தில் நில்லடா — அங்கே
வாரஆளை நிக்கச் சொல்லடா
கூழைப்பச்சிவலையை யெறியடா — வெள்ளைக்
குருகெல்லாம் நல்ல கறியடா. (x)

தேங்குபிலாத் தென்னந் தோப்படா — வர்ணச்
செங்கருப்பந் தோட்டந் துரப்படா
மாங்குயி லைமயில் தேடுது — ரெண்டு
வற்ண மயில்விளை யாடுது. (xi)

ஆவுடை யார்குளக் காவிலே — ரெண்டு
அன்னஞ் செந்தாமரைப் பூவிலே
சேவலும் பேடுடன் கூடுது — ரெண்டுஞ்
சேகர மாகவே நாடுது. (xii)

---

ஒழியடா — ஒழிந்திருப்பாய், மறைந்துகொள்
அம்பது — ஐம்பது.
கருப்பர் — கருப்பண்ணசாமி.
உம்பளம் — நிவந்தம்.
வங்குவார்ச் செய் — ஒருவயல்.
பிறகரை — வேறு கரை;
தளை — வயல்
அத்தியடிச் செய் — ஒரு வயலின் பெயர்.
வளையடா — வளைத்துக்கொள்.
கள்ள வெள்ளையன் செய், கருஞ்செய், களத்துவாய்ச்செய்— வயலின் பெயர்கள்.
பிறா — புறா· தெறியடா — அம்பை எறியடா.
வார ஆளை — வருகிற ஆளை.
நிக்க — நிற்க. எறியடா — வீசுடா. தேங்கு — தெங்கு.
துரப்பு — தோப்பு
சேகரம் —விருப்பம். முத்தன்வயல் — ஒரு வயலின் பெயர்.

பத்துச் சிறகையுஞ் சேர்த்துதான் — சிறு
பாலை வயலுக்கு ளாய்ந்துதான்
முத்தன் வயல்பக்க வயலிலே — பச்சி
முழங்கி மேயுது அயலிலே. (xiii)

மல்லைச் சிற்றம்பலக் கவிச்சிங்கம் — சேது
மன்னன் மகிழ்ந்திடுஞ் துரைச்சிங்கம்
தில்லைச் சிதம்பரர்க் கீய்ந்திடும் — ராச
சிங்கை நகரினில் சேர்ந்திடும். (xiv)

மறவணி வயல்சதி ருக்குள் —முத்து
வருணச் சம்பாநெல்லுக் கதிருக்குள்
சிறகிக் கண்ணியை நாட்டடா — வந்து
சிக்குதற்கே சன்னை காட்டடா. (xv)

கொக்குமுக் கூடெங்கும் பதித்துக்கோ — முரு
கோனை மனதினில் துதித்துக்கோ
தெக்கு வடக்குயர் திசையிலே — வலை
சீக்கிரம் வீசிக்கோ விசையிலே. (xvi)

தென்மி துலைப்பதி சேகர — மேல்கை
சேரும் வளைவதில் மோகரம்
பொன்மலை யாண்டியை வேண்டடா — மனப்
பூரணமாய்க் கண்ணியை யூன்றடா. (xvii)

கண்ணியெல்லா மூன்றி வாழ்த்திக்கோ — வேட்டைக்
காரனை நினைத்துப் போற்றிக்கோ
நன்னிய நிமித்தஞ் சொல்லுது — வெகு
ராசி நமக்கினி நல்லது. (xviii)

### கலிப்பா

32. ஆகமபுரா ணகலைக்கியான் நெறிசேரும் வச்சிரத்
தேகனுய ரழகிய சிற்றம்பலேந் திரன்மகிழ்

---

மல்லை — ஓரூர்.
சேதுமன்னன் — சேதுபதிமன்னன் (துரைசிங்கம்)
தில்லை சிதம்பரர் — நடராச மூர்த்தி.
மறவணி வயல் — வயலின் பெயர்.
சிறகிக் கண்ணி — ஒரு வகைக் கண்ணி.
சன்னை — தந்திரமாக ஒலியெழுப்பல்.
மோகரம் — பெருமைமிக்க.
நன்னிய நிமித்தம் — நல்ல சகுனம்
ராசி — வாய்ப்பான நேரம்.

மாகனஞ் சின்னன் வசிகரவள நன்னாட்டில்
சேகரமாய்ப் பச்சிவந்து சிக்கிமிக்க கொண்டுதையே.

## பறவை சிக்கின தரு

(பல்லவி)

33. சிக்கிக் கொண்டதையே பறவைகள்
சிக்கிக் கொண்டதையே.

(சரணம்)

சிக்கிக் கொண்டது பச்சியெலாம் — வந்து
சின்னன் பூபசி யபதி நாட்டிளில்
உக்கிர மதாக நானூன்றிய கண்ணியில்
ஒரு கோடி வெள்ளைத் தாறாவும் நாரையும்
— சிக்கிக் கொண்ட...... (i)

சக்கரைப் புள்ளொரு மிக்கவோ — ராயிரஞ்
சகோரமும் நாரையுஞ் (சிக்கின) பதினாயிரம்
அக்கரை யாக மிசைந்திடுங் கண்ணியில்
ஆயிரம் வெள்ளை நூறாயிரம் பச்சிகள்
— சிக்கிக் கொண்ட...... (ii)

## கலிப்பா

34. அங்காமி துலையழகி யசிற்றம் பலவேள்
துங்கர் பிரான்மகிழ் தூயநறுஞ் சின்னன்மால்
மங்காத நாயகனார் மகிழ்ந்திசைத்த கண்ணிதன்னில்
சிங்காயெம் பிட்டபச்சி சிலவுமிகச் செய்வாயே.

## பறவை எண்ணும் தரு

(பல்லவி)

35. கண்ணியில் சிக்கின பச்சி யெல்லாம்
எண்ணிப் பாருடா.

---

(32) ஆகமம் — புராணம், கலைக்கியானம் முதலியன.
வச்சிரத்தேகன் — வலிமையான உடலையுடையவன்.
மாகனம் — பெருமையுடைய
சேகரமாய் — கூட்டமாய்.

(33) தாறா — தாரா
சர்க்கைப்புள் — ஒரு பறவை இனம்
சகோரம் — ஒரு வகைப் பறவை
அக்கரை — கவனமாக
இசைந்திடும் — ஊன்றிடும்.

(34) அங்கா — வாய் மலர்ந்து வரவேற்கும்.
எம்பிட்ட — எழும்பிப் பறந்துவிட்ட

(சரணம்)

நெடுங்கா வடியாகவே தோள்சுமை தன்னியே - சேரு
தண்ணியிலெம் பிட்டவண்ணப் பறவையை யெடடா
(சடுதியி லெல்லா மொன்றாய் எடுத்து) - நம்ம
சாமிக்கு வேண்டி வலையினில் சேர்த்து வைத்திடடா
— கண்ணியில்... . (i)

மேவுந்திருக் கோளையா வுடையார் பதம்போற்று - ரெண்டு
வெண்கிள்ளை யைமணிமண் டபத்தில் வைத்துவாழ்த்து
பூவுடையார் மிதுலையாவு டைநாதரைக் கும்பிடு - அன்ன
பூரணியாஞ் சிவ யோக நாயகியை நம்பிடடா
— கண்ணியில்...... (ii)

பஞ்சவர்ணக் கிள்ளையஞ்சு யெண்ணிக் கையிலெடடா -அவர்
பாதந்தனில் வைத்தவரே வுண்டென்று நாடடா
கொஞ்சும் மயில்ரெண்டு ரஞ்சிதமா யெடுத்துவா - முத்துக்
குமரக் கடவுள் துணை யுண்டென்று கொடுத்துவா
-கண்ணியில்...... (iii)

சின்மதுரை யெனும்வண் மதுரை நோக்கி - நீயும்
சென்றுவெகு சாரியாக வந்திரை பெறுகாரி
பன்மணி மாடப்பிறா நல்லநன் மணியிலே - ரெண்டு
பத்துத்துகை யுடன்வைத்துப் பணிந்திடு மெய்யே
- கண்ணியில்...... (iv)

ஆண்டவன்ரா யரகுநாத சாமியைக் காணங்கே - ரெண்டு
அன்னமுமாய்ப் பச்சிகொண்டு பார்கலி நீங்க
காண்டீபன் மருதுபாண் டியமால் சுத்தவீரன் - தனைக்
கண்டுவணங் கிராசாளி கொடுரதி மாரனே
- கண்ணியிலே...... (v)

அழகிய சிற்றம்பலக் கவிராயர் சமுகம் - தனில்
அன்பது வர்ணபசுங் கிள்ளைசெய கன்சமூகம்
விளங்கும்மா பிள்ளைக்காயச் சின்னனேந் திரனுக்கு - மிக
வச்சிரபசுங் கிள்ளைதான் கொடுடாதே வேந்திரனே.
கண்ணியில்...... (vi)

---

(35) காவடி — சுமைகட்டித் தூக்கும் காவுதடி.
எம்பிட்ட — எழும்பிவிட்ட
கிள்ளை — கிளி. காரி — கரிக்குருவி.
துகை — தொகை.
ராயரகுநாதசாமி — ரகுநாத சேதுபதி.
பார்கலி — நாட்டின் துன்பம்
சமூகம் — முன்பாக
தேவேந்திரனே — தேவேந்திரன் போன்ற சிங்கனே.

## கலிப்பா

36. சத்திரபதி துரைமுத்து வடுகையர் மகிழச்
சுத்தசங்கு வெண்கிள்ளை கொடுத்திடுயித் தலம்புகழச்
சித்தசன சின்னன் மெய்த்திடவே குறச்சிங்கா
பத்துச்சே ரும்பவளக் கால்நாரை கொடுத்திடடா.

## கோடை வேண்டும் தரு

(கண்ணிகள்)

37. சந்தனப் புல்லையேறி தொன்று தான்மிகக் கேளு - வெகு
சம்பிர மமமாகவே தந்திடுவான் வைத்து வாழு
சிந்தை மகிழ்ந்து சிறகெல்லா மொன்றாய்ச் சேர்த்து - மிகச்
சுமைசேர்த் துநீதான் துகையித்தனை யென்றெண்ணிப்
பாரு. (i)

நற்றுணையான் வயித்திய லிங்கப் பூபாலன் - கரு
நாரை யிலன்பது தான்கொடு டாகுண சீலன்
கொத்துச் சரப்பணி தந்திடு வானடாஅய்யே - நம்ம
கோமளச் சிங்கிக் கியாகு மடாவது மெய்யே. (ii)

மைந்தன் சுப்பனுக் கப்பன் குழந்தைக்கும் பேறாய் - நல்ல
வயித்திய லிங்க மகிபனுக் குங்கொடு தாறா
அந்தமுடன் வர்ணப் பாருதுப்பட்டியும் தருவான் - வெகு
அற்புத மாகவே வாங்கிநீ யென்முன்னே வருவாய் (iii)

நம்பி னவன்கா ரியம்பல முமகிழ்ந் திடவே - பெரு
நாரைகொடு வஸ்திர மும்தரு வான்புகழ்ந் திடவே
அன்பன் சொத்திக் கருப்ப துரந்தரனுக் குறிகாடை - பாம்
பாட்டி மகிபனுக் குச்செய் திடுமயில் பேடை (iv)

மாயன் பதம்பணி நேயனெ (மூவ) க்கோன் வருவான் - நாலு
வக்காவுங் கொக்குங் கொடுத்தால் கிடாயொன்று
தருவான்
தூயன் மிதுலையூர் மேவிய நகரத் தார்க்கும் - நூறு
சொற்கணக் குருகு கொடுத்திட்டா அவர்க்கேற்கும் (v)

---

(36) சத்திரபதி — (மராட்டிய) பேரரசன்.
துரைமுத்து வடுகையர் — தஞ்சையரசரின் பெயர்.
சித்தசனன் — மன்மதன்
பவளக்கால் நாரை - சிவந்த கால்களையுடைய நாரை.

(37) சந்தனப்புல்லையேறு — சந்தனப் பில்லை நிறக் காளை.
சப்பிரமமாக — சிங்காரமாக
கோமளம் — அழகு; இளமை.
வர்ணப் பாருதுப்பட்டி — வண்ணவரிகளுடைய போர்வை.
வக்கா — ஒரு பறவை.
கிடா — ஆட்டுக்கடா.

வல்லமை பெற்றிடுங் கொல்லக் குழந்தை ஆசாரி ரெண்டு
வாங்கரு வாளைத் தருவான் கொடுடா கவுதாரி
நல்லவன் தச்சன் வைத்தி ஆசாரிக்குப் பொறுப்பா - யொரு
நாரை கொடுத்தவன் பேரைப் புகழ்ந்திடு குறிப்பாய். (vi)

தட்டார் முத்து வீரப்பனுக் குக்கொடு குருகு - நல்ல
தங்கத் தினாலே தருவானடா நல்லமுருகு
அஷ்டா வதானி நிறைபொருந் துங்குற மாதராம் – மிச்ச
மாகிய பச்சியை யெண்ணித் தொகையைப் பாருநீ. (vii)

சிராய்க் காவடி யாகவே பச்சியெல்லாம் தொகைசேரு - நம்ம
காட்டுக் குறத்தி மணாளனை நினைத்து நேரு
தேவியின் பூசைக்கிச் சிங்கியைத் தேடி டைய்யே - அவளைத்
தேடி வளைத்துநீ சீக்கிரம் வந்திடு மெய்யே. (viii)

மிஞ்சின பச்சி குடிசைக்கு நீயெடு மெச்சியே - நம்மை
வேட்டை யலம்பிட்ட காக்கை யுடனுனக்கும் பச்சியே
அறுக்க மிஞ்சின தெல்லாம் ஒருகூட்டில் வளர்க்க - இரை
யானது வைத்து நம்பாசை யிலேசொல்லிப் பழக்க (ix)

காக்கைக்கறியை மிளகுப் பொடியிட்டுத் திரக்கு - கடைக்
கல்பத்துடனே கலந்திட வேணுமே யாக்கு
கூகைக் கறிபழுஞ் சுண்டலுக் காகு மடைய்யே - வெள்ளைக்
கொக்குக் கறியை மிளகு நீராகவுஞ் செய்யே. (x)

அஞ்சு பணத்துக்குச் சாராயமும் கள்ளும் வாங்கு - அந்த
அண்டிலத் துண்டாய் வித்து வருவதே பாங்கு
கொஞ்சு பரிந்துரை வேட்டைக் காரன்பதம் பணிந்து - வேண்டிக்
கொண்டாடி வைத்துப் படைத்திடு நீறள்ளி யணிந்து.(xi)

## விருத்தம்

38. தங்கமோ ரழகியசிற் றம்பலக்க விராசபோச
துங்க மாலமலச் சிங்கனுங்கு ளுவனோடே

---

வாங்கருவாள் — வளைந்த சிற்றரிவாள்.
முருகு — காதணி
மிச்சம் — மீதி
குறத்தி மணாவன் — முருகன்
நேரு — நேர்ச்சைசெய்
அம்பிட்ட — அகப்பட்ட
திரக்கு — வதக்கு; வறுத்திடு
கல்பம் — மசாலைப் பொருள்; மருந்துவகை.
அண்டில் — அன்றில் பறவை.
வேட்டைக்காரன் — முருகன்

அங்கணச் சிறப்புடன் வேட்டை யாடிச்
சிங்கி தன்னை மகிழ்ந்தவன் தேடினானே.

## சிங்கியைத் தேடும்தரு

(பல்லவி)

39. எங்கே சென்றாளோ யென்சிங்கிதான்
எங்கே சென்றாளோ.

(சரணம்)

எங்கேயோ சென்றனள் கொங்கையைக் கண்டனர்
அங்குமே ரெண்டிது மூதண்டங் கொண்டு - எங்கே... (i)

சித்த மகிழ்வாள் நித்தியம் வருவாள்
முத்தந் தருவாள் பந்தம் மறவாள் - எங்கே... (ii)

பொன்னி னுடையாள் சின்ன யிடையாள்
அன்ன நடையாள் வண்ணத் தொடையாள் - எங்கே... (iii)

வஞ்சிக் கொடியாள் அஞ்சிப் படியாள்
மிஞ்சித் துடியாளென் நெஞ்சில் குடியாள் - எங்கே... (iv)

## விருத்தம்

40. பாடிய கவிவல் லோர்க்குப் பைம்பொன் னுதவிக் கீர்த்தி
தேடிய சின்ன னேந்திரன் செழித்தி லங்கிய நாட்டினில்
வாடிய பயிர்க்கி ரங்கி மழைமுகில் சொரிதல் போலத்
தேடிய சிங்கன் முன்னே சிங்கியை வரக்கண் டானே.

## சிங்கன் சிங்கி உரையாடல் தரு

(கண்ணிகள்)

41. இத்தனை நாளெங் கிருந்தாய் சிங்கி - நீயும்
எந்தத் தேசஞ் சென்று வந்தாய் சிங்கி
கொற்றவன் சின்னன் பூபன் சிங்கா - நாட்டில்
குறிசொல்லச் சென்று வந்தேன் சிங்கா.

---

(38) அங்கண் — அவ்விடத்தில்

(39) மூதண்டம் — பேரண்டம்
நித்தியம் — தினமும்
பந்தம் — உறவு.

(40) கவிவல்லோர் — கவிபாடும் திறமுடையோர்
முகில் — மேகம்

வந்தே னென்று சொல்லுகிற சிங்கி — செப்பும்
வானக் கோளது சொல்லுஞ் சிங்கி
சிந்தை மிகவே மகிழ்ந்து சிங்கா — குறி
செப்பினான் வரிசை பெற்றேன் சிங்கா. (ii)

வரிசை பெற்றிடுங் குறச்சிங்கி — முத்து
மாலையுங் கொடுத்த தாரு சிங்கி
புருஷ ரத்தின சின்னன் சிங்கா — குறி
புகழ்ந்த துக்குக் கருளியது சிங்கா. (iii)

அருள்பெற் றுலவுங் குறச்சிங்சி — கணை
யாழியும் நெளிவு மேது சிங்கி
துருபன் வயித்திய லிங்கன் சிங்கா — குறி
சொன்ன துக்குத வினது சிங்கா. (iv)

உதவிபெற் றருள்பெறு சிங்கி — செம்பொன்
னோலையுங் கொடுத்த தாரு சிங்கி
சுதன னருள்மிகு சுப்பன் சிங்கா — குறி
சொல்லினதுக் கருனர் சிங்கா. (v)

அருமைப் புகழ்படைத்த சிங்கி — செங்கை
யங்கையில் கடைய மேது சிங்கி
தருமன் குழந்தை முகில் சிங்கா — குறி
சொல்லினதுக் கருளினர் சிங்கா. (vi)

ஈய்ந்தது வரிசை பெற்றசிங்கி — யிடைக்
கலங்கிய சேலை யேது சிங்கி
பூந்துகில் வயித்திய லிங்கஞ் சிங்கா — குறி
புகழ்ந்தி தனைக்கொடுத் தான்சிங்கா. (vii)

கொடுத்து வரிசை பெற்ற சிங்கி — நாமே
கூடி விளையாடு வோம்வா சிங்கி
நடுத்த வழும்முகில் சிங்கா — வயித்திய
நாட்டினில் வளர்ந்திடுவோஞ் சிங்கா. (viii)

நாட்டினில் வளர்ந்திடுவோ சிங்கி — கூடி
நன்மையாக வளர்ந்திடுவோஞ் சிங்கி
தேடிலுயர் சின்னமால் சிங்கா — வளர்ந்
திடமிக வாழி சொல்லுஞ் சிங்கா. (ix)

---

(41) வசனம் — தாமரை.
கோள் — கிரகம்
வரிசை — பரிசில்
கடையம் — காப்பு
நெளிவு — நெளிவுடைய தோள்காப்பு.
பொன்னோலை — காதணி

வாழிதென் மிதுலை நகர்வாழி — கவி
வல்லவர் முன்னூல் வளர்வாழி
ஆழிபுவீ யோருலகும் வாழி — சின்னன்
ஆதவன் வளர்ந்திடவே — வாழி (x)

## வாழி விருத்தம்

42. நிதிவாழி காப்புநெறி தமிழும் வாழி
நிருபர்மிகு வேதர் சதுர்வேதம் வாழி
துதிவாழி செந்தமிழ்ப் பாவாணர் வாழி
துலங்கு பரிசனங்கள் மிகச்சுகமாய் வாழி
பதிவாழி யழகிய சிற்றம்ப லேந்திர
பாக்கியபதி மகிழ்மிதுலைப் பதியும் வாழி
மதிவாழி சின்னன் மார்க்கண்ட யோகன்
மைந்தர் பதினாறும் பெற்றுவாழி தானே.

## முற்றிற்று

குழந்தை வடிவேலன் துணையாக ரட்சிக்க வேணும்.

---

ஆழி — கடல்
நடுத்தவழும் — நீதிவிளங்கும். புவி — உலகம்.

(42) நிருபர் — குற்றமற்றவர்.
சதுர்வேதம் — நான்கு வேதம்.

# விளக்கம்

(எண்கள் பாடல்களைக் குறிக்கும்)

அகலிகை (21)

கௌதம முனிவரின் மனைவி. தவறாக இந்திரன் அகலிகையைக் கூடிவிடுகிறான். இதனை அறிந்த முனிவர் இருவருக்கும் சாபம் கொடுக்கிறார். சாபம் பலித்து அகலிகை கல்லாக மாறுகிறாள். இராமனின் காலடிபடும்போது மீண்டும் பெண்ணாவாள் என்ற சாப விடுதலைக் காலத்தையும் குறிப்பிடுகிறார். இராமன் தாடகையைக் கொன்றபின் விசுவாமித்திரருடன் மிதிலை நகர் செல்கிறான். வழியில் ஒரு கல்லில் கால்பட்டதும் அகலிகைக் கல்லுரு நீத்து புத்துயிர் பெறுகிறாள். இராமன் அகலிகையைப் பெண்ணுரு கண்டவன் என்று குறிப்பிட்டு அவனுடன் சின்னமகிபனை ஒப்பிட்டுக் காட்டுகிறார் குளுவ நாடக ஆசிரியர்.

அட்டாவதானி (36)

ஒரே சமயத்தில் 8 காரியங்களில் கவனம் செலுத்தும் திறமுடையவனை அட்டாவதானி என்று கூறுவர். இலடச் சங்கிலி சேர்ப்பு, ஓரிருவர் கேட்கும் வினாக்களுக்குப் பதில் கூறல், சொக்கட்டான் ஆடல், முதுகில் எறியப் படும் பரல் அல்லது மலர்களை எண்ணல், சதுரங்கம் ஆடல், புதிதாகக் கவிதை எழுதல், கண்ட பத்திரிகை படித்தல், கணிதம் கூறல், போன்ற எட்டு காரியங்களில் ஒரே சமயம் ஈடுபட்டு சரியான பதில் கூறி வெற்றி பெறுவது அட்டாவதானம். பத்து காரியங்கள் செய்வது தசாவதானம். நூறு சாதிப்பவர் சதாவதானி. அழகிய சிற்றம்பலக் கவிராயர் ஓர் அவதானி என்று பாராட்டப்படுகிறார்.

அய்ந்தரு (10)

ஐந்து தருக்கள் அல்லது பஞ்ச தருக்களை அய்ந்தருக்கள் என்று குறிப்பிடுகிறார். அவை அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன. இவை தேவர் உலகில் உள்ளன. கேட்டவற்றைத் தரும் ஆற்றலுடையவை.

அரக்கு (10)

சாராயத்தை அரக்கு (Arrack) என்று கூறுவது உண்டு. இதைக்கள்ளின் விகற்பம் என்றுசூடாமணி நிகண்டுகூறுகிறது.

பட்டைச் சாராயம், தென்னை, பனை, அரிசி, வெல்லம் முதலியவற்றிலிருந்து வடிக்கப்படும் புளிப்பேறிய மதுவகை என்றும் விளக்கம் தரப் பெறுகிறது. ஆங்கிலத்தில் 'spirits distilled from the fermented sap of sundry palms, என்று கூறப்பட்டுள்ளது.

அரிச்சந்திரன் (10)

பாரத நாட்டில் பழங்காலத்திலிருந்தே பரவலாகப் பரவியிருந்த ஒரு பழங்கதையில் வருபவன். வாய்மைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவன். அடுக்கடுக்காகத் துன்பம் துரத்தித் துரத்தி அடித்தபோதும் அஞ்சாது உண்மையே பேசி உயிர் வாழ்ந்த மாமன்னன். திரிசங்குவின் மகன் என கதை கூறும். இவனுடன் சின்னமகிபன் ஒப்பிடப்படுகிறான்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் (2)

அழகிய சிற்றம்பலக் கவிராயர் பாண்டியநாட்டுச் சிவ கங்கையை அடுத்த மிதிலைப் பட்டியிலிருந்த சைவ சமயத்தைச் சார்ந்த கவிஞர். கட்டளைக் கலித்துறை பாடுவதில் வல்லவர். இரகுநாத சேதுபதியின்மீது துளசிங்க மாலை என்னும் நூல் இயற்றியவர். சின்ன மகிபனின் அவையைச் சிறப்பித்தவர். கொடைவள்ளல். இவர் ஒரு கவிஞர் பரம்பரையைச் சேர்ந்தவர்; இவர்களது பூர்வீகம் மல்லையூரைச் சேர்ந்தது.

இவருடைய முப்பாட்டனார் யானைக் கன்றும் வளநாடும் பரிசாகப் பெற்றவர். இவருடைய கொள்ளுப் பேரனார் டாக்டர். உ. வே. சா. வுக்கு ஏட்டுச் சுவடிகள் சேகரிக்க உதவியவர். அழகிய சிற்றம்பலம் என்பது அவர்களுடைய பரம்பரைப் பெயராக உள்ளது.

அழகுசவுந்தரி (5)

நேமத்தில் கோயில் கொண்டிருக்கும் நாயகி. குன்றக்குடி வழி கீழச்சிவல்பட்டிச் சாலையில் நேமம் உள்ளது. இது 'நியமம்' என்ற சொல்லின் திரிபாக உள்ளது. நியமம் என்பதற்குக் கோயில் என்ற பொருள் உண்டு. இலுப்பைக் குடிநாயகியும் சவுந்தரநாயகி என்றே அழைக்கப்படுகிறார். இது காரைக்குடி நகரை அடுத்து அரியக்குடி—மாத்தூர் சாலையில் உள்ளது,

ஆகமம் (33)

சிவ விஷ்ணுக்களால் ரிஷிகளின் பொருட்டு அருளிச் செய்யப் பட்ட நூல்கள்: அவற்றுள் சிவ ஆகமம் 28 வகைப்படும்.

ஆலிலைப்பள்ளி (17)

திருமால் உலகத்தை நீரால் அழிக்கிறார். எங்கும் நீர் நிறைந்து காணப்படும் போது அவர் ஒரு குழந்தையாக ஆலிலையில் பள்ளி கொண்டிருந்தார் என்பது கதை.

ஆவுடையாள் (1)

சிவகங்கை தாலுகா கொல்லங்குடி காளியாத்தாளை ஆவுடையம்மன் என்று கூறுவர். இறைவன் ஆவுடை யப்பர். வழக்கிடுவோர் இக்கோயிலுக்கு வந்து முறையிட்டு அமைதி கேட்டுச் செல்வது வழக்கம். இவ்வாலயம் பெரிய மருதால் கட்டப்பெற்றது. சூரைக்குடியில் கோயில் கொண்டுள்ள அம்மைக்கும் ஆவுடைநாயகி என்று பெயர். சூரைக்குடி பன்ளத்தூருக்குத் தெற்கே சுமார் இரண்டு கல் தொலைவில் குன்றக்குடிச் சாலையில் உள்ளது. ஆவுடையார் கோயில் அம்மனுக்கு ஆவுடையம்மன் என்ற பெயர் உண்டு. அங்கு அம்மனுடைய திருப் பாதந்தான் தோன்றும். உடல் பூமிக்குள் பாய்ந்த நிலையில் காணப்படும். இறைவனோடு அன்னை தனித்திருக்கும்போது ஒரு கோயில் பூசாரி எட்டிப் பார்த்ததைப் பொறுக்காத நாயகி பூமியுள் தலை கீழாகப் பாய்ந்து விட்டதாக ஒரு கதை கூறுகிறார்கள். அம்மையின் பாத தரிசனம் ஒரு பலகணி வழியாகத்தான் கிடைக்கும். ஆவுடையார் கோயில் மாணிக்க வாசகரால் ஒரே நாளில் கட்டப் பெற்றதாக நம்புகிறார்கள். ஆனி, மார்கழி இக்கோயிலில் திருவிழா நடைபெறும். முன்பு மாதங்களில் தினமும் ஆறு காலம் ஆறு கலம் அரிசி சமைக்கப்படுவதினால் அரிசி கழுவும் நீர் பாய்ந்து நிலம் விளையும் என்பர். உமா பார்வதி அம்மனையே இங்கு ஆவுடையம்மனாக வழிபடு கின்றனர்.

இருநிதி (10)

சங்கநிதி, பதுமநிதி ஆகியவை இருநிதியாகும். இவை குபேரனிடம் உள்ளன. ஆகையினால் அவனை இருநிதிக் கிழவன் என்று கூறுவர். சங்கநிதி சங்கின் வடிவமானது. கேட்டதைத் தரும் ஆற்றலுடையது. பதுமநிதி தாமரையின் வடிவமானது. திருப்பாற் கடலில் தோன்றிய பல பொருள் களில் ஒன்று.

உடையாமகிபன் (10)

சின்னமகிபனின் தந்தையின் பெயர். திருவாடானைத் தாலுகா நாலுகோட்டைச் ஊர் அம்பலக்காரர்களை

இன்றும் உடையப்பதேவர் என்றே அழைக்கின்றனர். சிவகங்கை சீமையை ஏற்படுத்திய தொல் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக அவர்களைக் குறிப்பிடுகிறார்கள். உடையான் என்று ஓர் இனமும் தனியாக உள்ளது. ஆனால் அவர்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகத் தோன்றவில்லை.

**உம்பளம்** (32)

ஊருக்கு முதன்மையானவர், போருக்குப் படை பல மளித்தவர் ஆகியோருக்கு அரசர்கள் நிவந்தமாக வரியின்றி நிலங்கள் கொடுப்பது வழக்கம். அத்தகைய நிலங்களுக்கு உம்பளம் என்று பெயர். கோயில் விழாக்களில் உம்பளக்காரர்களுக்கு முதல் மரியாதை கொடுப்பது உண்டு.

**எழுவக்கோன்** (10)

எழுவக்கோன் சின்னமகிபனின் அதிகாரிகளில் ஒருவன். இவனை 'இருநிதி வளரு மெழுவக் கோன்' என்று கூறுவதினால் இவன் நிதிக் காப்பாளனாக இருக்கவேண்டும்.

**ஏகாந்தயோகம்** (11)

தனித்து தன்னையடக்கி யோகம் செய்வது ஏகாந்த யோகம் ஆகும். புலனடக்கம் மிக்கவர்களே இந்த யோகம் செய்ய வல்லவர். தெட்சணா மூர்த்தியின் யோகநிலை இம்முறையைச் சேர்ந்தது. குளுவனை ஏகாந்த யோக வல்லவன் என்று ஆசிரியர் கூறுவது அவனுடைய உயர்வைக் காட்டுவது ஆகும். இதிலிருந்து அவன் சாதாரண வேட்டைக்காரன் அல்லன் என்பது புலனுகும்.

**ஒத்தைக்கொம்பன்** (17)

விநாயகரை ஒற்றைக் கொம்பன் என்று கூறுவர். பாரதத்தை தன் ஒருபக்கக் கொம்பை முறித்து விநாயகக் கடவுள் இமய மலையில் எழுதியதாகக் கதை கூறும். அது முதல் அவர் ஒற்றைக் கொம்பன் ஆனார். அவரிடமிருந்து பாரதக் கதையைக் கேட்டு வியாசர் எழுதியதாகக் கூறுவர். 'ஒற்றை' என்பதைப் பேச்சு வழக்கையொட்டி 'ஒக்கை' என்று கூறுகிருர் குளுவ நாடக ஆசிரியர்.

**கர்ணன்** (1)

இவன் பாரதக் கதையில் ஒரு முக்கிய பாத்திரம். குந்தி தேவிக்குப் பாண்டவர் பிறப்பதற்கு முன் பிறந்தவன்.

சூரியனின் ஆற்றலால் தோன்றியவன். கொடைக்குப்பெயர் போனவன். ஆகையின் கொடையில் சிறந்தவர்களைக் கர்ணனுடன் கவிஞர்கள் ஒப்பிடுவது வழக்கம்.

**கரடிப் பெருமாள் (5)**

சிறுதெய்வங்களில் ஒன்று. காவல் தெய்வமாகக் கோயில் களில் வைக்கப் பெற்றிருக்கும் கரடியின் உருவுடையது. பாகவதத்திலும் இராமாயணத்திலும் வரும் 'ஜாம்பவான்' என்ற கரடி உருவினனான பாத்திரத்துடன் இந்தத் தெய்வத்தை ஒப்பிட்டுக்காண முயலலாம். சேலம் மாவட்டத்தில் கரடி உருத்தாங்கி நடத்தும் ஒருவகை நாட்டுப்புற ஆடலைத் தெய்வத் தொடர்புடன் நடத்துவர். அந்த ஆட்டத்துக்கும் இந்தக் கரடிப் பெருமாளுக்கும் உள்ள தொடர்பைச் சிந்திக்க முயலலாம்.

**கருப்பண்ணன் (5)**

கருப்பண்ண சாமியைப் பற்றி இந்தக் குளுவ நாடகம் மிகச் சிறப்பாகக் கூறுகிறது. கருப்பர் வணக்கம் இன்றும் இராம நாதபுரம் மாவட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இது ஐயனார் கோயிலில் காவல் தெய்வமாகவே உள்ளது. பெரிய மரங்களின் அடியில் கருப்பண்ணனுக்குத் தனியாக கோயில்கள் உள்ளன. உருவம் உள்ள இடங்களில் பெரிய மீசை, தலைப்பாகை, பயங்கர ஆயுதங்களுடன் காணப்படும். கதை முக்கிய ஆயுதம். இதனைக் குறுமாந்தடி என்று கூறுவர். ஆட்டுக் கடாவைப் பலி கொடுப்பர். கருப்பருக்குத் துணையான முன்னோடித் தெய்வங்கள் உண்டு. அவற்றிக்குக் கள், சாராயம் முதலியவற்றைப் படையல் செய்வர். கருப்பரின் துணைவியாரைப் பேச்சி யம்மன் என்று கூறுவர். அவளுக்குக் கோழி அறுத்து பூசை செய்வர். முட்டைகளைப் படையல் செய்வர். கோயில் இல்லாத இடங்களில் ஒரு மரத்தடியில் பீடம் அமைத்து திரிசூலம் ஒன்றை நட்டுப் பூசை செய்வர். கருப்பர் ஆவேச முற்றுத் திருவுளம் கூறும்போது பெரும்பாலும் ஐயனார் கோயிலில் உள்ள குதிரைகளின் மத்தியில் நின்றே கூறுவது வழக்கம். ராங்கியம் என்ற இடத்திலிருக்கும் கருப்பண்ணர் கோயில் மிகச் சிறப்புடையது. பூசனை செய்வோரை பண்டாரத்தார் அல்லது ஆண்டி என்று கூறுவர். இவரை ஒன்றேகால் பணத்துக்கு ஏவல் கேட்கும் சாமி என்று சொல்கிறார்கள். ராங்கியம் மிதிலைப் பட்டியை அடுத்து உள்ளது. கருப்பண்ணர் பலர் இருப்பதாகக்

கூறுவர். அவர்களில் முக்கியமானவர் சிறிய கருப்பர், பெரிய கருப்பர் சங்கிலி, சப்பாணி நொண்டி, செங்கிடா, சந்தணம், சுண்டக் காடு, பதினெட்டாம் படி, அந்தி, முத்து, சாமம், சந்தி, திருமேனி, சிங்கை, மூங்கில் திட்டி முதலியன. செங்கிடாக்காரன் என்ற ஒரு தெய்வம் குமரி மாவட்டத்தில் சிறப்பாக வணங்கப்படும். அதற்குச் செங்கிடா வெட்டிப் பலியிடுவர். அதற்கும் செங்கிடாக் கருப்பருக்கும் தொடர்பு உண்டா என்பதை அறிய முயல லாம். அங்குக் கருங்கிடாக்காரன் என்று ஒரு தெய்வமும் வணங்கப்படுகிறது. ராங்கியத்திலுள்ள கருப்பண்ணரைப் பற்றி யேகுளுவ நாடகம் குறிப்பிட்டிருக்கவேண்டும். அத்தெய்வம் மரத்தடியில் இருப்பதைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறது. ராங்கியம் கோயிலில் ஒரு பெரிய புளிய மரம் உள்ளது, அது 'உறங்காப் புளி' என்று மக்கள் மத்தியில் புகழ் பெற்றுள்ளது. அந்தக் கோயிலில் கருப்பண்ணர் மூலவராகவே உள்ளார். பெரும் பாலும் மற்ற இடங்களில் ஐயனாருக்குக் காவல் தெய்வ மாகவே உள்ளார்.

**கருப்ப துரந்தரன்** (10)

சின்ன மகிபனின் ஆட்சியில் கருப்ப துரந்தரன் ஒரு முக்கிய அதிகாரியாக உள்ளான். அவன் உட்படு கருமத் தலைவனாக இருத்தல் வேண்டும். வயிற்றுக்கு உணவு அளிப்பவனைத் கருப்ப துரந்தரன் என்றும் கூறலாம்.

**கலைக்கியானம்** (33)

மொத்தம் 44 கலைக்கியானம் உள்ளது. அவை அக்கிர இலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாக ரணம், நீதி சாஸ்திரம், சோதிட சாஸ்திரம், தருமசாஸ்திரம், யோக சாஸ்திரம், மந்திரம், சகுனம், சிற்பம், வைத்தியம், உருவம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தபிரமம். வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திர பரிச்சை. கனக பரிச்சை; இரதப் பரிச்சை, கஜபரிச்சை, அசுவபரிச்சை, இரத்தினபரிச்சை, பூபரிச்சை, சங்கிரம இலக்கணம், மல்யுத்தம், ஆகருஷணம், உச்சாடணம் வித்துவேஷணம், மதனசாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தர்வவாதம், பைபீலவாதம், கௌத்துக வாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாய பிரயோகம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம். அதிரிச்சயம், இந்திர ஜாலம், மகேந்திரஜாலம், அக்னித்தம்பம், ஜலஸ் தம்பம், வாயத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம்,

சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தை, பிரயோகம் ஆவன.

கன்னி மாமலை (9)

சின்ன மகிபனின் நாடான கோனாட்டிலுள்ள மலையாக இது பல இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளது. மிதிலைப் பட்டிக்குப் பக்கத்தில் பெரிய மலைகள் இல்லை. திருப்பத்தூர் தாலுகாவில் பிரான் மலை (பரம்புமலை) இருக்கிறது. அது நெடுந் தொலைவில் உள்ளது. ஆகையினால் அதைக் குறிப்பிடுவதாகக் கூற முடியவில்லை பக்கத்தில் கொன்னையூர் மலை இருக்கிறது. அது சிறிய குன்று. மிதிலையிலிருந்து சுமார் 10 கல் தொலைவில் உள்ளது. புதுக்கோட்டை செல்லும் சாலையில் இது காணப்படும். இதில் புகழ்பெற்ற மாரியம்மன் கோயில் உள்ளது. கொல்லையூர் மாரியம்மனுக்கு நடத்தப் பெறும் பூச்சொரி விழாவும், பொங்கல் விழாவும் புகழ்பெற்றவை. மக்கள் இந்த அம்மனை வணங்க அடிக்கடி வருவர். கொன்னை மலையே குளுவ நாடகம் குறிப்பிடும் கன்னிமா மலையாக இருத்தல் வேண்டும்.

காண்டீபன் (5)

அருச்சுனனைக் காண்டீபன் என்று குறிப்பிடுவர். அவனுடைய வில்லுக்கும் காண்டீபம் என்பது பெயர். முதலில் இது பிரமனிடம் இருந்தது. பின்னர் இந்திரனிடம் 64 ஆண்டும், வருணனிடம் 100 ஆண்டுகளும் இருந்தன. வருணன் அதனை அக்கினிக்குக் கொடுக்கிறான். அக்கினி காண்டவ வனத்தை அழிப்பதற்காக அருச்சுனனுக்குக் கொடுக்கிறான். அருச்சுனனிடம் காண்டீபம் 65 ஆண்டுகள் இருந்தது. இந்தக் குளுவ நாடகம் சின்ன மகிபன், மருது பாண்டியன் போன்றோரைக் காண்டீபனுடன் ஒப்பிடுகிறது.

காமரதி (10)

காதல் கடவுள் காமனாகிய மன்மதன். அவனுடைய மனைவி ரதி. காமன் விஷ்ணுவின் மகன். அவன் கையில் கரும்பு வில்லும் மலர் அம்புகளும் உண்டு. அவன் சிவனால் எரிக்கப்பட்டு உடலை இழந்து அனங்கன் ஆகிறான். மனிதனுக்குக் காதல் உணர்வை ஏற்படுத்தும் ஆற்றலுடையவன். உரோமப் புராணங்களில் காமக் கடவுளைக் 'குப்பிட்' (cupid) என்று கூறுவர். இவனுக்குக் கண்கள் இல்லை. இவனுடைய அம்புகள் மொட்டையாக மழுங்கியவை. 'காதலுக்குக் கண்ணில்லை' என்பதை இவனுடன் பொருத்திச் சிந்திக்கலாம். அழகுக்

கவர்ச்சியுடைய ஆண்களை மன்மதனுடன் ஒப்பிடுவது வழக்கம்.

காரியம்பலம் (10)

சின்ன மகிபனின் அதிகாரிகளில் ஒருவன். நீதி வழங்கி அமைதி காக்கும் அம்பலகாரனாக இருந்திருக்கலாம். இவனே தலைமை அதிகாரி.

காவடி (36)

இருபக்கமும் சுமை கட்டிச் சுமக்கப் பயன்படும் ஒரு தடிதான் காவடி. காவு தடியே காவடி ஆகியிருக்க வேண்டும். குளுவன் இவ்வாறு பறவைகளை ஒரு தடியில் இரண்டு பக்கமும் கட்டித் தொங்கவிட்டுத் தோளில் வைத்துச் சுமக்கவேண்டும் என்று கூறுகிறான். மலையின் மேலிருக்கும் முருகன் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் இவ்வாறே தங்களுடைய பொருள்களைச் சுமந்துகொண்டு சென்றிருக்கவேண்டும். ஒரு பக்கம் இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பொருள்களையும் மறுபக்கம் தங்களுக்கு வேண்டிய பொருள்களையும் கட்டித் தொங்க விட்டிருப்பர். சுமைத் தடியைத் தோளில் வைத்து அதனைக் கையால் பிடிக்காமல் மலையேற வசதியாக இருக்கும். கோயிலுக்குச் செல்வதினால் இறைவனை நினைத்துப் பாடியவாறு மலை ஏறியிருப்பர். அதனால் மலையேறும் அலுப்பையும் மறக்கலாம். இறையுணர்வையும் பெருக்கலாம். பாடலின் பயனாக ஆட்டம் வருவது இயல்பு. அதுவே ஆவேசமாக மாறியிருக்கும். அதன் பின் காவடியாட்டக் கலையாக வளர்ந்திருக்கலாம். தேவையும் வசதியும் கருதி முதலில் தொடங்கப் பட்ட ஒரு செயல் கால ஓட்டத்தில் பல மாற்றங்களும் ஏற்றங்களும் பெற்றுக் கலையாக வளர்ந்து உள்ளதாகக் கருதலாம். இன்று பல வகைக் காவடிகள் உள்ளன. மயில் காவடி, சந்தனக் காவடி, சர்ப்பக் காவடி, பால் காவடி என்று பலப்பல.

குடையாளம் (10)

அரசனின் தனி மரியாதைச் சின்னங்களாகப் பல உள்ளன. அவற்றில் குடை ஒன்று. குடையானது செங்குடை, பீலிக் குடை, பீலிக் குஞ்சக் குடை, பஞ்சவர்ணக் குடை என நான்கு வகைப்படும்.

குபேரன் (8)

குபேரன் விஞ்சையர் கின்னரர்க்கு அரசன். வடதிசைக்கு இறைவன். பொற்கண்ணை உடையவன். அழகைக்கு

அரசனாகவும் அரனுக்குத் தோழனாகவும் உள்ளவன். விசிரவசு முனிவருக்கு இளிபிளையிடம் உதித்தவன். இவன் செல்வத்துக்குத் தலைவன். இவனுடன் பணம் படைத்த வர்களை ஒப்பிடுவது வழக்கம்.

குருகுலம் (10)

இது சமண நூல்களில் கூறப்படும் 5 வகைக் குலங்களுள் ஒன்று. அவற்றுள் குருகுலமே மிகச் சிறந்தது. ஆகையினால் மன்னர்கள் தாஙகள் அக்குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவதில் பெருமையடைகிறார்கள்.

குழந்தை (1)

சின்ன மகிபனின் மூன்று மக்களில் ஒருவன். இரண்டாவது மகனாக இருக்க வேண்டும்.

குழந்தைஆசாரி (36)

இவன் ஒரு கொல்லன். இரும்புத் தொழிலில் வல்லவன். கருக்கரிவாள், வாங்கரிவாள், கூனரிவாள் ஆகியவற்றைச் செய்து தருபவன். அவனைக் குளுவன் மதித்துப் பேசுகிறான்.

குளந்தாபுரி (10)

கிவகங்கைக்கு இன்னொரு பெயர் குளந்தாபுரி, இதைப் பற்றிக் 'குளந்தைச் சசிவர்ணக் கோவை' என்ற ஒருநூல் உள்ளது.

கொக்குமுக்கூடு (10)

இது கொக்குகளை இலகுவில் பிடிக்க உதவும் ஒரு கருவி. மூன்று கம்புகளை ஒன்றாகக் கட்டி அதனுடன் கண்ணிகளை இணைத்திருக்கும். குளுவன் இதனைக் கொண்டு செல் கிறான்.

கோளலிங்கர் (1)

திருக்கோளக் குடியில் கோயில் கொண்டிருக்கும் நாதர், சிவனுக்கு இன்னொரு பெயர்.

கோனாடு (9)

சின்ன மகிபனின் நாடு. மிதிலைப் பட்டியைச் சுற்றியுள்ள இடம். சோனாட்டின் உட்பிரிவுகளில் ஒன்றாக இருந்தது என்று புறநானூற்றின் மூலம் அறியலாம் (புற. 54). எறிப்பீசர் மலைக்கு மேற்கு, மதிற்கரைக்குக் கிழக்கு, காவிரி

நதிக்குத் தெற்கு, பிரான் மலைக்கு வடக்கு உள்ள நாடு கோனாடு என்று கொங்கு மண்டல சதகம் கூறுகிறது. 'கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமானே' என்று கூறுவது திருப்புகழ் (பா. 350) இதில் விராலி மலை உட்படு கிறது. ஒரு காலத்தில் கோனாடு, சோணாடு, பெருவாசல் நாடு, பைங்காட்டு நாடு, குளமங்கல நாடு ஆகியவற்றிற்குச் சிவந்தெழுந்த பல்லவராயன் அரசனாக இருந்தான் என்று சிவந்தெழுந்த பல்லவராயன் உலா கூறுகிறது. கோனாடு வெள்ளாற்றுக்கு வடபாலுள்ள பகுதி என்ற குறிப்பும் உள்ளது. கானாட்டுக்கும் கோனாட்டுக்கும் உள்ள தொடர்பையும் சிந்திக்கலாம். கானாடு காத்தான் என்ற ஊருக்கும் கோனாட்டுக்கும் தொடர்பு இருப்பதாகத் தோன்றவில்லை.

**சங்கநிதி** (1)

சங்கின் வடிவமான நிதி. இது குபேரனிடம் உள்ளது. கேட்டதைத் தரும் ஆற்றலுடையது.

**சதானனன்** (8)

(i) சிவமூர்த்தி, ஈசானம், தத்புருஷம், வாமம், அகோரம், சத்யோசாதம் முதலிய திருமுகங்களுடன் இருந்த தேவர், ரிஷி முதலியோருக்கு வேத மாதியாக சிவ ஆகமங்களை அருளிச் செய்த மூர்த்தம் சதானனன் ஆகும்.

(ii) சுதந்திரமாகச் சமய வியாப்தியாய் விளங்கி மோட்சத்தை ஏதுவாக்கி நிற்கும் மூர்த்தி சதானனன்.

**சதுர்வேதம்** (41)

ரிக், எஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கும் வேதங்கள். 'சதுர்' என்றால் 'நான்கு' என்பது பொருள்.

**சப்தமேகம்** (10)

'சப்தம்' என்பது ஏழு. மேகங்கள் ஏழு. அவை சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம். காளமுகி, நீலவருணம் என்பன. இவை முறையே மணி, நீர் பொன், பூ, மண், கல், தீ ஆகியவற்றைச் சொரிவன.

**சிங்கடாகை** (6)

சிங்கம்புணரியையே சங்கடாகை என்று குளுவநாடகம், கூறுகிறது. இது ராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவில் உள்ளது. முன்பு சிவகங்கை சீமையுடன் இணைந்தது. பழனி வழிநடைப் பாடலில் புகழப்படுவது.

பிரான்மலை இதன் பக்கத்தில் உள்ளது. இங்கு சேவுகப் பெருமாள் கோயில் உள்ளது. இக்கோயிலில் சிவனும் பெருமாளும் வணங்கப்படுகின்றனர். மஞ்சு விரட்டுக்கு மாடுகளை வளர்க்கும் இடம். மஞ்சு விரட்டுக்காக மாடுகளைக் கேட்டு பலர் இங்கு வருவர். இதற்குப் 'பாக்கு வைத்தல்' என்று பெயர் (to give advance) மாடு ஒப்புக் கொள்வதுபோல் கொம்புகளை அசைத்தாலன்றி இவர்கள் அம்மாட்டுக்குப் பாக்கு வாங்க மாட்டார்கள். கொட்டாம்பட்டி இதன் பக்கத்திலுள்ள பெரிய ஊர்.

சிங்கை (19)

சிவகங்கையைச் சுருக்கமாகச் சிங்கை என்று கூறுவர்.

சிந்தாமணி (1)

பாற்கடலில் பிறந்த பொருள்களில் ஒன்று சிந்தாமணி. இது இந்திரனிடம் உள்ளது. நினைத்ததைத் தரும் ஆற்றல் வாய்ந்தது.

சிவயோகவல்லி (3)

மிதிலைப் பட்டியை அடுத்துள்ள சிவயோகபுரத்திலுள்ள கோயிலில் அமர்ந்துள்ள நாயகியைச் சிவயோகவல்லி என்று கூறுவர். அது ஒரு சிவன் கோயில். சிவயோகபுரம் ராங்கியத்துக்குப் பக்கத்தில் உள்ளது.

சுப்பன் (1)

சின்ன மகிபனின் மகன். இவன் அவனுடைய மூன்று மக்களில் மூத்தவனாக இருக்கவேண்டும். மூவரையும் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் இவன் முதலாவதாகக் குறிப்பிடப் படுகிறான். ஒரு இடத்தில் இவன் சுப்பிரமணியன் என்று கூறப்படுகிறான். சுப்பன் என்பது சுப்பிரமணியனின் சுருக்கமாக உள்ளது.

சுரபி (1)

(1) காசிபரின் மனைவி, தட்சனின் பெண். மேனகை முதலிய அப்சரசுகளையும் பசுக்களையும் எருமைகளையும் பெற்றவள் என்று கூறப்பெறுகிறது.

(2) சூரிய புத்திரிகளைச் 'சுரபி' என்பர்.

(3) சுரபி, பத்திரை, சுநந்தை, கமனசை, சுசீலை ஆகியவை ஐவகைப் பசுக்கள்.

(4) சுரபி நான்முகனால் படைக்கப்பட்ட பசு. இது மார்த் தாண்டன் என்பவனை மணந்து 11 உருத்திரர்களையும், புண்யை, மாயை, மதுச்சோதை, சிவை, சீக்கை, சரித்வரை, உறிரண்யவாணை, சுபகை, கவியை, பருக்நிருதாவதி, அங்காவதி, கருதவதி, ததிக்ஷீரபயோவதி, அமோகை, சுரசை, சதயை, ரேவதி, மாருதி, ரஸை, அஜை, ஸிகதை, சுத்த தூமை, அதாரணி, ஜீவை, பிராணவதி, தன்யை, சுத்தை, தேனு, தனாவஹை, சித்திரை, ருத்தி, சாந்தி, சாந்தமரபை, சரித்வரை ஆகிய 41 கோமாதர்களையும் பெற்றது.

(5) கிருஷ்ணன் தனக்குப் பால் குடிப்பதற்காகச் சுரபி என்ற பசுவை உண்டாக்கினான். ஸ்ரீதாமா அதன் பாலைக் கறந் தாள். பாலைக் கிருஷ்ணன் குடிக்கும்போது பாத்திரம் உடைந்து பால் சிதறியது. சிதறிய பாலானது சீரசரஸ் தடாகமாக உருவாகியது.

பூதாவின் மனைவியான சரூபாவுக்குச் சுரபி என்னும் பெயர் உண்டு. இவள் கோடி உருத்திரர்களைப் பெற்றவள்.

சேது மன்னன் (31)

இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள மறவர் நாட்டைச் சேதுபதிகள் ஆண்டனர். அவர்கள் சேது மன்னர் என்று அழைக்கப் பெற்றனர். சேது அணை இருக்கும் இராமேஸ் வரம் இந்த நாட்டில் உள்ளது. அதனைக் கொண்டு இம்மன்னர் இவ்வாறு அழைக்கப் பெற்றனர். சின்னமகிபன் காலத்தில் சேதுபதிகளின் நாடு சிதறுண்டு காணப் பெற்றது. இராமநாதபுரத்தை ஆண்ட மன்னரைச் சேது மன்னன் என்று குளுவ நாடகம் குறிப்பிடுகிறது.

சொக்கர் (13)

மதுரை கோயிலில் இருக்கும் இறைவனைச் சொக்க நாதர் என்று அழைப்பர். சொக்கர் என்றால் அழகன் என்று பொருள். பல மன்னர் தங்களுக்குச் சொக்கநாதன் என்று பெயர் சூட்டிக் கொண்டனர்.

சோடிச்சியம்மன் (19)

சோடிச்சியம்மன் கன்னித் தெய்வங்களில் ஒன்று. இவ்வாறு பல கன்னியரை மக்கள் வணங்குவது உண்டு.

திருமணிநதி (9)

சின்ன மகிபன் குளுவ நாடகம் திருமணி நதியைச் சிறப் பித்துக் கூறுகிறது. இதில் 'மணி' என்ற சொல் இருப்பதினால்

'மணிமுத்தாறு' நதியை நினைக்கத் தூண்டுகிறது. தமிழ் நாட்டில் திருநெல்வேலியில் ஒன்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒன்றும் தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலத்தை ஒட்டி ஒன்றுமாக மூன்று மணி முத்தாறுகள் உள்ளன. திருநெல்வேலி நதியை இந்தக் குளுவ நாடகம் பேச வேண்டிய தேவை இல்லை. இராமநாத புரத்தில் பாயும் மணி முத்தாறு தேவ கோட்டையின் பக்கத்தில் ஒரு காட்டாறாக உள்ளது. அது மிதிலைப் பட்டியிலிருந்து வெகுதூரத்தில் உள்ளது. ஆகையினால் இதுவாகவும் இருக்கமுடியாது. மிதிலைப் பட்டியை அடுத்து ஓடும் நதி வெள்ளாறுதான், பெரும்பாலும் குளுவ நாடகம் குறிப்பிடும் நதி இதுவாகத்தான் இருக்க முடியும். இதில் பெரும்பாலும் தண்ணீர் இப்பொழுது இருப்பதில்லை. இது புதுக்கோட்டைக்கும் ஆறாங்கல்லுக்கும்இடையில்செல்கிறது. நமண சமுத்திரம் ரயிலடி இதன் பக்கத்தில் உள்ளது. இந்த நதியில் பேரையூர் என்ற இடத்தில் மக்கள் புனிதத் தீர்த்த மாடச் செல்வது வழக்கம்.

**தெட்சணாமூர்த்தி (10)**

சிவமூர்த்தங்களில் ஒன்று. தெற்கு முகமாகக் கல்லால மரத் தடியில் குருநிலையில் அமர்ந்திருக்கும் தோற்றத்தை உடையது. இறைவன் ஞானகுருநாதனாக வந்து உயிர்களுக்கு அருள் செய்யும் தன்மையைக் குறிப்பிடுவது ஆகும்.

**தேனதி (9)**

தேனாறு செட்டி நாட்டுப் பகுதியில் செல்கிறது. மிகவும் சிறிய நதி. பெரும்பாலும் தண்ணீர் வருவதில்லை. தேவ கோட்டைக்கும் காரைக்குடிக்கும்இடையில் உள்ளது. இதில் ஐப்பசி மாதத்தில் மக்கள் புனித நீராடச் செல்வர். ஒன்றாம் நாள் நீராடுவதை முதல் முழுக்கு என்றும் முப்பதாம் நாள் ஆடுவதை கடை முழுக்கு என்றும் கூறுகிறார்கள்.

**நகுலன் (17)**

இவன் பாரதக் கதையில் வருபவன், பாண்டவர்களில் நாலாவதாவான். பாண்டுவின் மனைவியான மித்திரா தேவி யிடம் அசுவினி தேவரின் மகிமையால் பிறந்தவன். இவனுக் குத் திரௌபதியிடம் சதாநீகனும், இரேணுமதியிடம் நிர்மத் திரனும் பிறந்தனர். இவன் தன்னை அழகுள்ளவன் என்று செருக்குற்றதினால் தம்பியான சகாதேவனுக்கு முன் இறந் தான். குதிரை ஏற்றத்தில் வல்லவன். ஆகையினால் அத்

தன்மையுடையவர்களை இவனுடன் ஒப்பிடுவது வழக்கம். குளுவ நாடக ஆசிரியரும் அவ்வாறே அவனைப் பயன் படுத்துகிறார்.

**நதிரத்தினம் (10)**

நதிகளில் கிடைக்கும் இரத்தினக் கல் என்று பொருள்படும். ஆறுகளில் வைரக் கற்கள் கிடைக்கும் என்பது உண்மை.

'நாடெலாஞ் செந்நெல் விளையினும் நாட்டின்
நதியெலாம் நவமணி தரினும்...'

என்ற பழம் பாடலைக் காணலாம். வணங்குவதற்குரிய இரத்தினக் கல் என்றும் பொருள்படும்.

**நவமணி (12)**

ஒன்பது வகை இரத்தினங்களை நவமணிகள் என்று கூறுவர். அவை வயிரம், முத்து, பவழம், கோமேதகம், இந்திரநீலம், வைடூரியம், புட்பராகம், மரகதம், மாணிக்கம் ஆகும். வைரமே அனைத்திலும் சிறந்தது. நவரத்னங்களைச் சருக்கராபம், சிபிடம், தளாபம், வருத்துலம் என்று நான் காகவும் வகையிடுவர் சருக்கராபம் சுக்கான்கல் போன்றது. சிபிடம் அவல் போலிருக்கும். தளாபம் நீண்டவுருவுள்ளது. வருத்துலம் உருண்டை வடிவமானது.

**நானிலம் (9)**

நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நான் காகப் பிரிப்பதால் உலகத்துக்கு நானிலம் என்ற பெயர் உண்டு. பாலை என்பது முல்லையும் குறிஞ்சியும் தம் நிலை யில் திரிந்து ஏற்படுவதால் அதை இவற்றுடன் இணைப் பதில்லை. அதைத் தனி நிலமாகக் கருதவில்லை. ஒழுக்கங் கூறவே பாலையை ஐந்திணைப் பகுப்பில் ஏற்றனர்.

**நானாடு (9)**

நானிலத்தைப் போன்ற பகுப்பாகவே இதனைக் கொள்ள லாம். நால்நாடு என்பது, துரித்திக் கொண்டிருக்கும் இடம் என்று பொருள்படும்.நதிகள் வளைந்து சென்ற இடங்களிலும் கடல் வளைந்து செல்லும் இடங்களிலும் அமையும் நிலப் பகுதிகளை நால்நாடு என்று கூறலாம்.

**பங்கயவில் (1)**

தாமரை மலராகிய வில். இதில் மன்மதன் கையிலிருக்கும் கரும்பு வில்லிலிருந்து செலுத்தப்படும் மலர்க் கணைகளில் ஒன்று.

பசும்பொன் (10)

இது இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகாவில் உள்ள ஓர் ஊர். பல புலவர்கள் இங்கு தோன்றியதாகக் கூறுவர். மாங்குடி இதன் பக்கத்தில் உள்ளது. பசுமையான பொன் என்றும் பொருள்படும். குளுவ நாடக ஆசிரியர் முத்தாண்டிப் புலவருக்கு அடைமொழியாக வருகிறது.

பஞ்சகதி (10)

பஞ்சகதியை அசுவகதி என்றும் அழைப்பர். குதிரையின் நடை ஐந்து வகையுடையது. அவை, மல்லகதி, மயூர்கதி, வானரகதி, சகசதி, சரகதி என்பன. இவற்றைத் தௌரி தகம் ஆங்கிரந்திதம், வற்கிதம், இசேசிதம், புலுதம் என்றும் கூறுவர்.

பஞ்சலட்சணம் (10)

(1) கல்விமான்கள் பஞ்சலட்சணம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று கூறுவர். இவை எழுத்து சொல், பொருள் யாப்பு, அணி ஆகியவை ஆகும், இவற்றை ஐவகை இலக் கணம் என்றும் கூறுவர்.

(2) மாட்டுக்கும் ஐவகை லட்சணம் கூறுவர். அவை முகம், திமில், மடு, வால், கால் ஆகியவற்றின் சிறப்புக்கள் ஆகும்.

பதஞ்சொல்முனிவர் (16)

பதஞ்சலி முனிவரைக் குளுவ நாடகம் பதஞ்சொல் முனிவர் என்று குறிப்பிடுகிறது. இவர் அத்திரியின் மனைவியான அசகூயை என்பாரிடம் பிறந்தவர். இவரை ஆதிசேடலின் அவதாரம் என்று கூறுவர். தாருக வனத்தில் சிவமூர்த்தியின் ஆனந்த நடனத்தைக் கண்டு களித்தவர் விஷ்ணுமூர்த்தி. ஆனால் பதஞ்சலி முனிவரோ அந்த ஆனந்த தாண்டவத் தைச் சிதம்பரத்தில் கண்டு களிப்புற்றவர். அவருடன் வியாக்கிரபாதரும் கண்டார். பதஞ்சலி பாணினியின் சூத்தி ரங்களுக்குப் பாஷ்யம் எழுதினார். புஷ்யமித்ரசங்கன் காலத் துக்குச் சற்று பிந்தியவராக இருக்கலாம், மதுரையில் மீனாட் சியம்மனின் திருக்கல்யாணத்துக்குப் பின்புசிவ நடனம் கண்டு களிததவர் என்று திருவிளையாடல் புராணம் கூறும்.

பதினெண்சித்தர் (9)

சித்தர்கள் 18 பேர் என்று கூறுவர். அவர்கள் அகத்தியர் போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர்,

நந்தி, கூன்கண்ணர், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, சமலமுனி, இடைக்காடர், புண்ணாக்கீசர், சுந்தரானந்நர் உரோமரிஷி, பிரமமுனி, என்பர். இவர்கள் அல்லாமல் தன்வந்திரி, புலஸ்தியர், புகண்டர், கருவூரார், இராமதேவர், தேரையர், கபிலர் ஆகியோரையும் கூறுவர்.

சித்தர் ஒன்பதின்மர் என்று சித்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வெகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர் ஆகியோரைக் குறிப்பிடுவர்.

பரகுதுப்பட்டி (10)

இது மிதிலைப்பட்டிக்கு அடுத்துள்ள ஒரு சிற்றூர். திருபத்தூர் தாலுகாவைச் (இராமநாத மாவட்டம்) சேர்ந்தது. மிதிலைப் பட்டிக்கும் கீரணிப் பட்டிக்கும் இடையில் இருப்பதாகக் கூறப் படுகிறது. குளுவ நாடக ஆசிரியர் முத்தாண்டிப் புலவர் இவ்வூரைச்சேர்ந்தவர்.

பாம்பாட்டி (10)

சின்ன மகிபனின் ஆட்சியிலிருந்த அதிகாரப் பதவிகளில் ஒன்றாகும். காலமறிந்து கூறும் பணியாக இருக்க வேண்டும் இவர்களைக் காலக் கணிகர் என்று கூறலாம். பரமக்குடித் தாலுகாவில் அக்கிரமேசி என்ற ஊரில் இன்றும் பாம்பாட்டிப் பரம்பரையினர் வாழ்கின்றனர்.

புராணம் (38)

பரம்பரை பரம்பரையாக வந்த இறைத் தொடர்பான பழங் கதைகளைப் புராணம் என்று கூறுவர். இதைத் 'தொன்மம்' என்று தமிழாக்கம் செய்யலாம். சிவபெருமான் புராணங் களை நந்திமா தேவரிடம் கூறுகிறார். அவர் சநற்குமார முனிவருக்கு உபதேசிக்கிறார். வியாசர் சூதருக்கு அறிவிக் கிறார். இவ்வாறு வழிவழியாக புராணங்கள் உலக சந்ததி யினருக்குப் புகட்டப் படுகின்றன.

புராணங்கள் 18 வகைப்படும். அவை சைவம், பாஷ்யம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீபம், விஷ்ணு, பாகவதம், பிரமம், பதுமம், ஆக்னேயம், பிரமகைவர்த்தம் என்பன.

இவையன்றி உபபுராணங்கள் 18 உள்ளன. இவை சிவ புராணங்கள். மேலும் 10 புராணங்கள் இரண்டு லட்சத்து

